
Registered as a News Paper
பக்கம் - 24
www.eezhanatham.com

# ஈழநாதம்

விலை: 16.00
வெள்ளிநாதம் Weekly

நாதம் - 16 | வெள்ளி - 20 | 08 - 14 - யூலை - 2005





## சேது சமுத்திரத்திட்டம் கடற்புலிகளுக்கு எதிரானதா?




## கரும்புலிகள் நாளில்...

# உறங்கும் அரக்கன்... கண்ணிவெடி நடவடிக்கை வாரம்




இப்போது நீங்கள் வன்னிப் பெருநிலப்பரப்பு எங்கும் "கண்ணி வெடி நடவடிக்கை வாரம்" என்கின்ற பனர்களை ஆங்காங்கே கண்டு கொண்டிருக்கின்றீர்கள். இம்மாதம் நான்காம் திகதி முதல் பத்தாம் திகதி வரை இந்த நடவடிக்கை வாரம் கடைப்பிடிக்கப்படுகின்றது. இதன் நோக்கம் கண்ணி வெடி தொடர்பாக அனைவருக்கும் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதே.

இந்த வகையில் வன்னிப் பெருநிலப்பரப்பில் கண்ணிவெடிகளை அகற்றுவதில் பெரும் பங்காற்றி வரும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஒருங்கிணைப்பின் கீழ் இயங்குகின்ற மனித நேய கண்ணி வெடி அகற்றும் பிரிவினரின் (HDU) செயற்பாடு எமது பிரதேசத்தினை பொறுத்தவரை மகத்தானதும் மறக்க முடியாததும் ஆகும்.

இப்பத்தியை வாசித்துக் கொண்டிருக்கும் இத்தருணத்திலும் பல நூற்றுக்கணக்கான கண்ணிவெடிகள் எமது பிரதேசத்தில் இனம் காணப்படுவதோடு அப்புறப்படுத்தப்படுகிறது.

இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு பின் கைவிடப்பட்ட அல்லது மீட்கப்பட்ட பிரதேசங்களில் எமது வருகைக்காக காலுக்குக் கீழே காத்திருக்கிறது இந்த கண்ணிவெடிகள். எனவே அவ்வாறான பிரதேசங்களுக்கு சென்றுவிடாதீர்கள். சென்றால் செல்லாக்காசாக உங்கள் வாழ்க்கை மாறிவிடும். இதற்காகத்தான் மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவு மக்களிடம் வேண்டி நிற்பது என்னவெனில் தங்கள்ால் அவ்வாறான பிரதேசங்கள் இனம் காணப்பட்டு அவற்றை ஏனைய பிரதேசங்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காக அமைக்கப்படுகின்ற அறிவுறுத்தல் பலகைகள் எச்சரிக்கை குறியீடுகள் மற்றும் அவை சார்ந்த பொருட்களை அகற்றுவதோ அல்லது எடுத்து வேறு தேவைகளுக்கு பயன்படுத்துவதனையோ நிறுத்திக் கொள்ளுமாறு, நாமும் அதனையே உங்களிடமும் கேட்கின்றோம். தவிர்த்துக்கொள்ளுங்கள் இல்லையேல் ஆபத்து உங்களுக்கே!

இந்த வகையில் இராணுவத்தால் கைவிடப்பட்ட பிரதேசங்களை துப்புரவு செய்து எமது மக்களை மீள குடியேற்றுவதற்காக 1999 ஆம் ஆண்டு மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் உருவாக்கப்பட்டது. பின்னர் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்பு நான்கு வெளிநாட்டு நிறுவனங்கள் இணைந்து கொண்டன. அதாவது,

* நோர்வே மக்களின் உதவி (N.P.A)
* டென்மார்க் கண்ணிவெடி அகற்றும் பிரிவு (D.D.G)
* கண்ணிவெடி அகற்றும் ஆலோசனைக் குழு (M.A.G)
* சுவிஸ் நாட்டு கண்ணிவெடி அகற்றும் பிரிவு (F.S.G)

போன்ற நான்கு அமைப்புக்கள் மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரோடு சேர்ந்து இயங்குகின்றன.

ஆரம்பத்தில் 200 பணியாளர்களுடன் சேவையை ஆரம்பித்த நிறுவனம் பின் 800 பணியாளர்களை உள்வாங்கிக் கொண்டது. இதில் 600 பேர் கண்ணிவெடி அகற்றுபவர்கள். இதில் 36 பெண்களாவர், பெரும்பாலும் மனிதவலுவைப் பயன்படுத்தி பல இடர்களுக்கு மத்தியில் தமது அளப்பரிய இச்சேவையினை மேற்கொண்டு வருகின்றனர்.

இதுவரைக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் 42620070 சதுர மீற்றர் பரப்பளவில் 103194 கண்ணிவெடிகளும், 126 வாகன கண்ணிவெடிகளும், 89778 வெடிக்காத வெடிப்பொருட்களும் மனித நேய கண்ணி வெடி அகற்றும் பிரிவினரால் அகற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவுப் பிரதேசங்களில் இவ்வாறு அகற்றப்பட்டிருந்தாலும் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு பின்னர் விட்டுச்சென்ற பல்வேறு பிரதேசங்கள் துப்புரவு செய்யப்படாமலும் இருக்கின்றன. இதில் தற்போதைய மக்களின் குடியேற்றங்களும் எதிர்காலத்தில் குடியேற்றங்களாக மாறப்போகின்ற இடங்களும் 40திற்கும் மேற்பட்ட குளங்களும் அடங்குவதாகக் கூறுகின்றார் மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் நடவடிக்கை அலுவலக முகாமையாளர் திரு.ச.உதயன் அவர்கள். தொடர்ந்து அவர் கூறுகையில், எமது பிரதேசத்தில்

பாகிஸ்தான் கண்ணிவெடி(P4MK1)
சீனக் கண்ணிவெடி(TYP 72 )
பெல்ஜியம் கண்ணிவெடி (VS 50)
இத்தாலிய கண்ணிவெடி (NR 409)
ஜொனி கண்ணி வெடி (தமிழீழம்)
சீனக் கண்ணி வெடி (TYP 69)
கிளைமோர்
வாகனக் கண்ணிவெடிகள்

போன்ற வெடிபொருட்கள் காணப்படுவதாகவும் ஆரம்ப காலத்தில் தாங்கள் பாதுகாப்பு அங்கிகள் தொழில்நுட்ப வசதிகள் இன்றி தங்களால் கண்டுபிடிக்கப்பட்ட "கெவிரேக்" (குப்பை வாரி போன்ற இரண்டு முற்களுடன் காணப்படும் உபகரணம்) மூலம் திறம்பட கண்ணிவெடி அகற்றி வந்ததாகவும் 2002 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்கு பின் சர்வதேச நிறுவனங்களின் உதவி கிடைத்திருப்பினும் போதியளவு நவீன தொழில்நுட்ப வசதிகள் இல்லாமல் இருப்பதாகவும் அதி நவீன தொழில்நுட்ப வசதிகளை பெற்றுக்கொள்வதற்கு பெரும் நிதி வசதிகள் கிடைக்காமையாலும் சாதாரண தொழில்நுட்ப இயந்திரங்களை பெற்று இங்கு கொண்டு வருவதற்கு இராணுவத் தடைகள், கெடுபிடிகள் இருப்பதாலும் தொழில்நுட்ப வசதிகளை எம்மால் முழுமையாக பின்பற்ற முயவதில்லை. அத்தோடு ஒரு சில கண்ணிவெடி அகற்றும் இயந்திரங்களை எமது பிரதேசங்களில் பயன்படுத்த முடியாது. ஏனெனில் கடந்த பல ஆண்டுகளாக யுத்தம் இடம் பெற்ற பகுதி என்பதால் அதிகளவான இரும்புத் துண்டுகள் சிதறிக் காணப்படுகின்றன. இதனால் குறிப்பிட்ட இயந்திரங்கள் எல்லா இடங்களிலும் கண்ணிவெடி இருப்பதற்கான சமிக்ஞையை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கும். இதனால் தங்களின் "ரேக்" உபகரணம் மூலம் அகற்றப்படுவது நம்பகமாக இருக்கின்றது என்கிறார்.




முக்கியமாக தங்களால் கண்டு பிடிக்கப்பட்ட ரேக் உபகரணம் இன்று சர்வதேச ரீதியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. குறிப்பாக பல ஆபிரிக்க நாடுகளிலும், சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் இப்போது முழுமையாக இந்த உபகரணத்தையே பயன்படுத்துகின்றனர்.

ஆனால் குறிப்பிடப்பட வேண்டிய விடயம் என்னவெனில் எம்மவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட இவ் உபகரணம் வெளிநாட்டவர்களால் எடுத்துச் செல்லப்பட்டு RAKE என எம்மவர்களால் சூட்டப்பட்ட பெயரினை நீக்கி அவர்கள் REDS என மாற்றியுள்ளனர்.



சர்வதேச அளவில் நல்ல வரவேற்பை பெற்றுள்ள இந்த உபகரணத்தினை மேலும் பல நாடுகளில் அறிமுகப்படுத்தப்போவதாக இலங்கைக்கான கண்ணிவெடி அகற்றும் பிரிவின் திட்டமிடல் அதிகாரி ஒப்ரிசுதர்லான்ட் கூறுகிறார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல நவீன உபகரணங்களோடு ஒப்பிட்டு வேலை செய்யக் கூடிய அளவில் நம்பகத்தன்மை வாய்ந்ததாகவும் சர்வதேச கண்ணி வெடி அகற்றும் நியமத்திற்கு அமைய இதன் மூலம் வேலை செய்ய முடியும் எனவும் தங்களுக்கு இதனால் நல்ல திருப்தி ஏற்பட்டுள்ளதாகவும் வன்னியைப் பொறுத்த வரை கண்ணிவெடி அகற்றுபவர்கள் திறமையானவர்களாக எந்த விடயத்தினையும் ஒருமுறை கூறினாலே உடனே கிரகித்து செயற்படக்கூடியவர்கள் என்றும் ஒழுக்கத்திலும் சரி, ஏனைய விடயங்களிலும் சரி இவர்களின் பால் தனக்கு மகிழ்ச்சியே ஏற்படுவதாகவும் சுதர்லான்ட் குறிப்பிடுகிறார்.

எனவே எமது தாயகத்தின் பெரும் பகுதி இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட பகுதிகளே. இங்கெல்லாம் இலட்சக் கணக்கான கண்ணிவெடிகள், வெடிக்காத வெடிபொருட்கள் என்பன காணப்படுகின்றன.

| காலம் | பரப்பளவு | மிதிவெடிகள் | வாகன மிதிவெடி | வெடிக்காத வெடிபொருட்கள |
|---|---|---|---|---|
| 1999-2002 யூலை | 40580264 | 82000 | 86 | 62542 |
| 2002-ஆகஸ்ட்-டிசம்பர் | 123920 | 4321 | 4 | 223 |
| 2003 சனவரி-டிசம்பர் | 828205 | 6801 | 11 | 17021 |
| 2004 சனவரி-டிசம்பர் | 1087681 | 10072 | 25 | 9992 |
| 2005 சனவரி-யூன் | 500227 | 3134 | 01 | 1513 |

இதனால் இப்பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் இது தொடர்பில் அதிக கவனமாக நடந்துகொள்ளவேண்டும். இவ்வாறான பாதுகாப்பற்ற பிரதேசங்களில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் மேற்கொள்ளப்படுகின்ற அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்துகொள்வதோடு, பாதுகாப்பற்ற பிரதேசங்களில் காணப்படும் வெடிபொருட்கள் தொடர்பாக மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு வேண்டப்படுகின்றனர்.


அந்தவகையில் தங்களது அளப்பரிய சேவையினை இத்தேசத்திற்காகச் செய்துவரும் மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் பணி பாராட்டத்தக்கதும் மகத்தானதுமாகும்.

-சுழியன்-





# சேதுசமுத்திரக் கால்வாய்த்திட்டம் கடற்புலிகளுக்கு எதிரானதா?



விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்குமிடையில் பொதுக்கட்டமைப்பு ஒன்றுக்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு சரியாக எட்டாவது நாளில் தூத்துக்குடியில் வைத்து சேதுசமுத்திரக் கால்வாய்த்திட்டம் உத்தியோக பூர்வமாக தொடக்கிவைக்கப்பட்டது.

இத்திட்டம் தொடர்பாக பலவிதமான வாதப் பிரதிவாதங்களும் உண்டு. அவற்றுள் பெரும்பாலானவை ஒன்றில் பொருளாதார மற்றும் வர்த்தக நோக்குநிலையிலானவை அல்லது சூழலியல் நோக்குநிலையிலானவை. ஆனால் இவை இரண்டுமல்லாத வேறு இரண்டு நோக்குநிலைகள் உண்டு. அவையாவன... முதலாவது தமிழீழ நோக்குநிலை, இரண்டாவது, இந்தியப் பேரரசு நோக்குநிலை அல்லது இந்தியாவின் பாதுகாப்பு நோக்குநிலை. பொருளாதார மற்றும் சூழலியல் நோக்குநிலைகளின் மீதான வாதப்பிரதிவாதங்களின் ஆரவாரத்துள் பின்தள்ளப்பட்டுவிட்ட அல்லது போதியளவு உற்றுக்கவனிக்கப்படாத இந்த இரண்டு நோக்குநிலைகளின் மீதும் இன்று இப்பத்தி தனது கவனத்தைக் குவிக்கிறது.

இந்த இரண்டு நோக்குநிலைகளுமே ஒன்று மற்றதுடன் தவிர்க்க முடியாதபடி சம்பந்தப்படுகின்றன. சேதுசமுத்திரத்தின் ஒருபுறம் இந்தியக்கரைகள் அமைந்திருக்கின்றன. மறுபுறம் கணிசமான அளவுக்கு தமிழீழக் கரைகள் காணப்படுகின்றன. எனவே பாதுகாப்பு என்ற நோக்குநிலையிலிருந்து பார்க்கும் போது இந்த இரண்டு தரப்புமே அதிகம் சம்பந்தப் படப்போகின்றன.

இந்நிலையில் இருதரப்பு நோக்குநிலைகளும் எதிர் எதிர் நிலையில் காணப்படுகின்றனவா? என்பதே இப்போதுள்ள முக்கியமான கேள்வி. சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்டம் தொடக்கிவைக்கப்பட்ட காலகட்டம் அதற்குப் பின்னால் இருக்கக் கூடிய வெளியில் சொல்லப்படாத உள்நோக்கங்கள் போன்றவற்றின் பின்னணியில் மேற்படி கேள்வி மேலும் ஆழமானதாக மாறுகின்றது.

இத்திட்டத்தை முன்வைத்து இந்தியா கூறும் நியாயங்களில் பெரும்பாலானவை பொருளாதார மற்றும் வர்த்தக நோக்குநிலைகளின் பாற்பட்டவை. ஆனால் போக்குவரத்தியலாளர்கள் இந்த நியாயங்களை மறுத்துக்கூறியிருக்கிறார்கள். பொருளாதார மற்றும் வர்த்தக நோக்குநிலைகளில் சொல்லப்படும் அளவிற்கு இத்திட்டம் லாபகரமானது அல்ல என்றும் அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

"சேதுசமுத்திரம்-ஏன் கட்டப்படுகிறது" என்ற தலைப்பில் அண்மையில் கொழும்பில் நிகழ்ந்த ஒரு கருத்தரங்கில் போக்குவரத்தியலாளரான றோகான் ஜே.அபேவிக்கிரம என்பவர் உரையாற்றினார். அதில் அவர் பின்வரும் விசயங்களைச் சுட்டிக்காட்டினார்...

இந்தியாவின் தேசிய சூழலியற் பொறியியல் ஆய்வு நிறுவனமான நீரி (Neeri) யின் முன்னாய்வுத் தகவல்களின்படி சேதுசமுத்திரத்திற்கு ஊடாக நாளொன்றுக்கு 6 அல்லது 7 கப்பல்களே போய்வரும். அதேசமயம் சுயஸ் கால்வாய் ஊடாக நாள் ஒன்றுக்கு கிட்டத்தட்ட 47கப்பல்களும் பனாமாக்கால்வாய் ஊடாக 40 கப்பல்களும் கீல் கால்வாய் ஊடாக 114 கப்பல்களும் போய்வருகின்றன.

நீரியின் சாத்தியக்கூறு அறிக்கையின்படி சேதுசமுத்திரத்திற்கூடாக செய்யப்படும் கப்பற்போக்குவரத்துக்களால் 300 கடல்மைல்களை மிச்சம் பிடிக்கலாம் என்று கூறப்படுகின்றது. இது 25 மணித்தியால கடல்பயணத்துக்குச் சமன். இதில் முகாமைத்துவத்துக்கான நேரமும் மற்றும் பயணத்தின்போது அவ்வப்போது வேகம் குறைக்கப்படுவதால் வரக்கூடிய தாமதங்களும் கவனத்தில் கொள்ளப்படவில்லை. இவையெல்லாம் கவனத்தில் கொள்ளப்பட்டால் மெய்யாகச் சேமிக்கப்படப்போகும் நேரம் சுமார் 12 மணித்தியாலங்களே. ஆனால் பனாமாக்கால்வாய் ஊடாகச் செய்யப்படும் கப்பற்போக்குவரத்துக்களால் 20.5நாட்களும் சுயெஸ் கால்வாய் மூலம் 30.5நாட்களும் கீல் கால்வாய் ஊடாக சுமாராக 20-25 மணி நேரங்களும் சேமிக்கப்படுவதாக றோகான் அபேவிக்கிரம கூறுகின்றார்.

**நிலாந்தன்**

இந்தக் கால்வாயின் ஆழ அகலங்களின்படி பிரதான கிழக்கு-மேற்குப் பாதையில் பயணம் செய்யும் பெரிய கப்பல்கள் இந்தப்பாதையைப் பயன்படுத்தமுடியாது என்றும் அவர் கூறுகின்றார். இதனால் அதிகம் நன்மையடையப்போவது இந்தியாவின் கிழக்குக்கரையிலிருந்து கொழும்பு நோக்கிவரும் கப்பல்களே என்றும் சேதுசமுத்திரத்துக்கூடாக வருவதால் இந்தப் பயணத்தின் தூரம 70 கடல்மைல்களால் குறைக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

இந்த வழியூடாக ஒவ்வொரு முறையும் பயணம்செய்வதற்கு தரப்படவேண்டிய கட்டணம் பத்தாயிரம் அமெரிக்க டொலர்கள் என்று நீரி மதிப்பிடுகிறது. ஆனால் இந்தப் பயணத்தால் ஒரு பெரிய கப்பல் மிச்சம் பிடிக்கக்கூடிய தொகை இந்தத் தொகைக்குக் கிட்டவாகக் காணப்படுகிறது என்பதையும் அபேவிக்கிரம சுட்டிக்காட்டுகின்றார்.

இத்திட்டத்தின் பிரகாரம் கடல் தொடர்ச்சியாக தூர்வாரப்படுவதால் அது தூத்துக்குடி துறைமுகத்துக்குச் செல்லும் வழியை ஆழமாக்கும் என்றும், இதனால் தூத்துக்குடி துறைமுகமானது பெரிய கப்பல்கள் வந்துபோகக்கூடிய ஒரு வளர்ச்சியைப் பெறும் என்றும் இது ஒன்றுதான் இத்திட்டத்தில் உள்ள பெரிய வர்த்தக அனுகூலம் என்றும் அபேவிக்கிரம மேலும் கூறுகின்றார்.

ஆனால் சூழலியலாளர்களால் கடுமையாக விமர்சிக்கப்பட்டுவரும் அம்சமும் இதுவே. அதாவது கடலைத தூர்வாரும்போது அதனால் கடலின் இயற்கைச்சமநிலை குலையும் என்று அவர்கள் வாதிடுகிறார்கள். அதிலும் குறிப்பாக அண்மைய சுனாமி அழிவுகளின் பின்னணியில் இதுகுறித்து தீவிரமாக சிந்திக்கப்படவேண்டும் என்றுமவர்கள் கூறுகிறார்கள்.

அதாவது இருப்பதுவும் ஒரே ஒரு வர்த்தக அனுகூலந்தான் என்று கூறப்படுகிறது. அதுவும் கூட சூழலியல் நோக்குநிலையில் ஆபத்தானது.

ஆயின் எதற்காக இந்தியா அவசரப்பட்டு இத்திட்டத்தை அமுல் படுத்துகிறது? பொருளாதார மற்றும் வர்த்தகக் காரணங்கள் அல்லாத வேறு ஏதும் உள்நோக்கங்கள் இதில் உண்டா? இத்திட்டத்திற்கு எதிராக முறைப்பாடுசெய்த கரையோரச் செயற்பாட்டு வலையமைப்பு (Can) என்ற அமைப்பின் மனுமீதான தீர்ப்பில் சென்னை உயர் நீதிமன்றம் கூறியது... "தேசிய நலனைக்கொண்ட ஒரு திட்டத்தை மனுதாரர் தடுக்க முயல்வ"தாக இதில் சொல்லப்படும் தேசிய நலன் எது?

இக்கேள்விகளுக்கு விடைகாண்பதாயிருந்தால் நாம் இப்பத்தியின் ஆரம்பத்தில் சுட்டிக்காட்டப்பட்ட அதிகம் கவனிக்கப்படாத இரண்டு நோக்குநிலைகளில் இரண்டாவதை சிறிது விரிவாகப்பார்க்கவேண்டியிருக்கும். எனவே அதை இனிப்பார்ப்போம்.

இத்திட்டம் குறித்து தமிழீழ நோக்குநிலையிலிருந்து இதுவரையிலும் குறிப்பிடத்தக்க ஆய்வு முடிவுகள் பெரியளவில் வெளிவரவில்லை. இதுதொடர்பாக வெளிவந்த பெரும்பாலான கட்டுரைகள் இலங்கை மைய நோக்குநிலையிலிருந்து அல்லது கொழும்பு மைய நோக்கு நிலையிலிருந்து எழுதப்பட்டவைதான். தமிழீழ நோக்குநிலையிலிருந்து தமிழீழத் துறைமுகங்கள் மற்றும் தமிழர்களின் கடலின்மீது தமிழர்களுக்குள்ள இறையாண்மை போன்ற விசயங்களை முதன்மைப்படுத்தி வெளிவந்த கட்டுரைகள் அல்லது ஆய்வு முடிவுகள் போதாது என்றே சொல்ல வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் இருந்துவரும் உதயன் பத்திரிகையில் பாலசுந்தரம் பிள்ளை எழுதிய கட்டுரையில் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு இத்திட்டத்தால் வரக்கூடிய நன்மைகளைப் பற்றி எழுதியிருந்தார். எனினும் சேதுசமுத்திரக்கால்வாயின் கணிசமான பகுதி தமிழீழக்கடல் எல்லைகளுக்கூடாகவே செல்கிறது என்பதன் அடிப்படையில் தமிழீழத்தின் பாதுகாப்பு, பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் சூழலியல் நோக்குநிலைகளிலிருந்து இதுவரை வெளிவந்த ஆய்வுமுடிவுகள் அல்லது கட்டுரைகள் ஒப்பீட்டளவில் போதாது என்பதை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும்.

சேதுசமுத்திரக்கால்வாய் ஆனது தமிழீழ நோக்குநிலையில் காங்கேசன்துறையின் எழுச்சியாகவும், ஏனைய சிறுதுறைமுகப் பட்டினங்களின் எழுச்சியாகவும் அமையக்கூடும்தான். இது பொருளாதார மற்றும் வர்த்தகத்துறைகளைப் பொறுத்தவரை சில சிறிலங்கா துறைமுகங்களை பின்னுக்குத்தள்ளவும் கூடும்தான். ஆனால் காங்கேசன் துறையின் எழுச்சிக்குக் கொடுக்கப்படும் பலியாக கச்சதீவு மாறக்கூடும் என்பதை சூழலியலாளர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். சேதுசமுத்திரம் ஆழமாக்கப்பட்டால் கடல் அடிமண் தூர்ந்துபோய் காலக்கிரமத்தில் கச்சதீவு கடலில் கரைந்துபோய்விடக் கூடும் என்றும் அவர்கள் எச்சரிக்கிறார்கள்.

அவர்களுடைய எச்சரிக்கை நியாயமானதாகவும் இருக்கலாம். அதேசமயம் தமிழர்களின் பண்டைய வரலாற்றில் காணப்பட்டதுபோல மறுபடியும் சில தமிழ் துறைமுகப் பட்டினங்களின் எழுச்சி இதிலிருந்து தொடங்கவும் கூடும். ஆனால் எதிர்காலத்தைக் குறித்த இந்தக் கற்பனைகள் யாவும் தமிழீழம் என்ற ஒரு தனி அரசோ அல்லது அதையொத்த ஒரு சுயாட்சிக் கட்டமைப்போ உருவாகியபின்பே சாத்தியப்படலாம்.

மாறாக தமிழீழ விடுதலைப் போராட்டம் முடிவுறாத இச்சூழலில் அதுவும் இந்தியா புலிகளுடன் எத்தகைய ஒரு இணக்கத்திற்கும் வரப்பின்னடிக்கும் ஒரு சூழலில் எல்லாவற்றையும்விட முக்கியமாக தமிழீழ விடுதலைப்போராட்டத்தை மேற்குநாடுகள் தத்தெடுத்துவிடுமோ என்று ஒரு அச்சம் புதுடில்லியில் உள்ள சில கொள்கை வகுப்பாளர் மத்தியில் உருவாகிவரும் ஒரு சூழலில் இத்திட்டமானது போரியல் அர்த்தத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு பாதகமானதாக மாறக்கூடிய நிலைமைகளே அதிகம் காணப்படுகின்றன.

இத்திட்டத்தின் மிகப்பெரிய ஆதாயங்கள் என்றுகூறி தூத்துக்குடி துறைமுக நிதியம் என்ற அமைப்பு வெளியிட்ட ஒரு விளம்பரத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருப்பதை முன்பொருமுறை சிவராம் டெய்லி மிரரில் சுட்டிக்காட்டியிருக்கிறார்... இது "தேசியப்பாதுகாப்பு மற்றும் உத்தரவாத நோக்குநிலைகளில் விலைமதிப்பற்ற ஒருசொத்து. இதனால் இலகுவாகவும் விரைவாகவும் கரைகளை அடையமுடியும்"...

ஆயின் அவர்கள் இலகுவாகவும் விரைவாகவும் வந்துசேரத்துடிக்கும் கரைகள் எவை? தற்சமயம் கடற்புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் கரைகளா?

இக்கேள்வி தவிர்க்கமுடியாததே. ஏனெனில் பொருளாதார மற்றும் வர்த்தக நோக்குநிலைகளில் இது இந்தியாவுக்கு லாபமானது அல்ல என்று போக்குவரத்தியலாளர்கள் சுட்டிக்காட்டியிருக்கும் ஒரு பின்னணியில் இந்தியா அவசரப்படுவதற்கு வேறு ஏதோ ஒரு காரணம் இருக்கவேண்டும். புரிந்துணர்வு உடன்படிக்கையின்போதும் அதன் பின் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைப்பற்றிய பரிந்துரைகளின்போதும் அதன்பின் சுனாமிப் பொதுக்கட்டமைப்பின்போதும் கடற்புலிகளின் பிரசன்னத்தை அங்கீகரிக்க இந்தியா தயாராக இருக்கவில்லை என்று ஒரு உத்தியோகப் பற்றற்ற தகவல் உண்டு. இந்தப் பிராந்தியத்தில் மூன்றாவது கடற்படை ஒன்றின் எழுச்சிகுறித்து இந்தியா அசௌகரியம் அடைந்திருப்பது மிகவும் வெளிப்படையானது.

இந்நிலையில் சுனாமிப் பொதுக் கட்டமைப்பு கைச்சாத்தாகியுள்ளது. இது விசயத்தில் இந்தியாவை எதிர்ப்புக்காட்டாதிருக்கச்செய்வதில் மேற்குநாடுகள் குறிப்பிடத்தக்களவு வெற்றிபெற்றிருப்பதாக எடுத்துக் கொள்ளமுடியும்.

ஆனால் ஒருபுறம் இந்தியா பொதுக்கட்டமைப்பை வெளிப்படையாக எதிர்க்கவில்லை. அதேசமயம் தமிழீழ கடற்கரைகளை இலகுவாயும் விரைவாயும் வந்தடையும் விதத்தில் சேதுசமுத்திரத்தை ஆழமாக்கும் திட்டத்தை பொதுக்கட்டமைப்புக் கைச்சாத்தாகி சரியாக எட்டே நாட்களில் தொடக்கியிருக்கிறது.

இதற்குச் சில நாட்களுக்கு முன்பு பிரித்தானியா தனது ர·பல்கர் கடல் வெற்றியின் இருநூறாவது ஆண்டுவிழாவை விமரிசையாகக் கொண்டாடியது. இது பற்றிக் கருத்துக்கூறிய ஒரு பி.பி.சி ஆய்வாளர்... இப்போதுள்ள தகவல் யுகத்திலும் கூட கடல் எந்தளவுக்குக் கேந்திரமாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட ஒரு முக்கியமானவிசயத்தைக் கூறினார். அதாவது அமெரிக்காவுக்கு எந்தப்பிராந்தியத்திலாவது அச்சுறுத்தல் வரும்போது அமெரிக்கத் தலைவர்கள் உடனடியாகக்கேட்கும் கேள்வி இதுதானாம்... "அந்தப் பிராந்தியத்துக்குக்கிட்டவாக அமெரிக்க விமானம் தாங்கிக் கப்பல் ஏதும் நிற்கிறதா" என்று.

சேதுசமுத்திரத்தை ஆழமாக்குவதன்மூலம் இந்தியா கடற்புலிகளின் வளர்ச்சியை நீண்டகால நோக்கில் மட்டுப்படுத்தலாம் என்று நம்புகிறதா?

சுனாமிப் பொதுக்கட்டமைப்பானது வடக்கு-கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் கடலிலிருந்து சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரமளவிற்கு புலிகளின் மேலாண்மையை அதாவது கடற்புலிகளின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்கிறது. இதன்படி கூறின் சேதுசமுத்திரக் காலவாய் தொடர்பாகக் கலந்தாலோசிக்கப்படவேண்டிய ஒரு தரப்பாக புலி களும் உத்தியோக பூர்வமாக இணைக்கப்பட்டுவிட்டார்கள்.

மேற்குநாடுகளின் அனுசரணையோடு நிகழ்ந்துவரும் இப்புதிய வளர்ச்சியை இந்தியா எப்படி எதிர்கொள்ளப்போகிறது? பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்ட எட்டாவது நாளில் சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்டத்தை தொடக்கியிருப்பதன் மூலம் இந்தியா தமிழீழத்திற்கு உணர்த்தவிரும்பும் செய்தி எது?



# சமாதானத்தை காப்பாற்ற...

தென் தமிழீழத்தில் போராளிகளின் அசைவியக்கத்தை முடக்கும் சிறிலங்காப் படைகளினதும் அரசாங்கத்தினதும் மூலோபாயத்தினது முக்கியமான அடியொன்று கடந்தவாரம் எடுத்து வைக்கப்பட்டுள்ளது. போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் வழித்துணையுடனும் சிறிலங்காப் படைகளின் பாதுகாப்புடனும் 50 போராளிகள் பயணித்த பேருந்து மீது நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதல் பெருத்த பின்புலத்தை கொண்டது. நன்றாகத் திட்டமிடப்பட்டு துல்லியமாக நிறைவேற்றப்பட்டுள்ளது இந்தத் தாக்குதல் .

உண்மையில் இந்தத் தாக்குதல் மூலம் பெருமளவு போராளிகளை ஒரே எத்தனத்தில் கொலை செய்வதன் மூலம் புலிகளைச் சினமூட்டிப் போருக்குள் அவர்களை வலிந்து தள்ளுவதே படைத்தரப்பினதும் அரசினதும் உடனடி நோக்கமாகும். இதன் மூலம் சிறிலங்கா அரசு, தான் அரசுக்கு உள்ளிருந்தும் உள்நாட்டிலிருந்தும் வெளியிலிருந்தும் எதிர்கொள்ளும் நெருக்கடிகளிலிருந்து மீள முனைகிறது.

அரசினது இந்த நயவஞ்சகப் போக்கின் குறிகாட்டிகளே அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தமது போக்குவரத்துக்களுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் வழங்க புலிகள் விடுத்த 14 நாட்கள் காலக்கெடுவை அரசு அலட்சியம் செய்து வெளியிடும் கருத்துக்களாகும். படைப் பேச்சாளர், பாதுகாப்பமைச்சின் செயலர் முப்படைத்தளபதிகள், சமாதான செயலகப்பணிப்பாளர் எனப் பல திறத்தவர்களும் இந்தவிடயத்தில் அலட்சியம் காட்டும் தொனியிலேயே பேசிவருகின்றனர்.

இதன் இலக்கு புலிகளை எவ்விதத்திலேனும் பொறுமையிழக்கச் செய்துவிடவேண்டும். அவர்களை போரைத் தொடக்க வைக்கவேண்டும் என்பதாகக் கருதுவதில் தவறேதுமில்லை.

வெலிக்கந்தத் தாக்குதலையும், படையினர் புலிகளின் போக்குவரத்துக்கு வழங்கும் பாதுகாப்பையும் ஒரு தடவை நோக்குவோம். இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் புலிகள் பயணிக்கும் தொடரணி செல்லும் போது முதலில் ஒரு இராணுவ வாகனமும் அதைத் தொடர்ந்து. 100 மீற்றர் இடைவெளியில் புலிகளின் வாகனமும் செல்லும்.புலிகளின் வாகனத்தை தொடர்ந்து 100 மீற்றர் இடைவெளியில் மற்றொரு இராணுவ வாகனமும் அதைத்தொடர்ந்து ஒரு பவல்கவச வாகனமும் கடைசியில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வாகனமும் செல்லும். புலிகளின் வாகனத்துக்கு அடுத்ததாகச் செல்லும் வாகனத்தில் தொடரணிக்குப் பொறுப்பான கட்டளையதிகாரி இருப்பார். பயணத்தின்போது வாகனங்களுக்கிடையிலான இடைவெளி சீராகப் பேணப்படுகிறது.

இதை கூர்ந்து கவனிக்கும் ஒருவருக்கு புலிகளின் வாகனத்துக்கும்,அதற்கு முன்னேயும் பின்னேயும் பயணிக்கும் இராணுவ



வாகனங்களுக்கிடையேயும் 200 மீற்றர் இடைவெளி இருப்பது புலப்படும். அதாவது 200 மீற்றர் இடைவெளியில் பயணிக்கும் இரு இராணுவ வாகனங்களுக்கிடையேதான் புலிகளின் வாகனம் சீரான இடைவெளியைப் பேணியவாறு பயணிக்கவேண்டியுள்ளது.

துல்லியமாகத் திட்டமிட்டுத் தாக்குதல் நடத்தும் ஒரு இராணுவ வீரனுக்கு இந்த 200 மீற்றர் இடைவெளிக்குள் புலிகளின் வாகனத்தின் மீது கைக்குண்டு வீசுவதோ, கண்ணிவெடியொன்றை இயக்குவதோ, RPG உந்துகணையொன்றை ஏவுவதோ கடினமான காரியமல்ல.

உண்மையில் வெலிக்கந்த போத்தையில் புலிகளின் வாகனம் மீதான தாக்குதல் இலக்குத்தவறிவிட்டது என்பது அவ்வளவு சரியானதல்ல. அந்தக் கிளைமோர் குண்டு ஒரு சிறிய வாகனத்தை இலக்குவைத்து அதன் உயரத்துக்கேற்றதாகப் பொருத்தப்பட்டிருந்தது. ஆனால் உயரமான லங்கா அசோக் லேலண்ட் பேருந்தில் புலிகள் பயணித்த காரணத்தால் கிளைமோரின் சன்னங்கள் பேருந்தின் கீழ்ப்பகுதியைத் தாக்க, உயரத்தில் பொருத்தப்பட்ட இருக்கைகளில் இருந்த போராளிகள் 50 பேரும் மயிரிழையில் உயிர் தப்பிக் கொண்டனர். அல்லது அரசாங்கத்தின் இலக்கு பிசகிப்போனது.

நிலைமை இவ்வளவு தலைக்கு மேல் போனபின்பும் புலிகள் நிதானமிழக்காதது குறிப்பிடத்தக்கது. போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவை கிளிநொச்சிக்கு வரவழைத்து புலிகள் இவ்வாறான தொடரணிகளை பாதுகாப்பாக அழைத்துச் செல்ல வாய்ப்பான சில யோசனைகளை தமது பங்குக்குத் தெரிவித்துள்ளனர்.

- பயணிக்கும் போராளிகள் அனைவரும் ஒரே வாகனத்தில் செல்லாமல் சிறு குழுக்களாகப் பல வாகனங்களில் செல்லுதல்.

-இவ்வாறு போராளிகள் செல்லும் ஒவ்வொரு வாகனத்திலும் சில படையினரும் பயணித்தல் ஆகியவையே புலிகளால் முன் வைக்கபட்ட ஆலோசனைகளாகும்.

இந்த ஆலோசனைகள் படைத்தரப்பால் இன்னமும் ஏற்கப்படவில்லை என்பதுடன், புலிகளின் கண்டனங்களும் புறமெதுக்கப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. "வெலிக்கந்தத் தாக்குதல் பெரிதுபடுத்தப்படவேண்டியதல்ல" என்று சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்னாயக்க வெளியிட்ட கருத்தை என்னவென்று சொல்வது?

இவ்வாறான மெத்தனம் பிடித்த வலுச்சண்டைக்கிழுக்கும் நோக்குடைய சிங்களப்படைகளிடமிருந்தும் அரசிடமிருந்தும் தப்பிக்கொள்ளவேண்டுமாயின் புலிகள் பயணிக்கும் வாகனங்களில் சில படையினர் மட்டும் கூடச்செல்லுதல் போதுமானதன்று. ஏனெனில் பெரிய இலக்குடன் செயற்படும் அரசுக்கு தனது சில வீர்களை இழப்பது அப்படி ஒன்றும் பெரிய விடயமல்ல. இதற்கான ஒதுக்கீடுகளைக் கூட படைத்தரப்புகள் திட்டமிட்டிருக்கவும் கூடும்.

எனவே போராளிகள் பயணிக்கும் வாகனங்களில் இனிமேல் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் சிலரும் பயணிக்க வேண்டும். பல வாகனங்களில் போராளிகள் பயணிக்கையில், இது சாத்தியப்படாத பட்சத்தில் சிலவற்றிலாவது; குறிப்பாக இலக்கு வைக்கப் படக்கூடிய முக்கிய பொறுப்பாளர்கள், போராளிகள் பயணிக்கும் வாகனங்களிலாவது கண்காணிப்புக் குழுவினர் பயணிக்கவேண்டும்.

அவ்வாறில்லாத பட்சத்தில் இனிமேல் ஒரு தாக்குதல் நிகழ்ந்து உயிரிழப்புகள் ஏற்பட்டு போர் நிறுத்தமும் சமாதான சூழலும் பொதுக் கட்டமைப்பும் நிவாரணப்பணிகளும் அச்சுறுத்தலுக்குள்ளாக நேரிடுவது நிச்சயம்.

**பு.சத்தியமூர்த்தி**

---

# ஒரு ரயிலில் பயணம்...

1977 ஆம் ஆண்டு ஆவணி மாதம் பாடசாலை விடுமுறையை சொந்தக்கிராமத்தில் கழிக்கவேண்டும். தென்னங்கீற்றுகளில் விளையாடும் நிலாவின் அழகைப் பார்க்கவேண்டும். மணலில் கால் புதைய நடந்து மகிழ வேண்டும். தாமரைகள் வளர்ந்திருக்கும் சின்னக் குளங்களில் குளித்து கோயிலை கும்பிட்டு அமைதியாய் ஆனந்தமாய் ஒரு மாதம் கழிய வேண்டும் என்ற எண்ணம் எவ்வளவோ சொல்லலாம்.



என் சின்ன மகள் பத்து வயது ஏதேதோ சின்னச் சின்ன விளையாட்டுச் சாமான்களையெல்லாம் சேர்த்து வைத்திருந்தாள் அவைகளை யெல்லாம் பக்குவமாக எடுத்து தன் பெட்டியில் வைத்துக் கொண்டாள். அக்கம் பக்கம் உள்ள சிறுவர் சிறுமியருடன் விளையாடும் மகிழ்ச்சி.

புறப்பட்டோம் உறங்கவிருக்கை பெட்டி கோட்டை புகையிரத நிலையம். மக்கள் ஏதோ கூடிக் கூடி கதைத்தார்கள். இன்றைக்கு போகலாமா என்ற கேள்விகள். எனக்கும் பயம் தான் பயமில்லை ஒன்றும் நடவாது என்று கூறி என்கணவர் அனுப்பி வைத்தார். சிலர் பிரயாணம் செய்யாமலே வீட்டுக்கு திரும்பிவிட்டார்கள்.

வண்டி தனக்கு கவலையில்லை என்ற விதமாகவோ அல்லது என் கடமை என்றோ ஓடிக்கொண்டிருந்தது. என் பக்கத்தில் ஆறுவயதுச் சிறுவன் அவனுடைய தாய் இன்னும் ஒருவர் கதைத்தாலும் கதையில் மனம் ஒன்றவில்லை. அநுராதபுரம் தாண்டிவிட்டால் பயமில்லை என்று எங்களோடு இருந்தவர் சொன்னார். தூக்கமும் வரவில்லை எப்படியோ ஓடிஓடி அநுராதபுரத்தில் வந்து நின்றது வண்டி. அடுத்த கணம் பேய் இரைச்சலா மரண ஓலமாஅசுரர்களின் ஆங்காரத்தொனியா என்ன பயங்கரம். என்ன கொடுமை. வண்டியின் கதவுகளைச் சிலர் பூட்டினார்கள். வந்தவர்கள் அடித்து உடைத்தார்கள் திறக்கச் சொல்லி கத்தினார்கள். என் மகள் என்னை கட்டிப்பிடித்தாள் அந்த ஆறு வயதுச் சிறுவன் என்ன அம்மா என்று கேட்டான் தாயை. தாய் அழுதாள் தாக்க கொள்ளையடிக்க எத்தனை பேர் வந்துள்ளனர். என்ன செய்யப் போகிறோம் இன்றைக்கு மரணம் தான் என நினைத்துக் கொண் டேன். பலர் கீழே இறங்கி ஓடினார்கள் நான் இறங்கவில்லை. என்பக்கத்தில் இருந்தவர் இறங்க வேண்டாம் செத்தால் சவமாவது எங்கள் ஊருக்கு போய்ச் சேரட்டும் வண்டி எப்படியோ போகும் தானே என்றார்.

உறங்கவிருக்கை பெட்டியின் வாசலில் நின்றுகொண்டார். என் மகளும் அந்த சிறு பையனும் ஆசனத்தின் கீழ் பதுங்கிவிட்டார்கள். இருவர் அடோ என்ற கத்தலுடன் எங்கள் பெட்டியின் வாசலுக்கு வந்தார்கள். அந்த மனிதர் வாசலில் நின்றுகொண்டிருந்தவர் சோடாப் போத்தலை கையில் வைத்திருந்தார். எங்கிருந்து துணிச்சல் வந்ததோ ஓங்கி அவன் தலையில் அடித்தார். போத்தல் உடைந்து அவன் தலையில் காயம். இரத்தம் பெருகியிருக்கலாம் ஏதோ அவனும் அவனோடு வந்தவனும் அடுத்த பெட்டிக்கு போய் விட்டார்கள்.

என் கழுத்தில் தாலிக்கொடி போத்தலால் அடித்தவரை சுரண்டி இதை நீங்கள் வைத்துக்கொள்ளுங்கள் என்று தாலிக்கொடியை கொடுத்தேன். வாங்கி எங்கோ மடியில் பத்திரப்படுத்திக்கொண்டார். ஒரு நிமிசப் பொழுதுதான். எப்படியோ எதிரியின் கைக்கு தாலிக்கொடி போகக் கூடாது என்பதே என் எண்ணம்.

எப்படியாவது வண்டி புறப்பட்டு விட்டா நல்லது என்ற ஆசை. அங்கலாய்ப்பு. குதறும் கொடியவர்களிடம் இருந்து தப்பி விடலாம் என்ற எண்ணம். ஆனால் வண்டியோ புறப்படுவதாயில்லை. பொலிஸ் வந்து பாதுகாப்பளித்தால் வண்டி புறப்படும் என்றனர் சிலர். காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு செல்லும் வண்டி வந்தால் போதும் இது புறப்படும் என்றனர் சிலர். நிமிசங்கள் யுகங்களாய் போய்க் கொண்டிருந்தன. பதறித்துடித்தும் பயனில்லை. கதறி அழுதும் பயனில்லை. சிதறி ஓடியும் இலாபமில்லை. எப்படியோ அந்த எதிர்பார்த்த புகைவண்டி காங்கேசன் துறையிலிருந்து புறப்பட்டு வந்த வண்டி வந்துசேர்ந்தது. திறந்த கதவுகள் படபடக்க மக்கள் கூட்டம் இல்லாமல் வந்து சேர்ந்தது.

ஏறக்குறைய நான்கு மணிநேரத்தில் புறப்பட்டது. ஏக்கமும் பெருமூச்சும் கொஞ்சம் குறையும் என எண்ணியபோது அந்தக் கும்பல் ஹோ என்ற இரைச்சல் மறுபடியும் வந்து சேர்ந்துவிட்டது. வந்தாலும் வண்டி மெதுவாக நகர்ந்து ஒரே சீராக ஓடத்தொடங்கியது. எந்தப் புகையிரத நிலையத்திலும் நிற்காமல் யாழ்ப்பாணம் போகும் என்று பேசிக்கொண்டார்கள். ஆனால் மதவாச்சி... மடுமாதாவின் பெருநாளுக்கு போய் வந்த மக்கள் அங்கு பதற்றத்துடன் நின்றுகொண்டிருந்தார்கள்.

வண்டியை நிற்பாட்டியதும் மக்கள் குபு குபு என ஏறினார்கள். குழந்தைகளை, பெண்களை உள்ளே தள்ளினார்கள். ஏனையோர் மிதி பலகையிலும் வண்டியின் கூரையிலுமோ தெரியாது ஏறிக்கொண்டார்கள். கூட்டமா கூட்டம். பயங்கரக் கூட்டம். வேகமெடுக்க முடியாத பாரம். மெதுவாக ஓடிய வண்டி வவுனியாவில் வந்துநின்றது. நெடுமூச்சு விட்டது. படபடவென பலர் கீழே இறங்கினர். சோகத்திலும் ஒரு மகிழ்ச்சி. சொந்த மண் எங்கள் மண் இனிய மண் வந்து சேர்ந்துவிட்டோம் என்ற மலர்ச்சி. முகங்களில் ஒரு ஒளி. சொர்க்கம் என்றால் என்ன என்று தெரியாது சொந்த மண்ணின் பெருமை அருமை சொல்லமுடியாது பெண்கள் தங்கள் தலையை ஒதுக்கினார்கள். உடையை சரி செய்தார்கள். குழந்தைகளை முத்தமிட்டார்கள்.

எங்கள் உறங்கவிருக்கையில் பிரயாணம் செய்தவர் தோளில் தொட்டார். இடுப்பு வேட்டியில் மறைத்து வைத்திருந்த என் தாலிக் கொடியை எடுத்து என்னிடம் தந்தார். முகத்தைத் துடைத்து பொட்டு வையுங்கள் என்றார். அந்த ஒரு சில நிமிடங்கள் மறக்க முடியாதவை. அவர் ஒரு கர்மவீரன்தான் தனித் தகைமையுடைய தமிழ் வீரன்தான். பெயரைக் கூட நான் கேட்கவில்லை. அவரை மறுபடி நான் சந்திக்கவும் இல்லை.

எத்தனையோ வருடங்கள் ஓடிவிட்டன. அன்று பட்டபாட்டை மறக்கமுடியவில்லை. அந்த மனிதரின் பெருமையை மறக்கமுடியவில்லை. எப்படியோ நானும் மகளும் வீடு போய்ச் சேர்ந்தோம்.

**சுந்தரி**









# சிறிலங்கா அரசை இந்தியா நம்பத் தயாரா?





புலிகளை நம்பமுடியாது என்று வெளிப்படையாகக் கூறிவந்த இந்திய உயர் மட்டத் தலைவர்கள் சிறிலங்கா அரசையும் நம்ப முடியாது என்று உணரத் தலைப்பட்டுள்ளனர். சிறிலங்காவின் நட்பு உள்நோக்கம் கொண்டது. கடந்த ஐம்பது வருட காலமாக தனியொரு உள்நாட்டுத் தேவையைப் பூர்த்திசெய்யும் நோக்குடன் சிறிலங்கா மிகவும் விரிவான வெளிநாட்டு இராசதந்திரத்தை மேற்கொள்கின்றது. கடும்நெருக்குதல் காரணமாகவே, அதாவது காலத்தின் தேவைகளைத் தட்டிக் கழிக்கமுடியாத காரணத்திற்காகவே சிறிலங்கா அரசுகள் இந்திய நட்பை வேண்டி நிற்கின்றன. இரு பிரதான சிங்களக் கட்சிகளுக்கிடையில் இதில் வேறுபாடு கிடையாது. யார் ஆட்சிக்கு வந்தாலும் ஈழத் தமிழர்களுக்கு எதிராக இந்தியாவைத் திருப்பிவிடும் கொள்கையை முன்னெடுக்கின்றனர். மென்மையான கனவான், தமிழர்கள் மீது காழ்ப்புணர்வு அற்றவர் என்று நம்பப்படும் ரணில் விக்கிரமசிங்கதான் தனது பிரதமர் பதவிக்காலத்தில் இந்தியாவுடன் ஒருபாதுகாப்பு ஒப்பந்தத்தைச் செய்வதற்கு முதலடி எடுத்தவர். அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், கனடா, இந்தியா,ஜப்பான்,சீனா ஆகிய உலக நாடுகளை ஒன்று திரட்டி ஈழத் தமிழர்களை நசுக்குவதற்கு அவர் திட்டமிட்டார். அவருடைய பதவி இழப்பிலுள்ள நல்ல அம்சத்தை நாம் காலம் கடந்தாவது உணரவேண்டும். இவர் தொடர்ந்து பதவியில் இருந்திருப்பின் நாம் கடுமையாக முடக்கப்பட்டிருப்போம்.

இத்தீவின் பிரச்சினையைப் பொறுத்தளவில் "பிளவுபடாத சிறிலங்காவுக்குள்" இனங்கள் யாவுக்கும் சாதகமான ஒரு தீர்வை விரும்புவதாக இந்தியா கடந்த சில வருடங்களாகக் கூறிவருகிறது. மீண்டும் மீண்டும் உச்சாடனம் செய்யப்படுவதால் இது அர்த்தமற்ற மகாமந்திரமாக மாறிவிட்டது. இதை விட வேறொன்றைச் சொல்வதற்கோ, செய்வதற்கோ இந்தியா தயாரில்லை. அதற்குக் காரணம் சிறிலங்கா அரசை இந்தியா இனிமேலும் நம்பத் தயாரில்லை என்பதுதான் உண்மை. பொருளாதார ரீதியாகச் சிறிலங்காவைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வரவேண்டும். நாட்டிலுள்ள குழப்பம் தொடரவேண்டும் என்பன இந்தியாவின் இரட்டை இலக்குகள். குழப்பம் நிலவினால்தான் சிறிலங்காத் தலைவர்கள் புதுடில்லிப் பயணத்தை மேற்கொள்வார்கள். இனப்பிரச்சினை சம்பந்தமாக இந்தியா விடுத்த நான்கு அம்சக் கோரிக்கைகளை சிறிலங்கா நிறைவேற்றாமல் இழுத்தடிக்கிறது. அந்த நான்கும் பின்வருமாறு; (அ) ஒரு அரசியல் தீர்வுக்கு முன்னோடியாகச் சிங்களக் கட்சிகள்யாவும் ஒன்றிணைந்து அரசியல் தீர்வொன்றை உருவாக்குங்கள். (ஆ) நாட்டு மக்கள் யாபேரின் விருப்பு வெறுப்புக்களைக் கணிப்பீடு செய்து தீர்வை உருவாக்குங்கள். (இ)வெளிநாடுகளை நம்பியிராது இராணுவத் தயார் நிலையை நீங்களாகவே உருவாக்குங்கள். (ஈ) எல்லாவற்றிற்கும் மேலாக ஈழத் தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்றெடுங்கள். இவற்றில் ஒன்றையாவது சிறிலங்கா நிறைவேற்றவில்லை.

இந்தியாவுக்கு விசுவாசமாக சிங்கள அரசுகள் எப்போதாவது நடந்ததுண்டா? அப்படியேதேனும் வரலாற்றுச் சான்றுகள் உண்டா என்றால் இல்லை என்றுதான் பதில். வெளிநாடுகளில் வாழும் சிங்களவர்கள் ஐந்து வருடம் சென்றவுடன் பிரசாவுரிமைக் கோரிக்கை விடுக்கின்றனர். ஒன்றரை நூற்றாண்டு காலம் வாழ்ந்த மலையகத் தமிழர்களின் வாழ்வுரிமை 1948இல் பறிக்கப்படுவதற்கு அவர்கள் இந்தியர்கள், அதுகும் தமிழர்கள் என்பது தான் முக்கிய காரணம். சிறிலங்காவின் விடுதலை இயக்கத்திற்குத் தலைமை தாங்கிய அதே தமிழர்களுக்குஎதிராக போர் தொடுக்கும் நாடாகத் திகழும் தீவில் என்னதான் நடக்காது. இந்தமட்டில இது உலக வரலாற்றில் தனித்துவமானது.

1965 தொடக்கம் 1969 வரை நீடித்த பிரதமர் டட்லி சேனநாயக்கா அரசு காலத்தில் அப்பட்டமான இந்திய எதிர்ப்புவாதம் வெளிப்பட்டது. யூ.என்.பி- சமஷ்டி கூட்டாட்சி நடந்த இக்காலப்பகுதியில் கோணேசர் கோயில் பிரதேசத்தைப் புனித பூமி என்று அரசுமூலம் பிரகடனம் செய்வதற்கு சமஷ்டி கட்சியினர் முயற்சி செய்தனர். இதற்கு இளைப்பாறிய புதைபடிவ ஆய்வுத் திணைக்கள ஆணையர் டாக்டர் சீ.ஈ.கொடக்கும்புர, பத்திரிகை வாயிலாகக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார். 1968 ஆம் ஆண்டில் செப்ரெம்பர் 17, நவம்பர் 12 ஆகிய திகதிகளில் வெளிவந்த சன் பத்திரிகையில் அவர் பல்வேறு விசித்திரமான வாதங்களை முன்வைத்தார். அவை மிகவும் வேடிக்கையாக இருந்தாலும் இந்திய எதிர்ப்பு வாதத்தை நன்கு படம் பிடித்துக் காட்டுகின்றன. திருகோணமலை கோணேசர் கோயில் சுற்று வட்டாரத்தில் வாழும இந்தியாவின் ஐந்தாம் படையினரும், நாட்டைக் காட்டிக் கொடுப்போரும் இக்கோயிலை வணங்கும் சாட்டில் உள்வரும் இந்திய ஊடுருவல்காரர்களுக்குப் புகலிடம் வழங்கிவிடுவார்கள். இதன்காரணமாக இலங்கைமீதான இந்தியப் படையெடுப்பு சுலபமாக நிறைவேறிவிடும்.

அக்காலப்பகுதியில் விசாகபட்டினம் துறைமுகத்தை இந்திய மத்திய அரசு விரிவாக்கிக்கொண்டிருந்தது. இந்த விரிவாக்கத்திற்கும் கொடக்கும்புர ஒரு உள்நோக்கத்தைக் கற்பித்தார். விசாகபட்டினம் கடற்படைத்தளத்திலிருந்து திருகோணமலைத் துறைமுகத்தின் மீது தாக்குதல் நடத்திக் கைப்பற்றுவது மிகவும் எளிதாகிவிடும். தாக்குதல் நடத்துவோருக்கு வரவேற்பு அளிப்பதற்காகவே கோணேசர் கோயில் சுற்றாடலைப் புனித பூமியாக்கும்படி சமஷ்டி கட்சியினர் கேட்கின்றனர். இவர்கள் இந்தியாவின் முகவர்கள் என்று கொடக்கும்புர சுட்டிக்காட்டினார். மதியூகியான டட்லி சேனநாயக்கா கோணேசர் கோயிலைச் சுற்றி எழுப்பப் படவிருந்த சதித்திட்டத்தை முறியடிக்கத் தீர்மானித்தார். சமஷ்டி கட்சிப் பங்காளிகளின் கோரிக்கையை அவர் உடனடியாக நிராகரித்தார். கோணேசர் கோயில் புனருத்தாரணம் செய்யப்பட்ட காலந்தொட்டு அதன் பக்கலில் இருந்த

**-அன்பரசு-**

கோக்கண புத்த விகாரை எங்கே என்ற கூக்குரல் சிங்களப் பேரினவாதிகள் மத்தியில் தோன்றியது. கோக்கண என்ற பெயரில் ஒரு புத்த விகாரை கோணேசர் கோயிலுக்குப் பக்கத்தில் இருந்ததற்கான புதைபடிவச் சான்றுகள் ஒன்றுமே கிடைக்கவில்லை. உண்மையில் அதற்கான தேடல்கள் நடத்தப்படவில்லை. ஆனால் திடீரென்று பிறடெறிக் கோட்டைக்குள் கோணேசர் கோயிலுக்கு அருகாமையில் ஒரு புத்த விகாரை கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டது. புனித நிலக் கோரிக்கைக்குப் பதிலடியாக இது அமைந்தாலும் சமஷ்டி கட்சியினர் வாளாவிருந்தனர். கோக்கண விகாரை இன்று விஸ்வரூபம் எடுத்து கோணேசர் கோயில் வளாகத்தில் நிற்கிறது.

இமாலயப் பிரதேச எல்லைப் பிரச்சினை காரணமாக சீன-இந்திய எல்லைப் போர் 1962 இல் வெடித்தபோது அப்போதைய இலங்கைப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா நடுநிலை வகித்தார். இந்தியா கடும் இழப்புக்களைச் சந்தித்தது. 3,000 துருப்புக்கள் கொல்லப்பட்டனர், 4000 பேர் சிறைப்பிடிக்கப்பட்டனர். போர் நிறுத்தம் அமுலுக்கு வந்தபின் நடுநிலை நாடுகளான சிறிலங்கா, பர்மா, இந்தோனேசியா, கம்போடியா, கானா, அரபுக்குடியரசு என்பன சமரசம் செய்ய எத்தனித்தன. இந்தியா விரும்பாத கோரிக்கைகளை இந்த நாடுகள் விடுத்தபடியால் சமரச முயற்சிகைவிடப்பட்டது. இந்தியாவின் அவமானம் உச்சத்தை எட்டியது. இப்போர் நடந்தபின் ஒன்றரை வருடங்கள் மாத்திரம் நேரு உயிருடன் இருந்தார். அவர் மனத்தளவில் 1962 இல் இறந்துவிட்டார். அவருடைய உடல் மாத்திரம் 1964 வரை உயிரோடு இருந்தது. நேரு இறந்த பத்தொன்பது மாதங்களுக்குப்பின் 1966 இல் அவருடைய மகள் இந்திரா காந்தி பிரதமரானார். தாம் நேரு குடும்பத்தினருடன் தனிப்பட்ட நட்புறவு வைத்திருப்பவர்கள் என்று கூறுவது பண்டாரநாயக்கா குடும்பத்தின் வழமை. இந்த அடிப்படையில் இந்திராகாந்தியுடன் சிறிமாவோ மிகவும் நெருக்கமான அந்தரங்கத் தோழியானார்.

ஆனால் கிழக்குப் பாகிஸ்தான் பிரிந்து சென்று வங்காளதேசமாக மாறிய 1971 ஆம் ஆண்டுப் போரின்போது சிறிமாவோ அரசு பாகிஸ்தானுக்கு உதவிகள் வழங்கியது. இந்தியப் படைகள் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து பாகிஸ்தான் படைகளை விரட்டுவதில் ஈடுபட்டிருந்தபோது இலங்கை ஊடாகப் போக்குவரத்துச் செய்த பாகிஸ்தான் விமானங்களுக்கும் கப்பல்களுக்கும் இலங்கை தங்கிச்செல்லும் வசதிகளை வழங்கியது. இது சிறிலங்கா-பாகிஸ்தான் நெருக்கத்தின் அடித்தளமாக அமைகிறது. இதையும் பொருட்படுத்தாது 1974 இல் கச்சதீவை இந்திரா காந்தி சிறிலங்காவுக்கு வழங்கினார். அப்போது தமிழ் நாட்டின் முதலமைச்சராகப் பதவிவகித்த கருணாநிதி யின் ஆட்சேபனையையும் தமிழக மீனவர்களின் எதிர்ப்பையும் மீறி இந்த வழங்கல் நடைபெற்றது. கச்சதீவை சிறிலங்காவுக்கு வழங்கும் ஒப்பந்தத்தை பரிசீலிக்கும் சந்தர்ப்பத்தை தமிழக அரசுக்கு இந்திராகாந்தி வழங்கவில்லை. ஏனென்றால் அது ஏற்கனவே கலைக்கப்பட்டுவிட்டது. நன்றியறிதல் இல்லாத சிறிலங்கா அரசுகள் மீது இந்திய அரசு காட்டும் பரிவு புரியாத மர்மமாக இருக்கிறது. 1984இல் சீக்கிய மெய்ப் பாதுகாவலரால் இந்திராகாந்தி சுட்டுக் கொல்லப்பட்டபோது ஈழத்தமிழர்கள் ஆறாத் துயரில் அமிழ்ந்தனர். ஆனால் சிங்களவர்கள் வெடி கொளுத்தி,இனிப்புப் பரிமாறிக் கொண்டாடினர்.

இந்தியப் படையெடுப்பு 1987 இல் தொடங்கியபோது ராஜீவ்காந்தி அரசு சிறி லங்கா அரசியல் சாசனத்திற்கு 13 ஆம் திருத் தம் கொண்டு வரும்படி நிர்ப்பந்தித்தது. இத் திருத்த நகல் புதுடில்லியில் தயாரிக்கப்பட்ட தாகவும் சொல்லப்படுகிறது. மாகாண சபை களை இத்திருத்தம் உருவாக்கியது. இது பற்றிய முழு அளவு வரலாற்றையும் ராஜீவ்காந்தி படுகொலை நீதிமன்ற வழக்கத்திற்குப் பொறுப்பதிகாரியாக இருந்த டி.ஆர்.கார்த்திகேயன் எழுதிய நூலில் காணலாம். (THE TRIUMPH OF TRVTH. THE RAJIV GANDHI ASSASINATION BY D.R. KARTHIKEYAN. NEW DAWN PRESS, INDIA) ஐபிகேஎப்-எல்ரிரிஈ போர் நடந்துகொண்டிருக்கும்போது மே 1989 இல் கார்த்திகேயன் இலங்கை வடகிழக்கு முழுவதையும் சுற்றிப் பார்த்தார். மத்திய அமைச்சரவைச் செயலர் டி.என்.சேஷனின் பணிப்புரைக்கு அமைவாக அவர் இந்த விஜயத்தை மேற்கொண்டார். ஜுன் 1989 இல் தனது அவதானிப்புகளை ஒரு 45 பக்க அறிக்கையாகக் கார்த்திகேயன் சேஷனிடம் கொடுத்தார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 08. 07 . 2005
மின் அஞ்சல :- weekly @ eezhanatham.com

## வரலாற்று நிர்ப்பந்தம்..!

சிறிலங்காவின் நீதித்துறை வரலாற்றில் முதன் முறையாக இலங்கையில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் பிரதேசங்கள் இருக்கின்றதென்ற உண்மையை ஏற்றுக்கொண்டுள்ளது.

கடந்த புதன்கிழமை, வடக்கு-கிழக்கு சுனாமி நிவாரணப் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக சிறிலங்கா அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் செய்துகொண்ட உடன்படிக்கையை இரத்துச்செய்வதற்கான உத்தரவொன்றை பிறப்பிக்கக்கோரியும் இந்த மனு மீதான விசாரணை முடிவடையும்வரை அதற்கான இடைக்கால தடை உத்தரவை பிறப்பிக்கக் கோரியும் ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர்கள் முப்பத்தொன்பது பேர் கூட்டாக தாக்கல்செய்த மனு மீதான விசாரணையின்போது பிரதம நீதியரசர் சரத். என்.டி.சில்வா விடுதலைப் புலிகளிடம் கட்டுப்பாட்டுப் பிரதேசம் ஒன்று இருப்பதை ஒப்புக்கொண்டு கருத்துத் தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசர் சரத். என்.டி.சில்வா "நடைமுறையில் பார்க்கும்போது நாட்டில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் ஒன்று உள்ளது" என அப்போது தெரிவித்துள்ளார்.

சிறிலங்காவின் பிரதம நீதியரசர் இவ்வாறு ஏற்றுக்கொண்டுவிட்டதால் தமிழர்களுக்கு அரசியல் வெளிச்சம் ஏற்பட்டுவிடும் என்று பெரும் அக மகிழ்ச்சி கொள்ள இதில் எந்தவிடயமும் இல்லை.

ஏனெனில், சிறிலங்காவின் நீதித்துறை தமிழ் மக்களுக்கு இழைத்த அநீதிகளின் பட்டியல் மிக நீளமானது.

தமிழ் மக்கள் மீது திட்டமிட்டு நடத்தப்பட்ட எத்தனையோ அநீதிகளைப் புரிந்த குற்றவாளிகளை இதே நீதித்துறை நோக்கத் தவறியிருக்கிறது.

இதற்கு அண்மைய உதாரணமாக பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் தமிழ்க் கைதிகள் மீது தாக்குதல் நடாத்திய குற்றவாளிகளை விடுவித்தமையைக் குறிப்பிடலாம்.

இதேவேளை இன்று சிறிலங்காவின் நீதித்துறை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் ஒரு பிரதேசம் இருப்பதை ஏற்றுக்கொண்டிருக்கிறதென்றால் அது சிறிலங்காவின் நீதித்துறையால் புறக்கணிக்கமுடியாத அழுத்தத்தினால் ஏற்பட்டதேயன்றி வேறில்லை.

இன்று இலங்கையில் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாக சர்வதேச சமூகத்தினால் சிறிலங்கா அரசின் மீது மேற்கொள்ளப்படும் அழுத்தத்தின் யதார்த்தத்தை நீதித்துறை உணர்ந்திருப்பதன் காரணமாகும்.

இந்தவகையில் இன்று புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை ஏற்றுக்கொண்டதுபோல சிறிலங்கா நீதித்துறை இங்கு இரண்டு தரைப் படைகள், இரண்டு கடற்படைகள், இரண்டு விமானப் படைகள், இரண்டு காவல்துறை, இரண்டு நீதித்துறை என இரண்டு நாடுகள் ஏற்கெனவே இங்கிருக்கிறதென்ற யதார்த்தத்தையும் ஏற்றுக்கொள்ளவேண்டிய வரலாற்று நிர்ப்பந்தத்தையும் சிறிலங்கா நீதித்துறை சந்தித்தேயாகவேண்டும்.

இந்தவகையில் சிறிலங்கா நீதித்துறை இவ்வளவு நாட்களும் ஏற்க மறுத்த ஒருவிடயத்தை இப்பொழுது ஏற்றிருப்பதற்கு தமிழரின் படை வலிமையும் அரசியல் வலிமையும், தமிழரின் தலைமையின் உறுதியின் வலிமையுமே இத்தகையதொரு நிலைக்கு சிறிலங்காவின் நீதித்துறையை தள்ளியுள்ளது.


இந்த[illegible] தமிழ் மக்களின் முன் சிறிலங்காவின் [illegible]துறை ஒருமுறை தலைகுனிந்துள்ளது என[illegible]மிகையாகாது.

## சந்திரிகாவின் தந்திரம்

தற்போது பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டுவிட்டது. இந்த இடத்தில் இது சம்பந்தமாக சில விடயங்களை ஆராய்வோம்.

சில நாட்களுக்கு முன்பு வடகிழக்கின் பல இடங்களிலும் குறிப்ட மட்டக்களப்பில் புலிகள்மீது பல தாக்குதல்கள நடத்தப்பட்டது. பல பொதுமக்கள் மீதும் நடத்தப்பட்டது. இதை படைத்தரப்பினருடன் அவர்களின் துணைப்படையினரும் சேர்ந்தே இத்தாக்குதல்களை நடத்துகின்றனர் என்பது பொதுவான குற்றச்சாட்டு. இவ்விடயம் குறிப்பிடப்படுவதற்கு யார் இதைச் செய்கின்றார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த இரகசியம் எனினும் ஏன் இதைச் செய்கின்றார்கள் என்று அலசுவதே இக்கட்டுரையின் நோக்கம் சனாதிபதி சந்திரிகா தற்போது இரண்டுவிதமான அழுத்தத்திற்குட்பட்டிருக்கின்றார்.

1.புலிகளுடன் சமாதானத்தைச் செய்தால் தான் நிதி உதவிகள் வழங்கப்படும் என்று சர்வதேச நாடுகள் அரசுக்கு அறிவித்துவிட்டன. சர்வதேச நாடுகளின் நிபந்தனைக்கு உட்பட்டால்தான் அவர்கள் தரும் நிதி உதவியை வைத்து அதழபாதாழத்திற்குச் சென்று விட்ட



சிறிலங்காவின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கலாம்.

2.சர்வதேச நாடுகள் சமாதானத்தை வலியுறுத்த அவரது ஆட்சிக்குள்ளிருக்கும் கட்சிகளினால் சண்டை நடத்த நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார். அதாவது தமிழர்களுக்கு வழங்கப் போவதாகக் காட்டப்படும் எந்தத் தீர்வுக்கும் ஜே.வி.பி சம்மதிக்கப்போவதில்லை. அது சமஷ்டித்தீர்வானாலும் சரி, பொதுக்கட்டமைப்பு என்றாலும் சரி எதற்கும் ஜே.வி.பி ஆதரவளிக்கப் போவதில்லை. இலங்கை சுதந்திரமடைந்த காலந்தொட்டு ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சியை தோற்கடித்து தேர்தலில்வென்றார். S.W.R.D பண்டாரநாயக்கா.

பின் சிறிமாவோ பண்டாரநாயக்கவை தோற்கடித்து ஆட்சியைப் பிடித்தார் J.R. ஜெயவர்தனா. மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியை 1994 இல் தோற்கடித்து வென்றார் இன்றைய சனாதிபதி சந்திரிகா. இப்படி இவர்கள் அனைவரும் மக்கள் சேவையின் மூலம் ஆட்சியைப் பிடிக்கவில்லை. மாறாக் இனவாதம் பேசிப் பேசியே நாட்டின் தலைவரானார்கள்.

இனவாதத்தை ஒரு கருவியாக பிடித்ததால் தான் தேர்தலில் வென்று ஆட்சியை பிடித்தார்கள். 1994 இல் சமாதான தேவதையாகத் தன்னைக்காட்டி ஆட்சியைப் பிடித்தாலும் அவரது பாணியில் சொல்வதென்றால் சமாதானத்திற்கான யுத்தத்தை நடத்தியே இரண்டாவது முறையாகவும் சனாதிபதியானார் சனாதிபதி சந்திரிகா.

எனவேதான் இனவாதம் என்பது இவர்களது இரத்தத்தில் ஊறிய ஒன்று. ஆட்சியை பிடிக்கவும் பிடித்த ஆட்சியை நீடிக்கவும் இனவாதத்தை ஒரு கருவியாகவே சிங்களத் தலைமை பாவித்து வந்தது. எனவே இந்த வழியில் ஆட்சியைபிடிக்க நினைக்கும் ஜே.வி.பி இனவாதத்தை க்க்குவதில்

**இனவாதத்தை ஒரு கருவியாக பிடித்ததால் தான் தேர்தலில் வென்று ஆட்சியை பிடித்தார்கள். 1994 இல் சமாதான தேவதையாகத் தன்னைக் காட்டி ஆட்சியைப் பிடித்தாலும் அவரது பாணியில் சொல்வதென்றால் சமாதானத்திற்கான யுத்தத்தை நடத்தியே இரண்டாவது முறையாகவும் சனாதிபதியானார் சனாதிபதி சந்திரிகா.**

அதிசயமொன்றுமில்லைத் தானே எனவேதான் சந்திரிகா ஏதாவது அரைகுறைத் தீர்வை எமக்குத்தருவதாகக் காட்டிக் கொண்டால் கூட அதை ஜே.வி.பி கடுமையாக எதிர்க்கும். இதன் மூலம் தனது ஆதரவை சிங்களவர் மத்தியில் பெருக்கவே நினைக்கும் தீர்வை ஆதரிப்பதாக ஜே.வி.பி காட்டிக்கொண்டால் அதன் மூலதனத்திற்கு ஆபத்தாகவே முடியும். எனவே எப்பாடு பட்டாவது தீர்வைத் தடுப்பதற்கே ஜே.வி.பி முயற்சிக்கும். எனவேதான் சனாதிபதி ஏதாவது ஒரு பிரச்சினைக்கு முகம்கொடுத்தே ஆக வேண்டும். நாட்டு மக்களை கருத்திற்கொண்டு புலிகளுடன் பேசுவதா? அவ்வாறு இல்லாது விட்டால் சர்வதேசத்தின் நிதி உதவி கிடைக்காது போகக் கூடும். எனவேதான் இரண்டு பிரச்சினைகளையும் சுமுகமாகத் தீர்ப்பதற்கு சனாதிபதிக்கு ஒரு வழிதான் உள்ளதாகப்பட்டது.


அதாவது படையினர் கருணா குழுவைப் பயன்படுத்தி புலிகள் மீது தாக்குதல் நிகழ்த்துவது இதனால் பொறுமையிழந்த புலிகள் படையினர் மீது சண்டையைத் தொடக்குவர். இதன் மூலம் தமது கூட்டணிக் கட்சிகளை திருப்திப்படுத்தி ஆட்சியை நடத்திச் செல்லலாம். நாமாக யுத்தத்தை நடத்தவில்லை புலிகள் தான் எம்மீது யுத்தத்தை திணித்தார்கள். எனவே யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை என்று சர்வதேசத்திடம் கூறி பணமும் பெறலாம் என்று சனாதிபதி நினைத்திருக்கலாம்.

இதனால் தான் கருணா குழு என்ற பெயரைப் பயன்படுத்தி படைகள் மூலம் புலிகள் மீது தாக்குதல் நடத்தி புலிகளைச் சண்டைக்கு வலிந்து இழுக்கின்றார். இது ஒன்றும் புலிகளுக்குத் தெரியாத ஒன்றல்ல. இச்சதி வலை தம்மை விழவைப்பதற்காகத்தான் பின்னப்பட்டது. என்பதும் புலிகளுக்கு விளங்காததல்ல... அதனால்தான் தாங்கள் பல உறுப்பினர்களையும் பல பொதுமக்களையும் பலி கொடுத்தும் ஒப்பந்தத்தை பாதுகாத்து வருகின்றனர். இதன் மூலம் மாற்று வழிகுறித்து சிந்திக்கவேண்டிய நிலைக்கு சனாதிபதியைதள்ளிவிட்டுள்ளனர்.

இந்த நிலையில் தான் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு கண்டியில் நடைபெற்றது. இதில் சர்வதேசத்தின் நிதியுதவிகளை இலங்கை அரசு பெறுவதற்கு புலிகளுடன் ஒரு இணக்கத்திற்கு வந்துதான் ஆகவேண்டும். எனவேதான் பொதுக்கட்டமைப்பை அமைப்பதற்கு சனாதிபதி இணங்கியுள்ளார். ஜே.வி.பி எதிர்க்கின்றபோதும் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழரசுக்கட்சி போன்றவற்றின் ஆதரவு தனக்குக் கிடைக்கும் என்று சனாதிபதி நம்பக்கூடும். அப்படி உண்மையாக நம்பினால் பொதுக்கட்டமைப்பு செயற்படலாம். எது எப்படியோ பந்து தற்போது சர்வதேசத்தினரால் சந்திரிகாவின் பக்கம் தட்டி விடப்பட்டள்ளது. அதை அவர் எவ்வாறு பயன்படுத்தப்போகின்றார் என்று சில நாட்களில் தெரிந்துவிடும்.

**விதுரன்**

# கூட்டுச் சேரத் தடை என்ன?



ஜே.வி.பி தன்னுடன் கூட்டுச்சேர முன்வராமையினையிட்டு ஜாதிக ஹெல உறுமய கோபமடைந்திருக்கிறது. அதிலும் அவ்வாறு கூட்டுச்சேர மறுத்தமைக்கு ஜே.வி.பி கூறிய காரணம் அதனைப் பெரிதும் ஆத்திரப்படுத்தியிருக்கின்றது.

அதாவது சிறுபான்மையினர் குறித்து ஜாதிகஹெல உறுமயவின் கொள்கை தொடர்பாக தாம் அதிருப்தியடைந்துள்ளதாகவும் அதன் காரணமாகவே கூட்டுச்சேர முடியாதுள்ளதாகவும் ஜே.வி.பி கூறியிருக்கிறது.

அவ்வாறாயின் ஜே.வி.பி க்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் வேறுபாடு எதுவும் இல்லை என கூறியிருக்கும் ஜாதிக ஹெல உறுமய தாம் சிங்கள பௌத்தர்களைப் பாதுகாக்க எடுத்திருக்கும் நிலைப்பாட்டை இவ்வாறு விமர்சிக்கும் ஜே.வி.பி சிங்கள பௌத்தர்கள் தொடர்பாக தமது நிலைப்பாடு என்ன? என்பதை வெளியிடவேண்டும் என பதிலடி கொடுத்திருக்கிறது.

ஆனால் ஜே.வி.பி கூறுவது போல சிறுபான்மை மக்கள் தொடர்பில் இவ்விரு கட்சிகளுக்குமிடையில் வேறுபாடு எதுவுமுள்ளதா?

ஜே.வி.பியை பொறுத்தவரை தமிழ் மக்களுக்கோ, அல்லது ஏனைய சிறுபான்மை இன,மதத்தவருக்கோ தனித்துவம் எதுவும் இல்லை. அவர்களின் தனித்துவத்தைப் பேணக் கூடிய அமைப்புக்கள் எதுவும் அமைக்கப்படக் கூடாது. அதிகாரப் பரவலாக்கத்தை எதிர்க்கும் அது கிராம மட்டத்திலான அதிகாரப்பகிர்வு நாடு முழுவதற்கும் அது முன்வைப்பதாகவே கூறப்படுகிறது.

எவ்வாறாயினும் அது சிறுபான்மையினரின் பிரச்சினைக்கு வெளிப்படையான தீர்வு எதனையும் முன்வைக்கவில்லை. ஆனால் நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் சமவாய்ப்பு என்று சில வேளைகளில் கூறிக் கொள்வதுண்டு.

ஜாதிக ஹெலஉறுமய என்ன கூறுகிறது என்றால் -அது எங்கிருந்து தோன்றியதோ அதாவது சிகல உறுமய என்ன கூறுகிறதென்றால் இலங்கையில் வரலாற்று ரீதியாக அரசை நடத்தியவர் சிங்களவர்கள் மட்டுமே. இங்கே வாழும் தமிழ் முஸ்லிம் மக்கள் இனக் குழுக்களாகவே கருதப்படக் கூடியவர்கள். ஏனெனில் அவர்களுக்கு வரலாற்று ரீதியாக அரசு இல்லை எனக் கூறுகிறது. மேலும் மலையகப் பகுதியில் வாழும் தமிழர்களின் பிரச்சினையை அவர்களைப் பௌத்த சிங்களவர்கள் ஆக்குவதன் மூலம் தீர்த்துவைக்கலாம் எனக் கூறுகிறது. எனவே காலப்போக்கில் அனைவரையும் பௌத்த சிங்களவர்களாக்கிப் "பிரச்சினையைத் தீர்த்து வைப்பதே" அதன் கொள்கை எனலாம்.

எனவே அடிப்படையில் இவ்விரு கட்சிகளும் தமிழ்த்தேசிய இனத்தை அங்கீகரிப்பதையோ அவர்களின் உரிமைகளை ஏற்றுக் கொள்வதையோ மறுப்பவையாகவே உள்ளன. ஒன்று உரிமைகளை மறுக்கிறது. மற்றது பௌத்த சிங்களவர்களாக்கிவிட முனைகிறது. எனவே இவையிரண்டுக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் எதுவுமில்லை.

ஆனால் இவ்விருகட்சிகளும் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்று வந்தவர்கள் என்ற வகையில் மூன்றாம் நான்காம் இடங்களில் இருக்கின்ற நிலையில் இவர்கள் இணைந்து செயற்படத்தயாராக இல்லாது இருப்பதன் காரணமென்ன?

நீண்ட 25 வருடகால யுத்தத்தின் பின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் யுத்தத்தில் பெரும் தோல்வியைச் சந்தித்தனர். யுத்தம் ஓர் எல்லையை எட்டிவிட்ட நிலையில் தொடர்ந்து யுத்தத்தை நடத்துவதற்கான பொருளாதாரப்பலம் அற்றுப் போயிற்று. யுத்தத்தை மட்டுமல்ல நாட்டையே நிர்வகிப்பதற்கும் பலமில்லாது போயிற்று. பொருளாதார வளர்ச்சி எட்டிய மறைக்கணியம் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி என ஏற்பட்ட மிகக் கடுமையான நிலையிலேயே ரணில் விக்கிரமசிங்க சமாதான ஒப்பந்தம் ஒன்றுக்கு முன்வந்தார்.

ஆயுதக்கிளர்ச்சியில் ஈடுபட்டுத் தோல்வியுற்று கையறு நிலையில் நாடாளுமன்றத் தேர்தல் மூலம் அதிகாரப் போட்டியில் நுழைந்த ஜே.வி.பி இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாட்டுப்பற்றாளர் என்ற போர்வையுடன் பெரிய இரு கட்சிகளும் வெளிப்படையாகப் பேச முடியாத நிலையில் இனவாதத்தைத் தூக்கிக் கொண்டு ஜே.வி.பி புறப்பட்டது.

அதிகார ஆசை கொண்ட சு.கவுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டு இனவாதத்தின் தலைமைத்துவத்தைக் கைப்பற்ற ஜே.வி.பி முயல்கையில் அதற்குப் போட்டியாக சிகல உறுமய, ஜாதிக ஹெலஉறுமய என்ற பெயரில் பிக்குகளைக் களமிறக்கியமையானது அதற்கு பலத்த ஆத்திரத்தையும் ஏமாற்றத்தையும் கொடுத்தது.

கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டு ஜே.வி.பி 39 ஆசனங்களைப் பெற்றிருக்கலாம். ஆனால் தனித்துப் போட்டியிட்டு ஜாதிக ஹெல உறுமய ஒன்பது ஆசனங்களைப் பெற்றிருப்பதானது ஜே.வி.பி வகிக்கும் பாத்திரத்திற்கு மிகவும் சவாலானதே. இவ்வாறான நிலையில் ஜே.வி.பி தனது பிரதான போட்டியாளராக ஜாதிக ஹெல உறுமயவையே பார்க்கின்றது.

முன்னால் செல்வோரைத் துரத்திப் பிடிக்க ஜே.வி.பி க்கு பலத்த முயற்சி தேவைதான். ஆயினும் பின்னால் வருபவர் முந்திச் சென்று விடுவாரோ என்ற ஐயமும் ஜே.வி.பிக்கு உள்ளது.

அத்துடன் ஜே.வி.பியைப் பொறுத்தவரை ஜாதிக ஹெலஉறுமயவுடன் பேரம் பேசுவதைவிட சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியுடனோ பேரம்பேசுவது இலாபகரமானது. ஆட்சியதிகாரத்தில் ஏற அதுவே வழிசமைக்கும். ஜாதிக ஹெல உறுமயவுடன் இணைந்து ஆகப்போவது எதுவுமில்லை.

ஆக, இவ்விரு அமைப்புக்களைப் பொறுத்த வரையிலும் அவர்களுக்கு சிங்கள மக்கள் அவர்களின் உரிமை, நாடு என்பதிலெல்லாம் பெரிய அக்கறை எதுவும் கிடையாது. அவ்வாறு கூறிக்கொள்வதெல்லாம் வெளிவேடமே. அவர்களின் அக்கறையெல்லாம் அதிகாரம் ஒன்றே. அந்த அதிகாரத்திற்காக பேய் பிசாசுடனும் கூட்டுச் சேர இவர்கள் தயார்.

எவ்வாறு ஐ.தே.கவும், சு.கவும் இணைந்து செயற்பட முன்வரமாட்டாவோ அவ்வாறேதான் இவர்களும்.

**வேலவன்**

## நேர்நோக்கு

# போதைப் பொருட்பாவனையும் அரச கட்டுப்பாட்டுப் பகுதியும்

உலக அரங்கில் அதிகளவான மனித உரிமை மீறல்களுக்கும் போதைப் பொருட்களின் பாவனை, போதைப்பொருள் கடத்தல், படுகொலை மற்றும் குற்றச் செயல்களுக்கு பேர் போன இடமாக இலங்கையின் சிறிலங்கா படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் உள்ளன. கடந்த ஆண்டு சிறிலங்காத் தலைநகர் கொழும்பினை மையமாக வைத்து 7000 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 45 வீதமானோர் போதைப் பொருட்கள் கடத்தல் மற்றும் பாவனைகளுடன் தொடர்புபட்டவர்கள் என சிறிலங்கா குற்றத் தடுப்புப் பிரிவின் புள்ளி விபரங்கள் மூலம் அறியமுடிகின்றது.

சிறிலங்கா அரச கட்டுப்பாட்டுப்பகுதிகளில் ஒரு லட்சத்துக்கும் அதிகமானவர்கள் ஹெரோயின் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளனர். இவர்களில் அரைவாசிப்பேர் மேல் மாகாணத்திலும் கொழும்பு மாவட்டத்திலும் உள்ளனர். ஏனைய 50 வீதமானவர்கள் நாட்டின் ஏனைய இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் உள்ளனர். இலங்கைக்கு 10 வீதமான போதைப் பொருட்கள் விமானம் மூலமும், 90 வீதமான போதைப் பொருட்கள் கடல் வழியாகவும் கடத்தி வரப்படுகின்றன. இவற்றில் 10 வீதமான போதைப் பொருட்களே கைப்பற்றப்படுகின்றன. எஞ்சிய 90 வீதமானவை கள்ளச்சந்தையில் விற்பனைசெய்யப்படுகின்றன.

சிறிலங்கா அரச நிர்வாகத்தின் கீழ் போதைப்பொருள் கடத்தல்களை தடுக்கும் முகமாக சிறிலங்கா காவல்துறை சுங்கத்திணைக்கள காவல் அதிகாரிகள், சிறிலங்கா கடற்படை என பல்வேறு கட்டமைப்புக்கள் செயற்பட்டுவருகின்றன. இதைவிட தேசிய அபாயகர ஔடத கட்டுப்பாட்டுச் சபை உள்ளிட்ட உள்ளூர் வெளியூர் அமைப்புக்களும் செயற்பட்டு வருகின்றன.

இதன் பின்னணி பற்றி நோக்கும்போது, இவ்வாறு போதைப் பொருட் கடத்தல்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் சிறிலங்கா படையினராகவோ அல்லது படைகளில் இருந்து தப்பிச் சென்றவர்களாகவோ அதிகளவானோர் காணப்படுகின்றனர். இதைவிட போதைப் பொருட்கடத்தலை கட்டுப்படுத்த வேண்டிய சிறிலங்கா நிர்வாகக் கட்டமைப்புக்கள் கடத்தல்காரர்களிடம் சிறு தொகைப்பணத்தை வாங்கிக் கொண்டு கடத்தலகளை அனுமதிக்கின்றனர்.

இவ்வாறான காரணங்களினால் நாட்டில் வருடந்தோறும் போதைப் பொருட் பாவனை வீதம் அதி கரித்துள்ளது. கடந்த ஆண்டில் மட்டும் ஹெரோயின் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் 7000 பேர் வரையில் கைது செய்யப்பட்டுள்ளனர். இது கடந்த ஆண்டுகளை விட 20 வீதத்தால் அதிகரித்துள்ளது என சிறிலங்கா அரச குற்றத்தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இலங்கையில் மட்டும் வருடம் ஒன்றிற்கு போதைப் பொருட்களுக்கு அடிமையாகி 40 ஆயிரம் பேர் வரையில் உயிரிழக்கின்றனர். இதில் போதைப்பொருள் பாவனை மூலம் நோய்வாய்ப்பட்டும், போதைப் பொருள் பாவனையின் பின்னரான போதையில் தற்கொலை என்பன அடங்குகின்றன.

கடந்த 2004 ஆம் ஆண்டு நாடளாவிய ரீதியில் 10944 சுற்றிவளைப்புக்களில் 31 கிலோ 451 கிராம், 964 மில்லிக்கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது. 95 கோடி ரூபா பெறுமதியான போதைப் பொருளுடன் 11145 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் அதிகமானவர்கள் கொழும்பு நுகேகொட, கல்கிசை, களனி ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களாவர். இலங்கையில் பிரபல போதைப் பொருள் கடத்தல்களுடன் தொடர்புடைய முக்கியமான 143 பேர் இலங்கை அரசியல் வாதிகளினதும் அரசபடைகளினதும் அர வணைப்பில் இருந்து தமது கடத்தல் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த 1995 ஆம் ஆண்டு முதல் 136 வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதுவரை இலங்கையில் போதைப்பொருள் கடத்தலுடன் சம்பந்தப்பட்டு கைது செய்யப்பட்டவர்களில் 619 பேர் 15 வயதிற்கும் 19 வயதிற்கும் உட்பட்டவர்களாவர். 15539 பேர் 20 முதல் 24 வயதிற்கு உட்பட்டவர்களாகவும் 34664 பேர் 25முதல் 29 வயதிற்கு உட்பட்டவர்களாகவும் 55,452 பேர் 30 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும் கைதுசெய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளதுடன் 9 வெளிநாட்டவ்கள் உட்பட 49 பேருக்கு மரண தண்டனையும், 94 பேருக்கு ஆயுட் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. மரணதண்டனை விதிக்கப்பட்ட 9 வெளிநாட்டவர்கள் உட்பட்ட 49 பேரில் ஒரு இலங்கைப் பெண்ணும் அடங்கியுள்ளார். இது சிறிலங்கா அரச கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் நடந்தேறியுள்ளதாகக் கைது செய்யப்பட்டுள்ளனர். இது சிறிலங்கா அரச கட்டுப்பாட்டுப்பகுதிகளில் நடந்தவற்றில் மூன்றில் ஒரு பகுதியாகும்.

இது ஒரு புறம் இருக்க, சிறிலங்கா அரச படைகளின் கட்டுப்பாட்டுப்பகுதிகளில் நாளாந்தம் போதைப் பொருள் பாவனைகளின் விளைவாக கொள்ளைச் சம்பவங்கள், படுகொலைகள், திட்டமிட்ட ஆட்கடத்தல்கள், பாலியல் துஷ்பிரயோகங்கள் தொடர்ந்த வண்ணமுள்ளன.

இவற்றை கட்டுப்படுத்துவதற்கு சிறிலங்கா அரசின் கட்டுப்பாட்டுப்பகுதிகளில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுபவர்களின் அசமந்தப் போக்கும் பொறுப்பற்ற தன்மையும்தான் இவ்வாறான குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்கு பிரதான காரணங்களாகும். இன்று தமிழர் தாயகப்பகுதிகளில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இவ்வாறான குற்றச் செயல் அரிதாகவே உள்ளது. அல்லது இல்லையென்றே கூறவேண்டும்.

> **சிறிலங்கா அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஒரு லட்சத்துக்கும் அதிகமானவர்கள் ஹெரோயின் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளனர். இவர்களில் அரைவாசிப்பேர் மேல்மாகாணத்திலும் கொழும்பு மாவட்டத்திலும் உள்ளனர்.**

இதற்கு பிரதான காரணம் இப்பகுதிகளில் சட்டம் ஒழுங்கைப் பேணுகின்ற அமைப்புக்கள் நேர்த்தியான முறையில் சட்டத்தை நடைமுறைப் படுத்துகின்றமையாகும்.


இதேபோன்று சிறிலங்கா அரச நிர்வாகமும் லஞ்ச ஊழல்களை கட்டுப்படுத்தி சட்டத்தை உரிய முறையில் பின் பற்றினால் இவ்வாறு குற்றச்செயல் அதிகரிப்பை தடுக்க முடியும்.

**சு.பாஸ்கரன்**

# இந்திய-அமெரிக்க உறவும் ஈழவிடுதலைப் போராட்டமும்

இந்திய-அமெரிக்க உறவு பற்றிய வாதப்பிரதிவாதங்கள் தமிழ் புலமையாளர் மத்தியில் விடுதலைப் போராட்டம் தொடங்கிய காலத்திலிருந்து முக்கியம் பெறுகின்றதொன்றாகும். ஒருவர் பிராந்திய சக்தி மற்றவர் சர்வதேச சக்தி. இவ்விரு நாடுகளை அளந்துகொண்டே ஈழ விடுதலைப் போராட்டத்தை நகர்த்தும் சூழலுக்குள் தமிழர்களின் விடுதலைப் போராட்டமுள்ளது. அந்த வகையில் அண்மையில் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் நிகழ்ந்த இராணுவப் பாதுகாப்பு உடன்படிக்கை எத்தகைய புறச்சூழலை உருவாக்கியதென்பதும் அதன் தாக்கம் எப்படியானதென்பதையும் நோக்குவோம்.





முதலில் இரண்டு நாடுகளது கடந்த கால உறவு நிலையை மேலோட்டமாகப் பார்ப்போம். BJP அரசாங்கத்திற்குப் பின்பு ஆட்சியை அமைத்த காங்கிரஸ் கூட்டணியினர் அமெரிக்க எதிர்ப்பு வாதத்தை கொண்டவர்கள் போலவே காணப்பட்டனர். ஆனால் அமெரிக்காவின் எதிரியுமில்லை நண்பனுமில்லை என்ற நிலைக்குள் இருப்பது போலவே ஆட்சியாளரால் மட்டுமல்ல இந்திய புலமையாளர்களால் பேசப்பட் டது. அது இந்தியாவுக்குள்ளேயும் காங்கிரஸ் ஆட்சிக்கு ஆபத்து ஏற்படாத வகையிலும் மேலே தயார் செய்யப்பட்டிருந்தது. உண்மையில் காங்கிரஸ் கட்சியும் அதன் பிரதமரும் அமெரிக்காவுடன் நெருக்கத்தையும் உறவையும் பலப்படுத்த பல தடவை முயன்றதோடு பாகிஸ்தானுடனான அமெரிக்க உறவை முறிக்க பல தடவை முயன்றதை அண்மைக் காலத்தில் காணமுடிந்தது. இதற்கான அணுகுமுறை F-16 ரக விமானத்தை பாகிஸ்தானுக்கு வழங்குவது பற்றிய விடயத்தில் மிக நெருக்கடியை இந்தியா எதிர்கொண்டது. இந்த நெருக்கடியை தீர்க்க அமெரிக்கா இலகுவான சமன்பாடொன்றை வெளியிட்டது. பாகிஸ்தானுக்கு F-16 வழங்கினால் இந்தியா F-18 ஐ வாங்கலாம் என்பதுபோல் அச்சமப்படுத்தல் காணப்பட்டது.

வாஜ்பாய் அரசாங்கம் அமெரிக்காவுடன் செய்துகொண்ட பல இராணுவ ஆயுத தளபாட உற்பத்தி பற்றிய உடன்பாடுகளிலிருந்து புதிய அரசு விலகமுடியாமலும் அதே நேரத்தில் பாகிஸ்தானை முறியடிக்க முடியாதநிலையிலும் செயல்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆனால் மன்மோகன்சிங், அரசாங்கம் இடதுசாரிகளின் நெருக்கடிக்கு அஞ்சியே செயல்பட்டதுடன் தற்போது அமெரிக்காவின் நெருக்கடியை எதிர்கொள்ள முடியாமலேயே உடன்பாட்டுக்கு இணங்கியுள்ளது. இது பற்றி இடதுசாரிகள் கருத்துக் கூறுகையில் இவ்உடன்படிக்கை இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக அமைவதோடு ஏற்கனவே பாதுகாப்பு உடன்படிக்கையை கொண்டிருக்கும் பிலிப்பைன்ஸ், ஜப்பான், பாகிஸ்தான் போன்ற நாடுகளின் நிலையே அமெரிக்காவால் இந்தியாவுக்கு ஏற்படப் போகின்றது என எச்சரித்துள்ளன. மன்மோகன்சிங்குக்கு இடதுசாரிகளை சமாளிப்பதைவிட அமெரிக்காவை சமாளிப்பது கடினமாகவுள்ளது. F-16 ஐ வைத்துக் கொண்டு அமெரிக்கா இந்த உடன்பாட்டுக்கு இந்தியாவை வரவழைத்துள்ளது. பாகிஸ்தான்-இந்திய உறவுநிலையை தீர்மானிக்கும் வலு அமெரிக்காவிடமே உண்டு என்பது இப்போது தெளிவாகிவிட்டது.

எனவே இந்தியாவும்- அமெரிக்காவும் கூட்டாக ஆயுதங்களை உற்பத்தி செய்வதும் அவற்றை விநியோகிப்பதும் எட்டப்பட்ட பாதுகாப்பு உடன்பாட்டில் உண்டு என்றாலும் அதனால் ஏற்படப்போகும் இராணுவ- அரசியல் தன்மை எந்தளவுக்கு இந்தியாவுக்கு சாதகமானது என்பது கேள்விக்குரியதாகும்.

மன்மோகன்சிங் அரசாங்கம் ராஜீவ் காந்தியின் அமெரிக்கா சார்ந்த கொள்கையைப் பின்பற்றுவது போன்றே காணப்படுகின்றது. ராஜீவின் கொள்கைகள் ராஜீவ்காந்தி காலத்திலேயே செல்லு படியற்றதொன்றாக விளங்கியது என்பது சிங் ஆட்சியில் எவ்வளவு பிற்படுத்தப்பட்டதாக அமையுமென்பது தெளிவாகும். அதனால் அமெரிக்காவை நோக்கிய இந்திய ஆட்சியாளர்களின் போக்கு யதார்த்தத்திற்கு முரணாக அமைவதோடு தெளிவற்றதாகவும் அமைந்துள்ளது.

இந்திய-அமெரிக்கப் பாதுகாப்பு உடன்பாட்டில் இந்தியாவைவிட அமெரிக்கா அதிகம் சாதித்துள்ளது. இந்தியாவின் பாகிஸ்தான் பற்றிய கொள்கைக்கு வரையறை போடுவதில் அமெரிக்கா வெற்றிகண்டுள்ளது. இந்தியாவின் ஆயுத தளபாட உற்பத்தியின் வலுவை இனங்காண்பதில் அமெரிக்கா முன்னேறியுள்ளது. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கான உபாயங்களை இராணுவ - தொழில்நுட்ப அலைவரிசைக்கூடாக இனங்காண்பதிலும் அமெரிக்காவுக்கு இலாபகரமானதாகும்.

இது இவ்வாறு அமையும் போது அமெரிக்கர்கள் இன்னோர் அதிசயத்தையும் இந்தியாவுக்கு காட்டியுள்ளனர். எப்படி வீட்டோ அற்ற உறுப்புரிமையை இந்தியாவுக்கு வழங்க ஏற்பாடு செய்ததோ அதே போன்று இந்தியப் பிரதமரை ஸ்கொட்லாந்தில் நடைபெறும் G-8 மாநாட்டுக்கு அழைத்துள்ளது. இந்தியர்கள் பெரிதாகக் கருதலாம். மன்மோகன்சிங்கே முதலில் இம்மாநாட்டில் கலந்த இந்தியன் என்று கூறிக் கொள்ளலாம். ஆனால் இவையாவும் இந்தியாவை தமது செல்வாக்குக்குள்ளும் கட்டுபாட்டுக்குள்ளும் வைத்துக் கொள்ள அமெரிக்கா முயல்கின்றதென்பதே அடிப்படையான விளக்கமாகும்.

ஒருவகையில் பாதுகாப்பு உடன்பாட்டின் மகிழ்ச்சிக்கான விருந்தாகக்கூட அமையலாம். புஷ் நிர்வாகத்தில் வெளிவிவகார செயலாளராக பதவியேற்ற ரைஸின் இந்திய விஜயத்தின் பின்பு புஷ் இந்திய-அமெரிக்க உறவின் புதிய அத்தியாயம் தோன்றும் என்றார். தனது ஆட்சிக்காலத்தில் நெருக்கடிக்கான ஆரம்பமாகவே அமையுமென்பது கடந்தகால வரலாறு.


G-8 மாநாடு நடைபெறும் காலத்திலேயே ஷங்காய் மாநாடும் கஜகஸ்தான் தலைநகரத்தில் நடைபெறுகிறது. ஷங்காய மாநாட்டிலும் இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் கலந்துகொள்கின்றார். நட்வர்சிங் கலந்துகொள்ளும் அமைப்பு அமெரிக்காவின் ஆதிக்கத்தை தடுப்பதற்கான அமைப்பாகும். அதன் பிரதான குறிக்கோள் கிழக்கு ஐரோப்பாவுக்குள் மட்டுமல்ல மத்திய ஆசியக் குடியரசுகளுக்குள் அமெரிக்காவினதும், நேட்டோவினதும் ஊடுருவலைத் தடுப்பதற்கான அமைப்பாகும். அதற்கு இந்தியா கொடுத்த முக்கியத்துவத்தைவிட G-8 க்கு கொடுத்த முக்கியத்துவம் அதிகமானதென்பது விருந்தினரைக் கொண்டே அளவீடு செய்யலாம். G-8 என்பது மேற்கு நாடுகளின் வளர்ச்சியடைந்த நாடுகளின் அரசியலை பயன்படுத்துவது போன்றே தெரிகிறது. யாரும் கூறலாம் G-8 பொருளாதார மாநாடு ஷங்காய் அரசியல் மாநாடு என்று. ஆனால் அது உண்மையானதல்ல. G-8 என்பது மேற்கு நாடுகளின் வளர்ச்சியடைந்த நாடுகளின் அரசியல் நிகழ்ச்சித்திட்டத்தை சரி செய்வதற்கான சந்திப்பாகும். தற்போதைய மாநாட்டில் கூட ஆபிரிக்காவின் வறுமையை அழிப்பது எப்படி என்பதும், KOYOTO உடன்பாட்டில் அமெரிக்காவை கையெழுத்திட வைப்பதும் பிரதான நிகழ்ச்சித்திட்டமாகும்.



**ஐங்கரன்**

ஆபிரிக்கக் கண்டத்தையே அழித்தவர்களிடம் எப்படி வறுமையை ஒழிப்பது என்று கேட்பது வேடிக்கையாகவல்லவா இருக்கின்றது. இந்த நாடுகள் மீண்டும் ஆபிரிக்காவை சூறையாடுவதற்கு திட்டமிடப் போகின்றன. அதற்கு இந்தியாவையும் துணைக்கு அழைத்துள்ளனர். காரணம் இந்தியர்களும், சீனர்களும் கடந்த சில ஆண்டுகளாக ஆபிரிக்காவை சுரண்ட ஆரம்பித்துள்ளன. இதனை வளர்ந்த நாடுகளுடன் இணைந்து செயல்பட இந்தியர்கள் விரும்புவார்கள். அதனை பயன்படுத்தி இந்தியாவையும் தமது பட்டியலில் இணைப்பதோடு பயன்படுத்த G-8 நாடுகள் முடிவெடுத்துள்ளன. உண்மையில் ஷங்காய்க்கு இந்தியர்கள் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். காரணம் அதில் சீனா, ரஷ்யா முதன்மைவகிப்பதோடு அமெரிக்க கொள்கைக்கு எதிரான அணிபோல விளங்குகிறது. அப்படி ஒரு அமைப்பு பெரியளவில் வளர முடியாதென கூறினாலும் அதற்குரிய வாய்ப்புக்களை இந்தியாவின் ஆட்சியாளர்கள் தவறவிடுகின்றனர்.

இந்தியர்கள் இலங்கையோடு இராணுவப் பாதுகாப்பு உடன்பாட்டுக்கு முந்திக்கொள்ள முயலும் போது அமெரிக்கா இந்தியா வுடன் உடன்பாடு எட்டியுள்ளமை இந்தியத் தரப்புக்கு ஆச்சரிய மானதாகவே அமையும். இதனால் இலங்கையுடனான உடன்பாட்டுக்கான காலம் மேலும் தாமதமாகலாம். அமெரிக்க இலங்கை உறவு இலகுவாக கைவிடப்படக் கூடியதொன்றல்ல. இந்தியாவின் மேலாதிக்கத் தின் எல்லையை அமெரிக்கா பாகிஸ்தான் விடயத்தை வைத்திருப்பது போல் இலங்கை விடயத்தில் இல்லாது விட்டாலும் வைத்துக் கொள்ள முயலுகின்றது. அதற்கான தெரிவையே இந்திய அமெரிக்க உடன்பாட்டில் காணக் கூடியதாகும்.



இவ்விரு இழுபறி நிலையிலிருந்தும் ஈழவிடுதலைப் போராட்டம் நகர்த்தப்படுதல் வேண்டும். இரண்டு சக்திகளும் கூட்டாக நகர்ந் தாலும் தனித்தனியே நகர்ந்தாலும் ஈழ விடுதலைப் போராட்டம் தனித்துவமாகவே நகர்த்தப்பட வேண்டும்.



## வழிகாட்டிகள்

நாட்காட்டியில் நீர் செல்லும் நாளும், வந்தது
உன் கடிகாரம் பார்த்து
உனை அணைக்கும் வெடிகுண்டுடன்
விரை நீ ஆயத்தம்,
உன்னை வழியனுப்ப என்னால் முடியவில்லை.
உலகமே அதிசயமாய் பார்க்கும்,
உன்னை பிரிய என் உள்ளம் குமுறுகிறது.
கண்ணீர் கண்கள் ஊடாகக் கசிய
கண்ணீரைத் துடைத்து தோளைத் தட்டிச்சொன்னாய்,
உறுதி தளராத இறுதிவரை என்று
உன் பேச்சு என் இதயத்தை இறுக்கியது.
யாராலும் புரிந்துகொள்ள முடியாத பெரும் புயலாய்,
பகைவன் நெஞ்சை உலுக்க நீ சென்றாய்,.
ஊமைகளாய் உறங்கியபோதும்,
உங்கள் உணர்வின் உண்மைகள்
ஓர், இருவருக்குள் மௌனமாய்
வாழ்ந்துகொண்டுதான் இருக்கும்.
எங்கள் தேசத்தின் அத்திவாரங்களாய்
உறங்கிப்போன உங்கள் தியாகங்கள்,
எங்களை வழிநடத்திச் செல்லும்,
தமிழீழம் நோக்கி.

செ.கபிலன்

# அனுமார் கட்டிய அணையும், அதற்குப் பின்னரும்...

சு.ஞாலவன்

இலங்கைத்தீவுக்கும், இந்தியாவுக்கும் இடையில் மன்னார் வளைகுடாவையும், பாக்குநீரிணையையும் இணைத்தவாறு 167 கி.மீ. நீளத்துக்கு, பாரிய கப்பல் போக்குவரத்தினைச் சாத்தியமாக்கும் வகையில் சேது கால்வாய்த்திட்டம் முடுக்கி விடப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 3000000 அ$^{3}$ (30 லட்சம் கனமீற்றர்) அளவு கடலடித்திட்டு இதற்காக அகழ்ந்தெடுக்கப்பட உள்ளது. இதன் மூலம் கடலின் இயற்கையான அமைவு சிதைக்கப்பட்டு, சூழல் பாதிப்படைவதற்கு வழிகோலப்படுகின்றது என்ற குற்றச்சாட்டு பலதரப்பிலிருந்தும் எழுந்துள்ளது. ஆனாலும், எல்லாவற்றையும் ஆராய்ந்து உறுதிபண்ணிய பின்னரே இதனை நடைமுறைப்படுத்துவதாக இந்தியக்கப்பல் துறையமைச்சர் அழுத்திக் கூறுகின்றார்.





பாக்குநீரிணையில் காணப்படுவதாகக் கூறப்படும் அணை (நாஸா வெளியிட்டது)

அவர் கூறுவதை நம்பலாமா? தான் கூறுவதன் மீது அவருக்காவது நம்பிக்கை உள்ளதா?.. போன்ற தவிர்க்க முடியாத கேள்விகள் நமது மனதிலே எழலாம். 3000 கோடி இந்திய ரூபா செலவுசெய்து இப்பாரிய திட்டத்தினை ஆரம்பித்திருப்பவர்கள் எல்லாவற்றையும் கணக்கில் எடுக்காமலா விட்டிருப்பார்கள்! அதிலும் தகவல் தொழில்நுட்பத்தில் உலகின் மூலதனமாகக் கருதப்படும் அறிவுவளத்திற்குச் சொந்தமாயுள்ளவர்கள் உறுதி செய்ததாகச் சொல்லும்போது, நம்புவதற்கு நாம் ஏன் தயக்கம் காட்டவேண்டும்! எவ்வாறாயினும் அருகிலிருந்து அந்தரிக்கப் போபவர்கள் என்றரீதியில் எமக்கெழும் நியாயமான சந்தேகங்களைப் பற்றிப் பார்ப்பதற்கு முன்னர் உலக வரலாற்றில் முக்கியமாகப் பேசப்பட்ட வேறு 2 கால்வாய்கள் பற்றிக் காண முயல்வோம்.

வடகிழக்கு ஆபிரிக்க நாடான எகிப்திற்கும், இஸ்ரேலிற்கும் இடையில்தான் ஆபிரிக்கக்கண்டத்தினதும், ஆசியாக்கண்டத்தினதும் தொடுகை இருந்தது. மத்திய தரைக்கடலையும், செங்கடலையும் பிரித்த இந்த நிலப்பரப்பு இஸ்ரேலின் ஆளுகைக்கு உட்பட்டது. ஐரோப்பாவிலிருந்தும், வடஆபிரிக்காவிலிருந்தும் மேற்கொள்ளப்படவேண்டிய கப்பற்பயணங்கள் தெற்கூடாக தென்னாபிரிக்காவைச் சுற்றியே அமைந்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருந்த காலகட்டம் அது. எகிப்திய ஆட்சியாளர்களால் பலதடவை பேசப்பட்டிருந்தாலும் கால்வாய் ஒன்றை வெட்டுவதற்கான வேலைகள் 1858 இல் தான் பிரான்சு நாட்டின் ஆதரவில் முன்னெடுக்கப்பட்டு, 1869 இலே முற்றுப் பெற்றன. சுயெஸ்-கால்வாய் என அழைக்கப்படும் இதை 99 வருட குத்தகையில் பிரான்ஸ் உரிமை பாராட்டி வந்திருந்தபோதும், 1875 இலே பிரான்சின் பங்குப்பணத்தினை ஈடுசெய்ததன் மூலம் பிரித்தானியா அதன் உரிமையைத் தனதாக்கிக் கொண்டது. இருந்தபோதிலும் பிற்காலத்தில் சர்வதேச நாடுகள் மேற்கொண்ட உடன்பாட்டின்படி போரோ, சமாதானமோ எல்லாக் காலத்திலும் சுயெஸ்-கால்வாயைப் பயன்படுத்திக் கொள்வதற்கு சகலருக்கும் சம உரிமை உண்டென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தாலும், பிரித்தானியா தொடர்ந்தும் தனது ஏகபோகத்தை வலியுறுத்திக்கொண்டு வந்தது. பலவருடகால இழுபறிகளுக்குப் பின்னர் 1956 யூன் மாதத்தில் சுயெஸ்-கால்வாய் எகிப்திடம் மீண்டது. தனக்குரியதன் மீது தான் சொந்தம் கோரிக்கொண்ட எகிப்திற்குக் கிடைத்த இவ்வெற்றியைக் கண்டு சகித்துக்கொள்ள முடியாத பிரித்தானியாவும், அமெரிக்காவும் தங்களின் கைவரிசையை உடனேயே காட்டத்தொடங்கின. அந்த வகையில் நைல்நதியை இடைமறித்து எகிப்தின் பாலைவனப் பகுதிகளிலே பசுமைப்புரட்சியை ஏற்படுத்துவதற்கான பாரிய அசுவான் அணைக்கட்டுத்திட்டத்திற்குத் தாம் அளித்துவந்த உதவிகளை 2 நாடுகளுமே விலக்கிக்கொண்டன. தமது மேலாதிக்கத்தை மறுதலித்த எகிப்திற்குத் தகுந்த பாடம் கற்பிக்க வேண்டுமென்று பிரித்தானியாவும், அமெரிக்காவும் எண்ணியதே இதற்குக் காரணம். இதையடுத்து எகிப்து சுயெஸ்-கால்வாயைத் தேசிய உடமையென அறிவித்ததுடன், அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை 'அசுவான்' அணைக்கட்டிற்குப் பயன்படுத்தப்போவதாக அறிவித்தது. இந்த அறிவிப்பு வெளிவந்து 4 மாதத்திற்குள் இஸ்ரேலும், அதைத்தொடர்ந்து பிரித்தானியாவும் எகிப்தை ஆக்கிரமித்துக் கொண்டன. இருந்தபோதிலும் ஐ.நா. சபையின் தலையீட்டால் சுயெஸ்-கால்வாய் சகலருக்கும் உரியதொரு போக்குவரத்துப் பாதையாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இதற்குப் பின்னரும், இப்போதும் போர்க்காலங்களில் சுயெஸ்-கால்வாய் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததொரு பிரதேசமாக விளங்கிவருகிறது.

சுயெஸ்-கால்வாயைப் போலவே அதிகம் பேசப்பட்ட இன்னுமொரு கால்வாய் தென்னமெரிக்காவையும், வடஅமெரிக்காவையும் இணைக்கும் பனாமாவிற்குச் சொந்தமானது. மத்திய அமெரிக்க நாடாகிய பனாமா 3 மில்லியன் மக்களைக் கொண்ட இலங்கையை விட சற்றுப்பெருத்த பரப்பளவைக் கொண்டதொரு சிறிய நாடாகும். இங்கும் தனது மேற்குப்பகுதியிலிருந்து கடல் வழியே விநியோக மற்றும் வணிகப் போக்குவரத்துகளை மேற்கொள்ளலாம் என்ற அமெரிக்காவின் விருப்புக் காரணமாக 10 வருட காலத்திட்டத்தில் 1914ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. இதன்படி மேற்கே பசுபிக் சமுத்திரத்தையும், கிழக்கே கரிபியன் கடலையும் இணைக்கும் 64 கி.மீ. நீளமான பனாமா-கால்வாய் வெட்டப்பட்டது. இருந்தபோதிலும் காலவரையறையின்றி தொடர்ச்சியாக ராணுவ ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பனாமாவின் இறைமையைக் கேள்விக்குள்ளாக்கும் வண்ணம், அமெரிக்கா செலுத்தி வந்த மேலாதிக்கத்துக்கு பனாமாவில் எதிர்ப்பு அதிகரித்து வந்தது. இதன் தொடர்ச்சியாக 1989 இல் பதவியில் இருந்த கியூபா சார்பு ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக அமெரிக்கா ராணுவ ரீதியாகத் தலையிட்டது. சர்வதேச அனுசரணையுடன் 2000ஆம் ஆண்டு தொடங்கிய போது பனாமாக்கால்வாய் மீண்டும் பனாமா நாட்டின் உரிமையானது.

மேலே நாம் கண்ட 2 கால்வாய்களும் வெறுமனே குறுகிய போக்குவரத்துப்பாதைகள் என்றளவில் மட்டும் வைத்து நிறைவேற்றப்படவில்லை. அதற்கும் மேலாக அவற்றினூடாக எட்டப்படும் பொருளாதார, ராணுவ அனுகூலங்கள் காரணமாக பெரியளவிலான ராணுவ முஸ்தீபுகள் கைக்கொள்ளப்பட்டு காரியங்கள் சாதித்துக்கொள்ளப்பட்டன. ஜனநாயகத்திற்கான போர்கள் என வல்லரசுகளால் மகுடம் சூட்டப்படும் போர்கள் பெரும்பாலும் அல்லது முழுக்க முழுக்க தத்தம் பொருளாதார நலன்களைக் கருத்தில் கொண்டவையாகவே உள்ளன. அத்தகைய கால்வாய்களின் வழியிலே தொடரும் இன்னுமொன்றாகத்தான் சேது-கால்வாய்த்திட்டமும் அமைகின்றது.ஒரேயொரு அடிப்படையில் மட்டும் நாம் வேறுபாடு காணலாம் : ஏனைய 2 கால்வாய்களைப் பொறுத்தவரையிலும் லாபம் அடையும் தரப்புகளாக உலக நாடுகள் அனைத்துமே இருக்க, சேது-கால்வாய் மூலம் இந்தியா மட்டுமே லாபம் அடையப்போகின்றது. ஆமாம், இது தமிழீழம் உட்பட 3 நாடுகள் மட்டுமே சம்பந்தப்பட்ட விடயம். ஏனைய நாடுகளின் நெடுந்தூரப் கொழும்பா, தூத்துக்குடியா என்பது பெரிய விடயமாக இருக்கப்போவதில்லை. ஆக இந்தியாவின் தனிப்பட்ட பொருளாதார நலன்களைக் கருத்தில் கொண்டே இப்பாரிய திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது என்பதை உறுதியாகக் கூறிக்கொள்ளலாம். இத்திட்டத்தினால் தமிழீழம் எதிர்கொள்ளும் பொருளாதார சாதக, பாதகங்கள் பற்றி தற்போதைக்கு எதுவுமே சொல்வதற்கில்லை. காரணம் முக்கிய வடபிராந்தியத் துறைமுகங்கள் யாவும் ஆக்கிரமிப்புக்குட்பட்ட ராணுவப்பிரதேசங்களாக விளங்குவதுதான். அதேவேளை இத்திட்டத்தினால் முக்கியத்துவம் இழக்கப்போகும் கொழும்புத்துறைமுகத்தின் 'மூஞ்சை நீட்டலை' சரிப்படுத்திக்கொள்வதற்கான 'சூப்பித்தடி' ஆகவே, வைகோ அவர்களின் வலியுறுத்தலுக்குப் பின்னரும் கைவிடப்படாத சிறிலங்கா-இந்தியப் பாதுகாப்புத்திட்டத்தை விளங்கிக் கொள்ளலாம். இன்னும் இலங்கையை அண்மித்திருக்கும் தமிழ்நாட்டின் தென்கோடியிலுள்ள ராமநாதபுரம் மாவட்டத்தில் இந்திய விமானப்படையின் தளம் விஸ்தரிக்கப்படுவது இன்னுமொன்றைக் கோடிகாட்டுகிறது: தமிழர் விடயத்தில் இந்திய அரசு கடைப்பிடிக்கும் சாணக்கியமற்ற வரட்டுவாத 'மைனர்' போக்காலும், சிங்களத்தலைமைகளிடம் இயல்பாகவே காணப்படும் இந்திய எதிர்ப்புணர்வு கலந்த சந்தர்ப்பவாதப்போக்காலும், எங்கே இலங்கைத்தீவு தம்மை விட்டு மிகவும் 'அந்நியப்பட்டு' விடுமோ என்ற அச்சம் காரணமாக, ராணுவ ரீதியான பிராந்திய மேலாதிக்கத்திலும் இந்தியா அதிகம் அக்கறை கொள்வது தெரிகிறது. மடகஸ்கார் தொட்டு சிங்கப்பூர் வரைக்கும் இந்து சமுத்திரம் முழுவதையுமே கோலோச்சும் இந்தியக்கனவு பிரித்தானியாவுக்குக் கீழ் அடிமைப்பட்டுக் கிடந்த காலத்திலேயே இருந்ததுதான். அதன் மீள் புனர்நிர்மாணமாக இந்தியாவின் தற்போதைய வல்லரசுத்திட்டங்களை விளங்கிக்கொள்ளலாம்.

எவ்வாறாயினும் தற்போதைக்கு சேது-கால்வாய்த்திட்டம் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு விடயத்தில் என்ன வகையிலான பாதிப்புகளைக் கொண்டிருக்கப்போகின்றது என்பதே இக்கட்டுரையின் அடிமன அங்கலாய்ப்பாக இருக்கிறது. அறிவியலில் இந்தியா வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு இணையான நிபுணத்துவத்தைக் கொண்டிருப்பினும், அது முழுமையான அளவில் மக்கள் நலன் (இந்திய-இலங்கை) கருதிப் பிரயோகிக்கப்படுமா என்ற சந்தேகமே இக்கட்டுரையின் அடிவேதனை ! ஏனென்றால் 2000 ஆம் ஆண்டு வட இந்தியாவை பூமியதிர்ச்சி ஒன்று தாக்க இருப்பதாக இந்தியப் புவி யியல் ஆராய் ஞர்கள் முன்னறிவித் திருந்த போதிலும், குறித்த மாநிலத்தின் அரசியல்வாதிகள் சில பெரியபுள்ளி ஆசாமிகளிடம் சாத்திரம் பார்த்துவிட்டு, 'அப்படி எதுவும் நடக்க வாய்ப்பில்லை'யென வாக்குக் கிடைத்துவிட்ட திருப்தியில் வாழாதிருந்ததால் எந்தவித முன்னெச்சரிக்கையும், முன்னாயத்தமும் இல்லாமல் 30 000 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டிருந்தனர். இதற்கு முன்னர் 1984இல் இந்தியாவின் போபால் நகரிலுள்ள அமெரிக்க நிறுவனமான Union Carbide இற்குச் சொந்தமான தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட நச்சுக்கழிவு 2000 பேரைப் பலி கொண்டதுடன், 2 லட்சத்திற்கும் அதிகமானோரை மோசமான காயங்களுக்கும், சுவாசப்பை மற்றும் மரபியல் சேதங்களுக்கும் உட்படுத்தியது. பாதிக்கப்பட்டவருக்கான நட்டஈடுகள் கூட 21 வருடங்கள் கடந்த நிலையிலும் இன்னும்தான் உரியவர்களைப்

(21 ஆம் பக்கம் பார்க்க)



# காரசாரம்

# ஏறத்தெரிந்த விலைகளுக்கு ஏனோ... இறங்கத் தெரிவதில்லை

மறுபடியும் போர்மேகங் கருக்கட்டியுள்ளது. இந்நிலையில் அதை எதிர்பார்த்தே வாழ்ந்த வன்னிமக்கள் ஓரளவு சோர்வகற்றி நிமிர்ந்துள்ளனர். போர் தொடங்கும் என்ற 'அசுமாத்தம்' வருமுன்பே பொருட்களின் விலை ஏணியிலிருந்து மாடிக்குத் தாவி விட்டது. இந்தநிலையில் வன்னியில் வர்த்தகர்களுக்கு திறந்துவிடப்பட்டுள்ள கட்டுப்பாடற்ற சந்தைவாய்ப்பு மக்களை விழுங்க ஆரம்பித்துள்ளது.

விலைவாசி ஆடிமுதலாந்திகதி மாறிவிட்டது. சில சில்லறை மளிகைக்கடைகளில் குறிப்பாக ஒரு மீன் பேணி எண்பத்தைந்து ரூபாவிலிருந்து தொண்ணூற்றைந்து ரூபாவாக உயர்ந்தது. சீனி, மா என்பவற்றுடன் செத்தல் மிளகாய், மல்லி? மஞ்சள், பூடு போன்ற மளிகைச் சாமான்களை எட்டிப்பிடிக்கவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

எரிபொருளைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். பெற்றோல் நூற்றியைந்து முதல் நூற்றிப் பதினைந்துவரை விற்க மண்ணெய் முப்பத்துமூன்று முதல் முப்பத்தைந்துவரை, கூட்டுறவுக்கடைகளில் மண்ணெய் இப்போது விற்பதில்லை. பெற்றோல் குதங்களில் எப்போதும் என்பதை விட அநேக நாட்களில் பெற்றோல் கிடைப்பதில்லை. தனியார் கடைகளில் பெற்றோல் போத்தல்களில் மின்னுகின்றன.

கட்டுப்பாட்டு விலையில் விற்கவேண்டிய பொருட்கள் எப்படி வெளிச்சந்தையில் விற்கப்படுகின்றன என்ற கேள்வி அப்படியே நிற்கிறது. மாவின் விலை அதன் தட்டுப்பாடு நீங்கியதை அடுத்து குறைந்தாலும் பாண் உச்சத்தை தொட்டே விட்டது. சுமாராக ஒருகிலோ அரிசிக்கு நிகராக மூன்று இறாத்தல் பாணைக் கொள்ளலாம். ஆனால் அரிசி முப்பது ரூபா என்றிருக்க மூன்று றாத்தல் பாண் அறுபதுரூபா. வன்னியில் மூன்றுபோகம் விளையும் கிராமங்கள் அதிகம். ஆனாலும் பாணுக்கான கேள்வி குறையவில்லை.

ஊட்டச்சத்துள்ள உழுந்துச்செய்கை வன்னியில் ஓகோன்றிருந்தகாலம் ஒன்றுண்டு. இன்று உழுந்துச்செய்கைக்கான தரிசுகள் உழப்படாமலே கிடக்கின்றன. உழுந்து செய்கைபண்ணிய காலத்திலும் கூட உழுந்தை விற்றுப் பாண் வாங்குவோர் இருக்கவே செய்தனர்.

உண்மையில் வியாபாரிகள் இடைத்தரகர்களின் கை ஓங்கித்தான் உள்ளது. இவ்வுற்பத்திகள் இங்கு அதிகரித்திருந்தபோது அதற்குண்டான விலையைப் பெற்றுக்கொடுக்க ஆட்சியாளர்கள் முன்வரவில்லை. பயறு, சோயா போன்றவற்றையும் அவ்வாறே. அண்மையில் உள்ள கடையொன்றுக்கு ஒரு சிறுமியை அனுப்பி, ஒரு 'மிக்சர் பக்கற்' வாங்கிவா என நாற்பது ரூபாய் கொடுத்தனுப்பினேன். அவள் கடைவாசலில் நின்று திரும்பி என்னைப்பார்த்து 'இன்னும் அஞ்சு ரூபா தரட்டாம்' என்றாள். 'ஏனஞ்சுரூபா' என்று நின்ற இடத்தில் நின்றே குரல்கொடுத்தேன். கடைக்காரர் மேசையடியில இருந்தபடியே! எட்டிப்பார்த்துவிட்டு "ஆர்... உங்களுக்கே'' என்று கூறிவிட்டுக் கொடுத்துவிட்டார். எனக்கு நாற்பது ரூபா, பிள்ளைக்கென்றால் நாற்பத்தைந்து ரூபா? இன்னும் வேறு யார் யாருக்கு என்னவிலையோ?

இதே மிக்சர் வவுனியா நகரத்தில் ஐம்பது ரூபா. ஒருகிலோ சர்க்கரை கிளிநொச்சியில் அறுபது ரூபாதான். வவுனியா நகரத்தில் எண்பதுரூபா அன்றாடம் அழகுசாதனப்பொருட்கள் வாங்குவோருக்கும் ஒரு தகவல், வேர்க்குருப் பவுடர் கிளிநொச்சியில் ஐம்பதுரூபா, வவுனியா நகரில் தொண்ணூறுரூபா அதைவிட ஒருசோடி செருப்பு கிளிநொச்சியில் நூற்றிஅறுபத்தைந்து ரூபாவுக்கு வாங்கினேன். அதே செருப்பு நகரில் இருநூற்றி இருபத்தைந்துரூபா. அத்தியாவசியத் தேவைகளில் மருந்தும் அடக்கம். தொய்வு நோய்க்குப் பயன்படுத்தும் ஒருவகை மருந்தை கிளிநொச்சியில் விலை கேட்டேன். ஐநூறு ரூபா என்றார் கடைக்காரர். நான் "ப்பூ... வேண்டாம் நான் வவுனியாவில வாங்குவன்'' எனச் சவடாலாகக் கூறிவிட்டுப் போனேன். வவுனியாவில் பிரபலமான ஒரு மருந்துக்கடையில் அதை ஐநூற்றெழுபது ரூபாவுக்கு வாங்கினேன்.

கிளிநொச்சியிலும் கடைக்குக் கடை விலை மாறுகிறது. நல்ல வேளையாக மக்கள் கடை, மருதங் கடையென புதிதாக விலையை தீர்மானிக்கமுடியாத கடைகள் இருப்பதால் ஏமாற்றத்தை தவிர்க்க முடிகிறது.

உற்பத்தியைச் செய்பவரைப் பாதிக்காதவாறும் நுகர்வோரைத் திருப்தி செய்யுமாறும் ஒருபோதும் சந்தைகள் அமைவதில்லை. விலை என்பது ஒவ்வொரு கடைக்காரரின் தேவைக்குமேற்ப மாற்றமடைகிறது. இன்னும் கூட பொருளாதாரத் தடைக்குள் வாழ்வது போன்ற ஒரு பிரமை மக்கள் மனதில் தொடர்ந்தும் வாழ்கிறது. இதனாலேதான் ஏதோ போகட்டும் என்ற மனநிலையும் வருகிறது. வவுனியா நகரையும் விட யாழ்ப்பாணத்தில் விலை அதிகம். மொத்த வியாபாரிகள்தான் முடி சூடா மன்னர்கள்.

பொருட்களில் பலவற்றைக் கம்பனிகள் நேரடியாகவே விநியோகிப்பதைக் காண்கின்றோம். அப்படி விநியோகிக்கும் போது வர்த்தகர்களுக்கான கழிவு வழங்கப்படும். அதனால் பொருட்கள் பொதியிடப்பட்ட பொருட்களின் விலை பொதியில் உள்ளவாறே இருத்தல் வேண்டும்.

ஆனால் வர்த்தகர்கள் அதை விட்டுவிட்டு அல்லது அழித்துவிட்டு புதிய விலைப்பட்டியொன்றை அதன் மீது ஒட்டி விற்பனை செய்கின்றமை கண் கூடு. கேட்டால் அது வரிக்காசு என்பார்கள். வரி உங்களுக்குத் தான் விதிக்கப்பட்டது. அதை எங்களிடம் ஏன் திணிக்கிறீர்கள் என்று கேட்டால் பதில் வராது.

சாதாரணமாக ஒரு சோயாப் பக்கற்றில் போடப்பட்டுள்ள விலை ஒன்று. விற்கும் விலை ஒன்று. ஒரு நூடில்ஸ் பக்கற்றும் அப்படியே. ஒருபற்பசை ரியூப்பிலும் சவர்க்காரக் கட்டியிலும் கூட இதே நடைமுறையைக் காணலாம். ஒரு பொது உடமைக் கோட்பாட்டாளர் கூறினார் உற்பத்தியாளனே, நேரடியாகச் சந்தைப்படுத்தும் காலம் வரும் போதுதான் நுகர்வோர் நீதியான விலையில் பொருட்களைப் பெற முடியும் என்று.

இங்கே உற்பத்தி யாளனே என்று கூறுவதைவிட ஒரு பொருளின் உற்பத்தியாளனே இன்னொரு பொருளின் நுகர்வோனாகவும் இருக்கின்றான். எனவே ஒன்றுக்கொன்று மாற்றாகப் போய் விடலாம். இடைத்தரகர்களின் கையில் சிக்காமல் லாபம் தப்பிவிடும்.

வியாபாரிகள் தமது இஷ்டப்படி விலையை ஏற்ற தேவைகள் தானே காரணமாகிறது. ஒவ்வொரு குடும்பமும் தமக்குத் தேவையான எல்லாவற்றையும் உற்பத்தி செய்ய முடியாதுதான். தேவையான சில வற்றை கட்டாயம் உற்பத்தி செய்யலாம்.

இன்று உடன் தயாரிக்கக்கூடிய அல்லது வாங்கியபடியே விழுங்கக் கூடிய பொருட்களுக்கு கேள்வி அதிகம். அதற்கு வேலைக்குச் செல்லும் பெண்களின் அவசரமும் ஒரு காரணம்தான். அன்றாடம் மீன் சந்தையில் ஒரு நிலையான விலையைப் பார்க்க முடியாதது போல ஏனைய பொருட்களின் விலைகளும் மாறிக் கொண்டு போனால் எப்படி வாழ்க்கை நடத்த முடியும். எப்படி வரவு செலவைத் திட்டமிட முடியும். அதிகளவில் இதனால் பாதிக்கப்படுவது சாதாரண ஏழை மட்டுமல்ல பெருமளவு மத்தியதர வகுப்பினரையும் இது தாக்கத்தான் செய்கிறது. விலைகளைக் கட்டுப்படுத்த அரசாங்கங்களே திணறுகின்றன என்பது உண்மை தான். அதையேசாட்டாக வைத்துச் சிலர் தொந்திகளை உப்பவைப்பதும் நல்லதல்ல. நுகர்வோருக்குப் பாது காப்பு வேண்டும். நீண்டகாலத்துக்கு மக்கள் மக்களாக வாழ முடியாது. செய்யத்தகுந்த அதிகாரமுள்ளவர்கள் அதை செய்ய முன்வாருங்கள். நாங்களும் கொஞ்சம் ஆசுவாசமாக மூச்சுவிட.

-மாயா-



## விசுக்விசுக் விசாலாச்சி

வரவர மாமியார் கழுதை போல போறாவாம். அதென்னடாகதை. பிறகு விக்கிரமசிங்கர் ஒரு கதை பறைஞ்சிருக்கிறார். கட்டமைப்பு ஒப்பந்தத்துக்க ஏதோ கசடிருக் கெண்டு.ங. எங்களுக்கென்ன தெரியாதே. இவங்கள் கண்ட.... யைக் கவுண்டி ருந்து தின்னுறவங்களெண்டு. தூ... வேளைக்கொருவேசம் ஆளுக்கொரு நாடகம். இவயட நாடகங்கள் பறவாயில்ல.

ஹெல உறுமயக்காறர் இந்த முறை சனாதிபதி தேர்தல்லையும் குதிக்கப்போகினமாம். விடிஞ்சுது போ. இவை ஏன்ரா அப்ப தாய் தேப்பனோட இருந்து படிச்சு உத்தியோகமாகி ஒரு கலியாணத்த முடிச்சுப் பிள்ளை குட்டியளைப் பெத்து வளத்திருக்கலாமே, சந்ததியப் பெருக்கினதாயெண்டாலும் இருக்கும். நாடு நகரம், எல்லாத்தையும் 'பிணி' 'மூப்பு' சாக்காடெல்லாம் கண்டு பயந்து கட்டின பெண்டிலயும் பிள்ளையையும் விட்டிட்டுப் போனவர்புத்தர். இப்பத்தில் காலமெண்டா வழக்கப்போட்டுப் படிகட்டுவிச்சிருக்கலாம்.

அவரும் திரும்பி வந்து நல்ல உபதேசங்களைத்தான் நாட்டுக்கு அள்ளி வழங்கினவர். கனக்க ஏனடா, இலங்கைக்குந்த மதம் எப்பிடி வந்தது. கலிங்கத்து போரில வெண்ட அசோகன் அந்தயுத்தத்தில செத்துப் போனவையக்கண்டு பரிதவிச்சு இனிச்சண்டையே கூடாது சந்தோசமான சகவாழ்வு எல்லாருக்கும் வரவேணுமெண்டு கண்டு அதை தன்ர சிநேகிதன் தீசனுக்கும் மகிந்தன விட்டுச்சொல்லி விட்டவர்.

இதொரு ஆடிச்சந்திரிகையில நடந்தது. பொசனெண்டு விழாவெடுக்கிறநாள். அந்த தீசன்ர வழிவந்த பௌத்தம் தானே இலங்கையில கிடக்கு அப்ப இவை சிந்தின ரத்தமும் செய்த கொலையளும் காணாம கக்கின இனவாதத்துக்கும் மேலால இப்ப எலெச்சனில நிண்டு சனாதிபதியா வரப்போகினயாம். பிறகேனடா இந்தப் பாவியளுக்குக் காவி. ஒரு மொட்டை. அதை இதைக் கதைச்சு ஒரு மாதிரி மகிந்தரைக் கையுக்க போட்ட அம்மா இப்ப இன்னொருகதை விட்டிட்டா... அதாகப்பட்டது.

பிரபோ! தங்கள் சமாதானமான செய்கைக்கு நன்றி... தொடர்ந்தும் நீரே மந்திரி நானேராசா எண்ட அம்மா இளவரசுப் பட்டத்தை என்தம்பி அநுராவுக்குக் கொடுப்பதில் யாரும் எதிர்ப்புக் காட்டவே கூடாது. இது என் ஆணை. டம்டம்டம் எண்டு முழக்கிவிட்டா. பத்தும் பத்தாததுக்கு லாம்பெண்ணை ஊத்திப் பத்தவைக்கிறதில கதிராமக்குஞ்சி வலுவிண்ணன். இப்ப அவர் வெடிச்சிருக்கிறது சாதாரண சீனவெடியில்ல மூலை வெடி. சத்தம் பிய்க்குதெண்டா பாருங்கோவன். புலியள் ஆயுதமெல்லாத்தையும் எறிஞ்சுபோட்டு சனநாயக வழிக்கு வராட்டி ஒண்டுஞ் செய்யேலாதாம்.

எப்பிடியும் இந்தப் புலியள் பயங்கர வாதியள் தான் அவைய சனநாயக நீரோட்டத்துக்க கொண்டுவாற தெண்டா அவை ஆயுதங்களைக் கீழபோடவேணும் எண்டிருக்கார். கதிராமரா? கொக்கா? அதையேனப்பா இப்ப...ங "கிடக்கிறதெல்லாங் கிடக்கட்டும்" கிழவனத்தூக்கி மடியில வையெண்டு" இவரையும் இவற்றை கதையையும் பாத்தா வாற சனாதிபதித் தேர்தல் வரக்கு முன்னம் இவர் மந்திரிப் பதவியால வாற கொத்தல் குடையளெல்லாம் எடுத்துப் போடவேணும் மெண்டு பறந்து தான் திரியுது பாவம். என்ன செய்யிறது. பிள்ளையும் அங்கிளங்கிளெண்டு கத்தித்தான் திரியிறாள்.

அவளின்ர தலைப்புக்க நிக்குந்தனைக்குந் தான் அரோகரா-தலைப்பு விடுபட்....டிச்சோ அரகரோகரா... என்னவோடாப்பா. ரணிலனும் தன்னட்டவாரம் அழுதுதான் திரிகிறான். எப்படியும் உந்தச்சக்கர நாற்காலியில...என்ன சொன்னன் சக்கர நாற்காலியெண்டோ.... எட வலுக் குறைஞ்சவை போறதில்லயடா... இது வேற இதுகும் சக்கர நாற்காலிதான் இந்த கணனித்திரைக்கும் பின்னால இருக்கிறவை ஓடியாடித்திரிவினம் அது போல. பின்ன நாக்க மட்டுஞ் சுழட்டிக்கதைக்கத் தெரிஞ்சாப்போதாது.

நாலுபக்கமும் சுழட்டிக் கதைக்க வேணும். ஆங்... அது தான்ராப்பா சனாதிபதி இருக்கிற கதிரை இப்ப அதில இருக்கப் போட்டி கூடிற்றுது. பொடியா... கிட்டவா ஒரு கதை சொல்ல... இந்த சனாதிபதித் தேர்தல்ல போட்டி யாளர் கூடக்கூட இலாபந்தான்ரா. தேர்தல்ல மூண்டில் ரெண்டு பெரும் பான்மை.

பாக்கிறதில்லடா வாக்களிச்ச மக்கள் தொகையும் பாப்பினம் அம்பது வீதங் குறையக்கூடாதெண்டு கொப்பா சொன்னவரடா அப்ப ஜே.வி.பி, ஹெல உறுமய, யானைக் கட்சி, கதிரைக்கட்சி எண்டு கலகலக்கப் போகுது. அதுக்கு முதல் சனாதிபதிக்கெதிரா வழ்க்குப் போட வெளிக்கிடுறார் ரணிலார். போட ஏலுமே....ங சனாதிபதிக்கெதிராவோ.. பாப்பமே?




# அனர்த்தகால போர்க்கால விபத்துச்சேவை

மருத்துவத்துறை பரந்து விரிந்தது. ஏட்டு இலக்கிய மருத்துவத்தில் தொடங்கி நவீன கால விஞ்ஞான விரிவோடே பரந்துபட்டுக்கிடக்கின்றது. நிபுணத்துவம் ஒவ்வொரு துறையுடனும் தனியாக விரிவடைந்து செல்கின்றது. தனித்தனி மருத்துவ நிபுணர்களும், நவீன உபகரண வசதிகளுடனும் துறை சார்ந்த பிரிவுகளாக நாளும் வளர்கின்றன. சாந்தமாக நோயாளரை அணுகும் துறைதொட்டு பரபரப்புடன், பதகளிப்புடன் நோயாளரை அணுகவேண்டியன வரை சிகிச்சைமுறைகளும் தேவைகளும் வேறுபடுகின்றது. துறைகளிற்கு ஏற்றவாறு அங்கு பணிபுரிகின்ற வைத்திய நிபுணர்களிடம் வைத்தியம், ஏனைய உத்தியோகத்தர்களின் குண நலன்களும் வேறுபடுகின்றன.

நெருக்கிடைவேளையில் பணிபுரிவது என்பது மிகவும் கடினமானது, கனமானது. அவசர வேளைகளில் நோயாளர்களை காப்பாற்றுவதற்காக மேற்கொள்கின்ற நடவடிக்கைகள் துரிதமாக, விரைவாக, வேகமாக செய்யப்படவேண்டியவை. பொதுவாக, விபத்துச் சேவை பிரிவு (Accidentd unit) அதிதீவிர சிகிச்சைப் பிரிவு (Intenfive care unit) தீவிர சிகிச்சைப்பிரிவு (Emergency unit) என்பவற்றில் பணியாற்றும் சகலமட்ட பணியாளர்களும் ஏனைய மருத்துவப் பணியாளர்களிலிருந்து வேறுபட்டே காணப்படுவர்.

எமது உடலில் இயற்கையாகவே நெருக்கிடையான சூழ்நிலைக்கு (Stressful stnation) ஏற்றவாறு செயற்படுவதற்கு உடலில் காணப்படுகின்ற "அதிரனல்" எனப்படுகின்ற சுரப்பியினால் "அதிரனலின்" (Advenaline) "கோட்டிசோல்" (Cortisol) வகைக்குரிய ஓமோன்கள் சுரக்கப்படுகின்றன. இவற்றின் செயற்பாட்டினாலேயே நாம் வேகமாக, விரைவாக, சுறுசுறுப்பாகச் செயற்படமுடிகிறது.

பொதுவாக மருத்துவ ஆராய்ச்சிகளை எடுத்துக்கொண்டால் இராணுவவீரர்கள், சத்திர சிகிச்சை நிபுணர்கள், விபத்துச் சேவை பணியாளர்களில் இவ் ஓமோன்களின் செயற்பாடு மிகையாகக் காணப்படுவதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன. எனவேதான் இத்துறை சார்ந்தவர்களும் பொறுமையோடு வேலைசெய்ய வேண்டும் என்று முனைப்போடு வேலைசெய்தாலும் முடியாமல் போவதற்குக் காரணமாகின்றது.



சத்திரசிகிச்சை என்பது சாதாரண விடயமல்ல. தேவைக்கேற்ப முடிவுகளை மாற்றியமைப்பது எல்லாம் அது சார்ந்த நிபுணர்களின் கையிலும் சத்திர சிகிச்சை மேசையிலும் சில வேளையில் தங்கியிருக்கலாம். ஏனெனில் சத்திரசிகிச்சை சிக்கல் நிறைந்தது. இராணுவ முன்னரங்கச் சுருள் கம்பிகளுக்கிடையில் மறைந்து கிடக்கும் மிதிவெடியொன்றை பாதுகாப்பாக எடுக்க முயலும் கண்ணிவெடியகற்றும் வீரனின் பொறுமையைவிட சவாலானது. எத்தனைபேருக்கு பதில்சொல்லி, எத்தனை மென்மையான உருத்தெரியாத அமைப்புகளை பாதுகாப்பாக பக்குவப்படுத்தி, ஒரு உறுப்பை சத்திரசிகிச்சை மூலம் குணப்படுத்தவேண்டும். அத்துடன் ஒரே மனநிலையில் நின்று எந்நேரமும் பணியாற்றக்கூடிய தருணங்களும் அல்ல. இங்கு மனோபாவம் இந்தோனேசியாவின் சுமத்திரா தீவுகளில் ஏற்பட்ட நிலநடுக்கத்திற்கு ஒப்பாகவே இருக்கும்.

காலைப்பொழுதில் செய்ய வேண்டியதை செய்யாது விட்டால் அனுமதிக்கப்படுகின்ற நோயாளியின் உயிர் பிரிந்துவிடும். செக்கனுக்குச் செக்கன் பாதிக்கப்பட்டவர்களின் உடற்றொழிற்பாடுகள் மாற்றமடையும். இங்கு நோயாளர்களின் அறிகுறிகளை கொண்டே உடனுக்குடன் சிகிச்சை மேற்கொள்ள முடியும். இவற்றை இலகுபடுத்துவதற்காகவே தற்காலத்தில் பல்வேறுபட்ட சாதனங்கள் நவீன மருத்துவமனைகளில் பயன்படுகின்றன. இச்சாதனங்களின் உதவியுடனும் நோயாளி காட்டுகின்ற அறிகுறிக்களிற்கு ஏற்பவும் உடனுக்குடன் அவசர சிகிச்சை (Extented family) வழங்கப்பட்டு நோயாளி உயிரோடு காப்பாற்றப்படுகிறார்.

பெருமளவில் நோயாளர்கள் அனுமதிக்கப்படும் சந்தர்ப்பங்களில் பாரிய விபத்துக்கள், குண்டு வெடிப்புகள், இயற்கை அனர்த்தங்கள், தீவிபத்துக்கள் போன்றவற்றில் வேகமாகச் செயற்படாதவிடத்து அநாவசியமாக நிறைய உயிர்களை இழக்கும் சந்தர்ப்பம் ஏற்படும். உதாரணம் "சுனாமி" கடல் கோள் அனர்த்தத்தின் போது இதற்கென விசேடமாக பயிற்றுவிக்கப்பட்ட வைத்தியர்கள், வைத்திய நிபுணர்கள், தாதியர்கள் ஏனைய உத்தியோகத்தர்களின் ஒருங்கிணைந்த செயற்பாடு தேவை. இவ்வேளைகளில் இங்கு பணி புரிபவர்கள் பம்பரத்திற்கு ஒப்பான வேகத்திலேயே செயற்படுவார்கள்.

இன்றைய போக்கில் பார்த்தால் விபத்திற்கு உட்பட்ட ஒருவரை கொண்டுவந்த எல்லாரும் விபத்துச்சேவை பிரிவை முற்றுகையிட்டு வேடிக்கை பார்த்து நிற்பார்கள். இந்நேரத்தில் அவ்விடத்தில் குறித்த நோயாளிக்குரிய உடனடி சிகிச்சை மேற்கொள்ள முடியாமல் இருக்கும். நோயாளியுடன் வந்தவர்களை அப்புறப்படுத்துவது என்பது பெரும் போராட்டமாகவே இருக்கும்.

பல்வேறு பிழைகளையும், சிக்கல்களையும் பிரச்சினைகளையும் எடுத்துக்காட்டுபவர்களே பிழைவிடுகிறார்கள் என பிழைவிடாதோர் எண்ணுவதற்கு ஏதுவானது. அதுவே வரவேற்க வேண்டியது. ஆனால் குறித்த பிழையை உணர்த்தும் விதம் நேரம், இடம் என்பன மட்டில் மிகவும் விழிப்பாகவும் அக்கறையோடும் இருக்கவேண்டியது அனைவரதும் பொறுப்பாகும். பொறுப்புள்ளவர்கள் பொறுமை காப்பது மிகச்சிறப்பானது. "பொறுமை கடலிலும் பெரிது" "பொறுத்தார் பூமியாள்வார்" இதுவெல்லாம் சான்றோர் வாக்கு. போட்டோம் உடைத்தோம் என்றில்லாமல் சந்தர்ப்பம் வரும்போது பொறுமையோடு விளங்கக்கூடிய நகைச்சுவைப் பாணியில் குறித்த நபரும் ஏற்றுக்கொள்ளும் விதமாக புரிய வைப்பதே சிறந்தது.

ஏனெனில் சமூகத்தின் எல்லாத் தேவைகளிற்கும் எல்லோரும் தேவையானவர்களே. ஒருவரை விட்டு மற்றவர் தனித்து இயங்க முடியாது. இதனால்தான் மருத்துவத்துறையில் கூட்டுக் குடும்ப வாழ்க்கையை நாங்கள் (Extented family) ஊக்கப்படுத்துகின்றோம்.

விரல்விட்டு எண்ணக்கூடிய சில வைத்திய நிபுணர்களின் தன்னலமற்ற சேவையினை இன்று எத்தனையோயாயிரம் ஏழை பாமர மக்கள் தனியார் வைத்திய சாலையில் அன்றி அரச மருத்துவசாலைகளில் ஒரு சல்லி செலவும் இன்றி பிணிதீர்க்கின்றனர். இவர்கள் செய்யும் சேவை வெளி உலகத்திற்குத் தெரியாது இருக்கலாம். ஆனால் அதனால் பயன்பெற்றவர்கள் அதனை நிச்சயம் மறக்கமாட்டார்கள்.

பா. யூடிறமேஸ் ஜெயக்குமார்,
உளநல மருத்துவர்,
மாவட்ட வைத்தியசாலை,
கிளிநொச்சி.




# காத்திருந்தது போதும்



நமது நாட்டில் பல பிரதேசங்களில் எல்லாம் பஸ்ஸிற்காக நீண்ட நேரம் காத்திருப்பதே வழமையாகிவிட்டது. எந்த நேரத்தில் எந்த பஸ் எப்படி வருகின்றதோ அப்படி வந்தாலும் ஏற்றிக்கொண்டு செல்வார்களோ என்ற பல்வேறு கேள்விகளுக்கு மத்தியில் எமது பேருந்துப் பயணம் காணப்படுகிறது.

ஆனால் சீனாவில் இந்தப் பிரச்சினைக்கு சீனா தொழில் நுட்ப வியலாளர்கள் தீர்வு கண்டுள்ளனர். அதாவது பேருந்து தரிப்பிடங்களில் மின்னணுக் கருவி பொருத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் அடுத்த பேருந்து வரும் தகவலை அறிந்து கொள்வதோடு பின்வரும் வேறு தகவல்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

அதாவது பேருந்து தற்போது எந்தத் தரிப்பிடத்தில் உள்ளது. ஏனைய தரிப்பிடங்களுக்கு எந்த நேரத்திற்கு வந்து சேரும் போன்ற தகவல்களோடு செய்தி அறிக்கைகள், வானிலை முன்னறிவிப்புகள், போக்குவரத்து நிலைமை, பேருந்து எங்காவது பழுதாகி நின்றால் அது பற்றிய விபரம் போன்ற பல்வேறு விபரங்களை அந்த மின்னணுத்திரையில் பார்த்துக்கொள்ளலாம். போகின்ற போக்கைப் பார்த்தால் சின்னத் திரையின் தொடர்கள் கூட பஸ்தரிப்பு நிலையங்களில் ஒளிபரப்புச் செய்தாலும் செய்வார்கள்.

இதெல்லாம் எவ்வாறு என்று கேட்கின்றீர்களா? இவ்வாறுதான் பேருந்தில் அப்பிள் பழம் அளவில் ஒரு மின்னணுக் கருவி பொருத்தப்பட்டிருக்கும். இது தகவல்களை பேருந்து ஆணையகத்திற்கு அனுப்பிக்கொண்டிருக்கும். அதாவது வானொலி இணையத்தின் மூலம் இவ்வாறு பெற்றுக் கொள்ளப்படும் தகவல்கள் கணனி மூலம் ஆணையகத்தால் பேருந்து தரிப்பிடங்களில் பொருத்தப்பட்டிருக்கும் மின்னணுத் திரைக்கு அனுப்பப்படும். இதனை அங்கு பேருந்துக்காகக் காத்திருக்கும் பயணிகள் பார்த்து விபரங்களை அறிந்துகொள்வார்கள். காத்திருந்து காத்திருந்து காலங்கள் கழிக்க வேண்டிய தேவை இனி சீனர்களுக்கு இல்லை ஆனால் நமக்கு.....?

திட்டமிட்டபடி யூலை 13 ஆம் திகதி டிஸ்க்கவரி விண் கலத்தை செலுத்துவது என்ற முடிவுக்கு நாஸா தற்போது வந்துள்ளது. இதுவரை காலம் விண்கலத்தின் பாதுகாப்புத் தொடர்பான சிக்கல்களே தாமதத்திற்குக் காரணமாகும்.



# விபத்து தந்தபாடம்

கொலம்பிய விண்கல விபத்துக்குப் பின் நாஸா விண்கல பாதுகாப்பில் அதிக அக்கறை செலுத்தி வருகிறது. பனிக்கட்டி சிதைவுகள், விண்கலத்தின் வெப்பக் கூறுகள் என்பன இறக்கையின் முன்புற விளிம்பு முதலியவற்றை சேதப்படுத்தும் வாய்ப்பு வரையறை செய்யமுடியாத நிலையில் பொறியியலாளர்கள் இருந்தார்கள் என்றும் தற்போது அப்பிரச்சினைக்கு தீர்வு கண்டுள்ளதாகவும் நாஸா கூறியுள்ளது.

இதைவிட விண் கலத்தில் செல்லும் வீரர்கள் புதிய திருத்த வேலை உத்திகள் பலவற்றை பரிசோதனை செய்வதோடு விண்கலத்தின் வெளியகத்தினையும் பார்வையிடுவார்கள். மேலும் திருத்தமுடியாத சேதம் ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்டால் மீட்புக் கலம் ஒன்று அனுப்பப்படும் வரை அவர்கள் சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கியிருக்கும் வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகளை நாஸா செய்துள்ளது.

அந்த வகையில் தற்போது அனுப்பப்பட இருக்கின்ற விண்கலம் அதிக பாதுகாப்புடன் யூலை 13 இல் தனது பயணத்தினை ஆரம்பிக்க இருக்கின்றது.




# துயர் கோபுரங்கள்



நான் பேருந்திற்காகக் காத்துக் கொண்டிருக்கின்றேன். எனது கடைசி மகன் பக்கத்தில் அந்த ஆலயத்தை பார்த்துக்கொண்டு நிற்கின்றான். படிகளிலே செல்லையா அண்ணை இருக்கின்றார். அந்த கோயில் கோபுரங்களுடன் கனகச்சித மாக புனரமைக்கப்பட்டுக் காட்சியளிக்கிறது. இடப்பெயர்வுக்குப் பின்பு அந்தக் கிராமத்தில் சன சந்தடி குறைவு.

செல்லையாஅண்ணை! உதிலை இருக்கவேண்டாமென்று தர்மகர்த்தா சொன்னவர். உதிலை இனி ஒருத்தரும் இருக்கக்கூடாது. பக்கத்துக் கடைக்காரன் அதிகாரத் தொனியாய்.

யார்? யார்? பஞ்சாட்சரமோ? ...? .... குமர் ஒண்டைத் தெருவிலை விட்டிட்டு கோயிலையே கட்டுறான். இவன்களுக்கெல்லாம் செய்யிற ஊழல்களுக்கு கோயில் ஒரு சாட்டாய்ப் போச்சு. அந்தக் கோபுரத்தைப் பாருங்கோ என்ரைகண்ணுக்குப் பாவம் செய்த கோபுரங்கள். அந்தப் பிள்ளையை இப்படிச் சீரழிச்சுப்போட்டானே. இன்றுவரை அவள் நல்ல பிள்ளையாகத்தானே திரியிறாள். அவளுக்கு அதுக்கிளை "கல்யாண விசரிலை திரியிறாள்'' என்றும் படடங்கள் வேறை. உதிலை பொழுது போக்கிறாங்களோ? பாவங்களைத் தொலைக்கிறாங்களோ?

எனக்குள் ஆயிரமாயிரம் நினைவுகள். பாமா ரீச்சர் எவ்வளவு அழகானவர். தமிழ் மொழிப்பற்றும் ஆங்கிலத்திறமையும் உள்ளவர். பெற்றோர்கள் இருவரும் ஆசிரியர்கள். சகோதரர்கள் கல்விமான்கள். வசதியாய் வாழ்பவர்கள்.

அம்மா! யாரம்மா? சின்னவன் என்றாலும் எனது மகன் என்னைத் துருவி ஆராய்கின்றான்.

அம்மாவுக்கு படிப்பிச்ச ரீச்சர். உங்களுக்கு ஏன்ன படிப்பிச்சவா?

ஆங்கிலமும், தமிழும்.

பேருந்துவந்து நிற்கவும் நானும் மகனும் ஏறி உட்காருகின்றோம்.

பழைய படி நினைவுக்குதிரை பின்னோக்கிச் செல்கிறது. நான் படித்துக்கொண்டிருந்த காலம். மிக அழகான இளமையான ஓர் ஆசிரியை எங்களது வகுப்பறைக்குள் நுழைந்தார்.

வணக்கம் ரீச்சர்!

வணக்கம்! இருங்கோ பிள்ளைகள்.

அறிமுகங்கள். பாடங்கள் தொடர்ந்தன. தொடர்கதையாய் பாடசாலை வாழ்வு.

பாமா ரீச்சர் இடையே ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் பயிற்சி பெறுவதற்காகச் சென்றுவிட்டார். அப்போதுதான் அந்தக் கதை தெரிய வந்தது. முருகேசுவின் மகன் பஞ்சாட்சரத்தைக் காதலிப்பதாகவும், அவர் ஒரு திணைக்களத்தில் பணிபுரிவதாகவும் கதைத்தார்கள். பஞ்சாட் சரத்திடம் கார் இருந்தது. பாமா ரீச்சரும் அவருமாக பட்டினம், கலாசாலை, உல்லாசப் பயணங்கள் என்பதாகச் சுற்றுலா வந்தார்கள்.

மிக அழகும், அன்பும் தவழ்ந்த அந்த முகத்தை இன்னுமொருதரம் திரும்பிப்பார்க்க மாட்டோமா? என்று ஏங்கித்துடிக்கும் சகோதரர்களும் நல்நிலையில் கல்வியில் சிறந்து விளங்கினார்கள்.

பல வருடங்கள் பஞ்சாட்சரத்தைப் பார்க்கும்பொழுதெல்லாம் அந்த ஆணவத்தின் சாயலும் அரக்கப்பிடியும் கொண்டவர்போல் தோற்றமளிக்கும். பகட்டாக வீதியெங்கும் பவனி வந்துகொண்டிருப்பார். சிறியோர், பெரியோர் என்று யாரையும் அலட்சியம் செய்யும் போக்கு இருந்தது.

அப்போதுதான் அந்த இடி போன்ற செய்தி என்காதில் எட்டியது. பஞ்சாட்சரத்திற்கும் வேறொரு பெண்ணிற்கும் திருமணம் நிச்சயப்படுத்தப்பட்டிருக்கிறது.

பாமாரீச்சர் புழுவாய்த்துடித்தாள். பன்னிரெண்டு வருடக்காதல். அந்தக் காலம் மிகவும் கட்டுப்பாடுடைய காலம். பெண்கள் மிகவும் அடங்கி ஒடுங்கிப்போன காலம். பாமா ரீச்சரின் தந்தை சுந்தரம்பிள்ளை மிகவும் நல்லவர். முற்போக்கான சிந்தனையுள்ளவர். மகளுக்கு கடும் கட்டுப்பாடு விதிக்கவில்லை. ஏனெனில் அந்தக் காலத்திலேயே சுந்தரவல்லி ரீச்சரைக் காதலித்து திருமணம்செய்து இல்லறத்தில் நல்லறமாக்கியவர்.

சுந்தரம்பிள்ளை குடும்பமே தலை கவிழ்ந்தது. துயரம் கவ்விக்கொண்டது. காரணம் என்ன? ஊர்மக்கள் வாய்க்கு வந்தபடி கதைக்கத் தலைப்பட்டனர். அவன் ஏமாற்றிப்போட்டான். இவள் பொம்பிளை அடக்கம் ஒடுக்கமாய் இருந்திருக்கலாம் தானே. காரணம் பாமாரீச்சரின் தாய் சாதியில் கொஞ்சம் இழக்கமாம். இதைவிட வேற இடத்தில ஒரு பெண் இருக்கிறாளாம். அவரின் தாயின் விருப்பமாம். தாயின் விருப்பம்தானாம் கல்யாணம்.

சுந்தரப்பிள்ளை வாத்தியார், ஊரில் தெரிந்த நல்லவர்களை விட்டுக் கதைப்பித்தார். இதென்ன விளையாட்டா? ஒரு பெண்ணின் வாழ்க்கையுடன் விளையாடுகிறீர்களே? நம்பித்தானே, எனது மகளைப் பழகவிட்டேன்.

முடியாது, அவளை நான் விரும்பவில்லை.

அவள் விசரிக்கு வேற வேலையில்லை. பிரபல்யமாகப் பலபேரின் முன்னிலையில் கண்ணால் கண்டு காட்சியாக்கப்பட்டவற்றை தன் வாயால ஆண்மகன் என்பதால் மூடிமறைத்தார். பெண்ணைப் பெற்றவர் உடைந்தே போனார்.

சுந்தரவல்லி ரீச்சர் மகளை அடித்துத்துன்புறுத்தினார். மகளை திட்டினார். பேசினார். அறைக்குள் பூட்டிவைத்தார். எங்கள் மானத்தை வாங்கவந்தவளே! வசைபாடினார். கண்ணீர் கடலில் பாமாரீச்சர் மூழ்கிப் போயிருந்தார்.

பாமா ரீச்சரின் தமயன் நடேசன் கல்யாணம் நிச்சம் என்பது அறிந்தவுடனேயே, அந்த காலத்துப் பேச்சு சம்பிரதாயமானவை. அந்த வீடு நோக்கி ஓடினார். ஒரே ஊர். தெரிந்த மனிதர்கள். அவர் உள்நுழைந்ததும் வரவேற்க மறுத்த மனங்களாய் நின்றிருந்தனர்.

என்ன?

உங்களிடம் ஒரு கதை கதைக்க வேண்டும்.

என்ன கதைக்கப்போறியள்?

என்னுடைய தங்கச்சியைத் தான், உங்களுடைய மகளுக்குப் பேசியவர் காதலிச்சவர். பன்னிரெண்டு வருசக்காதல். அவள் அன்னம், தண்ணியில்லாமல் கிடந்து அழுகிறாள். இந்த ஊர் உலகமெல்லாம் தெரியும்தானே. உங்களுக்கும் தெரிந்திருக்கும். இதை அவர்களிடம் சொல்லிவிட்டு கொடுங்கோ. நான் உங்களுடைய பிள்ளைக்கு திறமான உத்தியோகத்திலை கல்யாணம் செய்து வைக்கிறன். உங்களுடைய பிள்ளை என் சகோதரிதானே. மிகவும் வேண்டுதலாக கண்கள் கலங்கக் கேட்கின்றார்.

சீச்சீ! உங்கண்டை தங்கச்சிக்கும் அவருக்கும் ஒரு தொடர்பு மில்லை. ஆட்களைப்பாருங்கோ. சும்மா தெரு வழியை திரிஞ்சு பிடிச்சுப்போடுகிற வேலை. பெரிசாப் பிடிச்சுப்போடவாக்கும். நாங்கள் அங்கை தான் கல்யாணம் செய்யப்போறம்.

ஒரு பொம்பிளை இப்படி இரத்தக் கண்ணீர் விட உங்கடை பிள்ளை என்னெண்டு வாழப் போகுது. இந்தப் பன்னிரண்டு வருஷமாய் அவள் எவ்வளவு கனவுகளைக் கண்டிருப்பாள். அந்தந்த நிலைமைகளிலை நின்று யார் யோசிப்பியள்? நான் வாறன்

ஆவலுடன் ஓடி வ தங்கையைக் கட்டியணைத்து அழுதார் நடேசன். புள்ளிமான் மாதிரி எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தவள். வீடே துக்க வீடாக மாறிவிட்டது. பஞ்சாட்சரத்திற்கு ஊரில் திருமணத்தை வைக்காமல் பட்டினத்தில் கொண்டு வந்து வைத்தார்கள். அன்று முழுவதும் பாமா ரீச்சர் தலைவிரி கோலமாக தன் வீட்டு வேலிகளின் நான்கு திசைகளையும் பார்த்து வெள்ளைப் புடவையுடன் அழுது கொண்டு நின்றதாகப் பார்த்தவர்கள் சொன்னார்கள்.

பாமா ரீச்சரின் தாய் எந்த நேரமும் மகளைத் திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தார். வெளியே தலை காட்ட முடியாத ஆத்திரமெல்லாம் மகள் மேல் கொட்டினார்.

பாமா ரீச்சரிற்கு மனதில் ஒரு சபதம் பிறந்தது இவனுடன் சேர்ந்து திரிந்த இந்தக் காலங்கள் ஒரு கயமைக்காய் என் ஆத்மாவைப் பறிகொடுத்த அந்த வீண் பொழுதுகள் இனிமேலும் இன்னொரு கயமைக்கு இடம் கொடுக்கலாகாது. தலை விரி கோலமாக அந்த கோயிலுக் குள் நுழைகின்றார். அந்த மூலஸ் தான கர்ப்பக்கிரகத்தை நோக்கி தலை விரி கோலமாக கோயிலிலே சபதம் எடுத்தார்.

பஞ்சாட்சரமும் தனது புது மனைவியுடன் அந்த அம்மன் கோயிலுக்குள் சித்தியையும், புத்தியையும் வேண்டிப்போலும் உள்நுழைகின்றார். யார் அந்தப்பெண்? வெள்ளைச் சேலையுடன் தலைவிரி கோலமாக சந்நிதானத்திலே பூமாதேவியைப் பார்த்தபடி என்னவோ சபதத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறாள்.

அவருக்கு விளங்கிவிட்டது. பல வருடங்கள் பழகியவர்தானே. இதற்கு யார் பொறுப்பு? இந்தக் குத்து விளக்கின் மாறாத, ஆறாத துயரத்திற்கு யார் காரணம்.? நானே தான். மனச்சாட்சி மறுக்கித்தவிக்கின்றது. அந்த இதயமற்ற மனிதரால் ஆலயத்தில் நிற்கமுடியவில்லை.

பாமா ரீச்சர் தொடர்ந்து பிரமச்சாரியம் காத்து அவரது வயதில் அறுபது வருடங்கள் கழிந்துவிட்டன. இந்த அம்மன் கோயிலுக்கு வரும் பொழுதுகளில் பாமா ரீச்சரை பஞ்சாட்

## இனியவள்

சரத்தின்மனைவி அன்றிலிருந்து இன்றுவரை அவள் கல்யாண விசரிலை திரியிறாள் என்று கூறுவது வழமையாகிவிட்டது. பழைய நினைவுகளில் பாமா ரீச்சர் தமது கணவரை சொந்தமாக்கி விடுவாளோ எனும் பயம் இன்றுவரை இருக்கின்றது.

இதே மாதிரித்தான் எங்கட சாம்பசிவம் அண்ணையின் பிள்ளை பாரதியையும், பாமா ரீச்சரின் வாழ்வில் எவ்வாறு விளையாடினார்களோ, இப்போ பாரதியின் வாழ்வில் கதை கட்டி ஒரு விளையாட்டு நடத்தியாகி விட்டது. பாரதியும் கோயில் என்று ஓரிடமும் வெளிக்கிடுவதில்லை. அவளும் கல்யாண விசரிலைதான் கோயில் வழிய திரியிறாள் என்று கதைத்திருக்கினம்.

அதைவிட அன்பான கமலா அக்காவே, அன்று வழியில் கண்டு விட்டு முட்டுக்குணம் மாதிரி இருக்கு என்றிட்டு, காதல்தோல்வி என்றால் இப்படித்தான் வரும் என்று சொல்லியிருக்கிறா. இதை யார் கதைகட்டித் தேவையில்லாமல் பரப்பினது.

பாரதி தந்தையிடம் சொல்லும் போதே உடைந்தேபோனாள். அப்பா, இப்பிடியெல்லாம் கதைக்கினமே. இந்தத் தெருவெல்லாம் அவள் ஓடித் திரிந்தகாலங்கள். அப்பா! உங்களுக்கு இயலாது. நானே சைக்கிளிலை போய்ச் சாமான் வாங்கியாறன். உந்தக்கடை, ஆஸ்பத்திரி, எந்த வங்கி என்றாலும் அவள்தானே முன்னுக்குப்போவாள்.

பாரதியும், தாயும் கோயிலுக்கு வெளிக்கிடும் பொழுதெல்லாம் சாய் மனைக் கதிரையில் படுத்தபடி 'மனமது செம்மையானால் மந்திரம் செபிக்கவேண்டாம்' பகிடி பண்ணுவார். கோயிலிலை சேலை, நகையைக் காட்டத்தானே சனம் வருகிறது. ஊர்க்கதை கதைக்க, விடுப்புப் பார்க்க, விண்ணானம் அளக்கத்தான் சனம் வாறது. ஆனால் அவருக்கு கடவுள் பக்தி இல்லை என்றில்லை. வீட்டிலேயே தனது தியானத்தை முடித்துக்கொள்வார்.இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் வீடு வாங்கி வந்தபோது தான் எல்லாமே நடந்தது. கொஞ்சக் காலங்களுக்கு முன்புதான் மணி மேகலை குடும்பமும் இவர்கள் வீட்டிற்கருகே குடிவந்தது. பாரதியை தந்தை சாம்பசிவம் பொத்திப் பொத்தி வளர்ப்பவர். என்ன வடயமாகிலும் உரப்பி ஏசுவாரேயொழிய நினைவு தெரிந்தநாள் களிலிருந்து ஒரு நாளுமே கை நீட்டியதில்லை.

சகோதரர்களும் வெளிநாட்டில். இவள் தனி ராச்சியமாய் வீட்டிலிருந்தாள். அயலவர்களில் ஓரிருவருடன் மட்டும் அந்நியோன்யமாய் பழகிய காலம் அது.

ஒருநாள் மணிமேகலையின் மகன் இவர்கள் வீட்டிற்கு பற்றுச்சீட்டு விற்பதற்காக வந்திருந்தான். சிறு பையன் உபசரித்து அனுப்பியிருந்தார்கள். பின் பரஸ்பரம் பழக்கமாகி விட்டார்கள். கண்டால் கதைப்பது, நிற்பாட்டிக்கதைப்பதுமாய் பழக்கமாகி விட்டது.

அப்போதுதான் அந்த கோயில் புனரமைப்புச் செய்வதாக, பெரியளவில் திட்டங்களைத் தீட்டிக் கோயில் கட்டுவதற்காக ஆயத்தம் செய்தார்கள். நிதிகள் திரட்டிக் கொண்டிருந்தார்கள். அனுசரணையாக பாரதியின் பெரிய தகப்பன் வீமனும் பண வசதிகளால் படைபலம் பெற்றவர். இவர்கள் திருப்பணியுடன் வம்பளப்புப் பணியும் தாராளமாகச் செய்துவந்தகாலம்.

வீமனுக்கு எப்படியாவது பாரதி வீட்டாரை கீழே நிறுத்திப்பார்ப்பதில் பெருமை. இந்தப் பட்டினத்தில்தான் அநியாய வல்லாதிக்கத்தை இக்குடும்பத்தவர் மேல் வசதி வாய்ப்புகளிற்கேற்ப செய்து வந்திருந்திருக்கிறார். அவர் யாது செய்தாலும், அவரிடம் பெற்றவர்கள் அவர் தம் செயல்களைப் பேணிப்பாதுகாப்பவராயிருப்பவர்கள். அந்தக் குடும்பத்தை சதா வருகிற போகிறவர்களிடம் கரிச்சுக் கொட்டிக்கொண்டிருப்பவர். மட்டம் தட்டுவதில் பெருமை கொள்பவர்.

பாரதி தெருப்படலையில் சிநேகிதி ஒருவருடன் கதைத்துவிட்டு வீட்டிற்குள் திரும்ப மணிமேகலை பாரதி உங்களுக்கு பெரிய பெரிய அந்தஸ்திலையே கல்யாணம் பேசுகினம்? மெய்யே?

இல்லை எனக்கு அதைப்பற்றித் தெரியாது. உதுகள் பற்றி அப்பாவோட கதையுங்கோ. பாரதியால் இதைப் பற்றி பிழையாக நினைக்கமுடியவில்லை. கல்யாண வயது வந்தால் யாரும் கேட்பது சர்வசாதாரணம் தானே. பேசாமல் இருந்து விட்டாள். பிறகு ஒருநாள் நீங்கள் எவ்வளவு சீதனம் கொடுப்பியள்? வங்கியிலை எவளவிருக்கு? இப்போ வங்கியில பதினைஞ்சு லச்சம்தன்னுமிருக்கே? வேலணை பொம்பிளையொன்றை நல்லூரிலை பெண் பார்த்தவை. பொம்பிளை பொதுநிறம்தான். யாழ்ப்பாணத்திலை வீடும் காசு நாற்பது இலட்சமும், நகையுமாம். இருபத்தைஞ்சு இலட்சம் இனாம். நாங்களும் மகனுக்கு அப்படித்தான். அதுதான் இப்போ நடக்கு.

பாரதிக்கு இக்கேள்வி பத்திக் கொண்டு வந்தது. அநாகரிகமான கேள்விபோல் தெரிந்தது. என்னிடம் ஒன்றுமில்லை. எல்லாம் வீடு வாங்கியாச்சு. வேணுமென்றே சொல்லி வைத்தாள்.

அடுத்தநாள், கனகாலமாய் பழகிய சுகந்தி அக்கா உங்களைப் பற்றி அன்றி சொன்னவா. குறையாச் சொன்னவா.

என்ன சொன்னவா?

உங்களிட்டை ஒன்றுமில்லையாம் கல்யாணத்திற்கு பெரிய நினைவுகளிலை இருக்கிறியளாம். இந்த வீடும் கடனாம். நினைச்சால் போல நடக்குமே?

ஏன் பெரிய நினைவென்று இவவிட்டை வந்து பெரிய மாப்பிள்ளை பிடிச்சுத்தரச்சொல்லிக் கேட்டனானே. அன்பாய், பாசமாய் பழக இப்படியொரு கதையா, மனம் நோகிறது.

பின்பும் சிவசக்தி பெரியம்மா வந்தபோது சொன்னா, அங்கே கோயிலே கட்டினம்-அங்கே குமர்களுக்கு கோள், குண்டனி சொல்கினம். என்னவாம்? பஞ்சாட்சரத்தின் மனைவி. பாரதிக்குப் பெரிய பெரிய இடத்திலை கல்யாணம் பேசினமாம். பொம்பிளை கறுப்பாம். அதைவிட பாரதியின் சிறிய தாயும் வேலைவெட்டி தேவையில்லை அவவுக்கு யாரும் வீட்டோட ஒருத்தனை பார்த்துச் சொய்யுங்கோவாம். என்னத்திற்கு இந்தப்பிள்ளையோட இப்படி நிற்கினம்? தாயின் வருத்தத்தோட போராடி படித்து இப்படி வந்திட்டினம் என்றுதானே. பாரதியைப் பற்றி நெளிக்கினம் கோயிலடியில்.

பாரதியின் தந்தைக்கு ஆத்திரம் வந்திருக்கவேண்டும். தரகர்மார் கொண்டுவாறதை நான் கொண்டு திரிந்து பார்க்கிறது வேலை. என்னுடைய பிள்ளையை படிப்பிச்சதுதான். சகோதரங்கள் கஷ்டப்படுறது, முதல் வேலை அவளுக்கு நல்லதொரு வாழ்க்கை தேடிப்போட வேண்டும். ஒரு தந்தைக்குரிய ஆதங்கம் எங்கட வீட்டு அலுவல் இவையக் கதைக்கச் சொல்லியிருக்கே. கோளும் குண்டனியும் சொல்லிச் சொல்லித்தானே இந்தப் பிள்ளையின்ரை வாழ்க்கை இப்பிடி இழுபட்டுக்கொண்டு போகுது.

கோயில் கட்டும் வேலைகளில் பெரியப்பா வீமனும் சாம்பசிவம் குடும்பம் பற்றி தூற்றுவதும், மட்டம் தட்டுவதும், தன் பொறுப்பில் எல்லாம் நடப்பதுபோல் எகிறிக் குதிப்பதுமாய் காலம் கடத்தியிருந்தார்.

சாம்பசிவத்தார் கெட்டவர். அவர் ஒருவரோடையும் ஒத்துவரார். பொய்ச் சாட்டுகள், வருகின்ற தரகர்மார் எல்லாம் சரி.போவார்கள். வருவார்கள். தாய்க்கு என்ன வருத்தம், எத்தனை தடவைகள் இவற்றையெல்லாம் கண், காது, மூக்கு வைத்து யார் சொல்வது? தாயின்ரை ஆட்களெல்லாம் குறை சொல்லுகினம்.

கடவுளே! அதைக் கூறும் பரிகாசங்கள். பின்பு ஒரு நாள் மணிமேகலை பாரதியிடம் எங்கள் வீட்டிற்குப் பக்கத்து ஊரிலை இருந்தவை. பொடியன் பட்டதாரி மாஸ்டர். அவையள் ஐந்துலட்சமோ, பத்துலட்சமோ என்றாலும் கல்யாணம். செய்வினமாம். செய்யுங்களன். அதில் இல்லாமையை மறைத்துச் சுட்டிக்காட்டி

மாப்பிளை வீட்டாரின் தந்திர வேலைகளை வெளிப்படுத்திக்காட்டியது.

இந்தச் சம்பவம் அப்போது பாரதி பல்கலைக்கழகத்தில் மூன்றாம் வருடத்தில் படித்துக்கொண்டிருந் தாள். அந்தச் சம்பந்தம் வலிய வந்தது. சாம்பசிவத்தாரின் அன்பிற்கும் மரியாதைக்குமுரியவரான அந்த வங்கியியலாளர் குறிப்புடன் வந்தார். பாரதிக்கு ஒரு சம்பந்தம். பொடியன் பட்டதாரி படிக்கிறார். சாம்பசிவத்தார் உஷாரானார். முதல் முதல் வீடுதேடி வந்தது. பொடியன் குணம் நடை நன்று என்றார்கள். ஓடி ஓடிப் பொருத்தம் பார்த்தார். பொருந்தவுமில்லை. சாம்பசிவத்தார் திருப்பிக் குறிப்பைக் கொடுத்துவிட்டார். பையன வீட்டாரே விநாசித்தம்பி வாத்தியாரிடம் கொண்டு சென்று காட்டும்படி கூறினார்கள். சாம்பசிவத்தார். முத்தையா மாமாவை அங்குவரும்படி கேட்டார். அவரும் மறுத்து விடவே தனது நண்பர் ஒருவரின் உதவியுடன் அங்கு சென்றுவிட்டார். குறிப்பும் பொருத்தமாகிவிட்டது.

பேச்சுகளுக்கு வேறு இடம் போகவேண்டியிருந்தது. ஒரு தெரிந்த பெண். சாம்பசிவத்தாருக்கு எவளவோ வயதில் குறைந்த மகள் போன்ற பெண். இவரைக் கண்டதும் மிக அலட்சியமாக இருந்தாள். பெண்ணைப் பெற்றவராச்சே சம்பிரதாயமாகப் பேச்சைத்தொடங்கினார்.

ஒன்றும் தெரியாதவள்போல் தூசியாய் பார்த்தாள் அந்தப்பெண். உங்கடை சொந்தக்காரப் பொடியனாம். மகளுக்கு குறிப்புப் பார்த்தது. ஒரிடமும் பொருத்தம் இல்லை யாம். விநாசித்தம்பி மாஸ்டர் செய்யச் சொன்னார். அப்போது அங்கு ஒரு இளைஞனும் இருக்கிறான்.

அது இப்போ நாற்பத்தியெட்டு இலட்சம் கோள்வியிலை நிற்குது. நாங்கள் நினைச்சது ஈ.எஸ். கர்ணனின் மற்றப்பேத்தி யென்று. உங்கண்டை வீட்டிலையென்று எங்களுக்குத் தெரியாது.

நீங்கள் என்ன கொடுப்பியள்? இளக்காரமான கேள்வி.

நான் பிள்ளைக்கு யாழ்ப்பாணத்தில வீடு வாங்கிக்கொடுப் பன். காசும் கொடுக்கிறதுதான். அவள் ஒருத்திதானே.

எங்களுக்கு காசாகவேண்டும். வீடு வேண்டாம்.

அந்தப்பெண் கதைத்த கதைகள் சாம்பசிவத்தாருக்குப் பிடித்ததாயில்லை. ஈ.எஸ்.கர்ணனாம். தனக்குள் நினைத்து கொண்டார். அப்பன் பெயர் தெரியாதவர் என்று எல்லோரும் பகிடி பண்ணிய காலத்தில், ஐந்து பெண்ணில் ஒருத்தியை முதல் பெண்ணை, முதல் மாப்பிளையாகக் கைபிடித்தவர். தனது சகோதரர்கள் மணமுடித்த இடங்களை நோக்குகிறார். தனது தந்தையார் குறிப்பைப் பற்றி யோசிக்காதவர். யாரும் முதல்வந்து கேட்டால் பொருள் பண்டம் ஒரு கதையுமில்லை. ஓம் தான் பெரிய மச்சான்எல்லோருக்கையும் அவன் தானே வடிவானவன் இழுத்தபொழுது, ஒருதரம் தான் பேச்சு என்றாகிவிட்டது. சாம்பசிவத்தாரின் மனைவியும் அந்தக் காலத்தில் அதிசய அழகு ராணியாக வலம் வந்தவள். வசதியின்மை, எவற்றையும் பாராட்டாது கர்ண வள்ளலுக்கு முதலெழுத்துக்களைக் கொடுத்த அந்தக்காலத்து முதல் மாப்பிள்ளை சாம்பசிவத்தார்.

பின்பு குறிப்பு பொருத்தமில்லை. சம்பந்தம் குழம்பி விட்டது. காசாக அறுபது இலட்சம் கட்டுவினமோ. அப்படி யென்றால் சொல்லுங்கோ.

சாம்பசிவத்தார் துள்ளினார். அவன் யாரோ காசைக் கட்டவாறானாக்கும்.நான் கதைக்கும்போது நின்றவராம் மாப்பிள்ளை. அந்தப் பெண் இவளவு கேட்டும், வேடிக்கையாய் பார்த்துக்கொண்டிருக்கிறார். இது மனிசன் செய்யிற வேலையே?

சாம்பசிவத்தார் உறவினர் வீடொன்றுக்குப் போய்விட்டார். பாரதி படித்துக்கொண்டிருந்தாள்.

பாரதி! பாரதி! ஆ! முத்தையா மாமா! வாங்கோ. அப்பா எங்கே?

வெளியாலை போட்டார். என்னவாம் சம்பந்தம். மிகவும் நெருங்கிய உறவினர் அந்நியோன்னியமான உறவு. நட்பு. அவரில் பாரதி மிகவும் பாசமாக இருந்தாள்.

அது, பொருத்தமில்லையாம்.

குறிப்புப் பொருத்தமில்லையோ? பொம்பிளையைப் பாத்திட்டு விட்டிட்டுப் போட்டினமோ?

பாரதி உடைந்தேபோனாள். இருவரும் இவளவு தானா?

கூட இருந்தே பாசமாகக் கருதியவர் அந்த அம்மன் கோயில் வசலிலேயே பாரதியின் பல திருமணங்களைக் குழப்பியும் இருக்கிறார். ஒரு மாப்பிளை பேசியும் இருக்கி றார். தாய் தகப்பனுக்கு வருத்தமாம். வீட்டோடை மாப்பிளை வேணுமாம்.நான் என்ன வேலைக்காரனே? முத்தையா மாமா இவளவும் சொன்னதாக அந்த வீட்டுக்காரர்கள் சொல்லியிருக் கிறார்கள். முத்தையா மாமாவை இந்த வேலையை யார் செய்யச்சொன்னது? அவருக்கு என்ன நடந்தது? பாரதி! பாரதி! என்று கையில் கொடுத்ததையெல்லாம் சாப்பிடுபவரா? இந்த வேலை செய்தது. பல தடவைகள் இவர்களிடம் கைமாற்று வாங்கிய நோட்டுகளின் வழி வந்த காழ்ப்புணர்வோ? யாருக்குத் தெரியும்.

ஓடித் திரிந்தவர்கள் திரும்பவும் அந்த வங்கியியலா ளரையே தூது அனுப்பினார்கள். சாம்பசிவத்தாருக்கு கோபமாக இருந்தது. பாரதி சொன்னாள் அப்பா இந்தக் கல்யாணம் வேண்டாம். காசுக்கு ஆசைப்பட்டவன் பெண் எப்படியெண்டு ஏதும் கதையோ இல்லை. காசுப்பேய்கள். சுமார் பதினைந்து பேர் வரையில் வந்தார்கள். தூதுவர்களாய்.

சாம்பசிவத்தார் கேட்டார், முதல் குறிப்புப் பொருத்த மில்லை என்றது, இப்ப எப்படி பொருந்தினது? வந்தவரில் ஒருவர் சொன்னார். முந்தினதிலும் ப்ார்க்க இப்போ உங்களுக்கு வசதி கூடிவிட்டதாம். யாழ்ப்பாணத்தில் வீடுகள் இப்போ நல்ல விலைபோகுதாம். சாம்பசிவத்தார் கத்தினார். இங்காலைப் பக்கம் ஒருத்தரும் வரக்கூடாது.

இப்போ மணிமேகலையும் பாரதியிடம் கேட்கிறாள். அவசரப்படுத்துகிறாள். இவளது உள் நோக்கம் என்ன?

பாரதிக்கு தம்பி ரங்கனிடம் இருந்து போன் வந்தது. கொஞ்சம் சிடு சிடுப்பாய், பின்பு கோபமாய் உறுமுகிறான், நீ யாரையோ ஊத்தவாளியை விரும்பியிருக்கிறியாம்?

என்ன? யார் சொன்னது? புரியாத புதிராய் விழிக்கி றாள். யார் சொன்னது? அதை விடக் கூடாத ஒருவனாய்.

அது இருக்கட்டும் நீ என்ன நினைக்கிறாயென்று சொல்லித் தொலையன்.

என்ன நினைக்க இருக்கு. பிறகுதான் தெரிய வந்தது, அந்த ஆலய வழி, அரை குறையாக, விளக்க மில்லாத கதையாகக் கடத்தப்பட்டிருக்கிறது.

ரங்கனுக்கு, பாரதி மேல் நம்பிக்கை. மனதில் ஒன்று விடாமல் அப்படியே சொல்லுவாள்.

எல்லாவற்றையும் விடுத்து விடுத்துக் கேட்டு உரிமையாய், உண்மையாய் பாரதியுடன் பழகுவது போல் நடித்த மணி மேகலை ஏன் இதை பாரதியிடம் சொல்லவில்லை. இவளவு பிரச்சினைகளையும் ஏற்படுத்திய சூத்திரக்காரி நேரே கதைத்து குழம்பிப் போன சம்பந்தங்களில் ஒன்றாக்காமல் இப்படியெல் லாம் பாரதியின் வாழ்வுடன் விளையாடக் காரணம் என்ன?

பின்பு ஒரு கதையும் விடுத்திருந்தார் மணிமேகலை. பட்டதாரி மாஸ்டர் இவவை விட்டிட்டு வேறையாரையோ கட்டிட்டாராம்.

எப்படி? எப்படி மனிதர்கள்? இவளவு மனம் விட்டு, நெருங்கிப்பழகியதற்கு கிடைத்த தொடர் அவமானங்கள். அங்கு வந்துபோன சிலரில் அவளை நையாண்டி பண்ணிய வர்கள் யார்? யார்? என்ன செய்தார்கள்?

இறுதியாக, ஒருதரம், அந்தப் பெரிய அச்சகத்தாரின் மகனும், கார்க்கார அருளம் பலத்தின் பேரனும் பாரதி வீட்டை மோட்டச்சைக்கிளை வேகம் குறைத்து அவதானித்தபொழுது, பாரதி இவைதானப்பா, என்று கூறியபோது அந்த நோயாளியான சாம்பசிவத்தாரால் வேகமாக எழும்ப முடியவில்லை. ஓடி மறைந்துவிட்டார்கள்.

கார்க்கார அருளம் பலத்தின் பேரன் உங்கள் ஊர் சுகந்தி அக்கா சொன்னார். மணிமேகலை அன்ரி வீட்டிற்குள் போவதை கண்டிருக்கிறார்கள். இன்னும் இன்னும் எத்தனை சம்பவங்கள். இவற்றுக்கெல்லாம் யார் உடந்தை. கொடுமையான செயல்களுக்கு யார் பாத்திரம். யார் வழிகாட்டி?

எய்தவனிருக்க அம்பை நோவானேன்? நீ பொம்பிளைப்பிள்ளை பேசாமலிரு என்பதாக கதையை முடித்து, தனது மகனின் திருமண வீட்டிற்கு முன்பு பாட்டொன்று எழுதி வெருட்டி, மகனை கொண்டு செய்வித்து, உன்னை ஒதுக்கவில்லை. நான் மௌனமாக இருக்கின்றேன். வாய் திறந்தால் நீ துன்பப்படுவாய் நீ எங்கு போனாலும் எனக்குத் தெரியும். எத்தனை துரோகம் செய்தாள். உண்ட வீட்டுக்கு இரண்டகமே செய்தாளே. பாரதி தந்தைக்கு வாசித்து காட்டி சொன்னபோது அழைப்பிதழுடன் வந்திறங்கினாள். எதிர்பார்த்தவர் போல் சாம்பசிவத்தார், மணிமேகலையை நோக்கினார். படலைகூடத் திறக்கவில்லை. கல்யாண வீட்டிற்குச் சொல்ல வந்தனான்

ஆ.சந்தோஷம்.

காட் இந்தாங்கோ.

காட் வேண்டாம்.... நாங்கள் வரமாட்டம். சந்தோஷமாய் செய்யுங்கோ. பாரதியிடம் இதைக் கொடுங்கோ. சாம்பசிவத்தாருக்கு ஆத்திரமாய் வந்தது. பாரதிக்கும் வேண்டாம் கொண்டுபோய்ச் சேருங்கோ. உள்ளுக்குள் நினைத்தார். இந்தப் பிள்ளை அன்ரி, அன்ரி என்று உயிரை விட்டதற்கு இவள் செய்தகொடுமை. எப்படியெல்லாம் தன்னுடைய வேலைகள் செய்வித்து இப்படி வசை தேடி விட்டாளே. நல்ல காரியம். ஒருவரையும் துன்புறுத்த அவருக்கு விருப்பமில்லை.

யாரோ ஒருவன்? அவள் தெரியாத புரியாத உணராத ஒருவன், பாரதி பலருடன் போராடவேண்டிய நிலைக்குத் தள்ளி விட்டாளே. பாமா ரீச்சர் உண்மையில் காதலித்தாள். அவர் நினைவாகவே வாழ்கிறாள். ஆனால் இந்தப் பாரதி ஏன் ஒண்டுக் கட்டையாக வாழ வேண்டும்? மனமுடைந்து சிதறியதாலா?

பாரதியின் மனம் இந்த எதிர்பாராத சம்பவத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பது எனக்குத் தெரிகிறது. எல்லா வித வசதிகளும் இருந்தும் ஆளுக்கொரு விதமாய் அவள் வாழ்வில் விளையாடி விட்டார்கள். செய்யாத பிழைக்காய் தான் தலை குனிவதாய் வேதனைப்பட்டுக் கொண்டேயிருக் கிறாள்.

திடீரென அந்தச் செல்லையா அண்ணை கத்துவது போல கேட்குது. குமர்களைக் கெடுத்துத் தெருவிலை விடுகிறவன், தாய் தகப்பனைக் கடைசி நேரம் தண்ணி வெண்ணி ஊத்தாமல் துரத்துறவன், குடியைக் குடி கலைக்கிறவனெல்லாம் சேர்ந்து கட்டின கோயில்! அந்த வள்ளலில்லை வளிசல்களுக்கு ஒரு விலாசம். வெள்ளை வேட்டிகளை உரிஞ்சு தலையிலை சுத்துங்கோடா. கோயிலை இடிச்சுத் தன்னும் குமர்களைக் கரை சேருங்கோடா. பொம்பிளையள் விடுகிற கண்ணீர், அது ஏழைகள் விடுகிற கண்ணீர். வீண் போகாதடா.

நான் நிதானித்து யோசிக்கின்றேன்: இந்த இரு பெண்களின் வாழ்விலும் அந்த ஒரே குடும்பமே விளையாட்டுக் களை நடத்தி கல்யாண விசரிலை கோயில்களுக்கு திரிறாளுவை என்று பட்டம் சூட்டிவிட்டாச்சே.

இந்த கோயில் கோபுரம் பாமாரீச்சரின் வாழ்வையும், பாரதியின் வாழ்வையும் வெவ்வேறு திசைகளில் பாவம் செய்து விளையாட்டுக் காட்டியவர்களால் கட்டப்பட்ட விளையாட்டுக் கோபுரம். இவ் இரு பெண்களின் வாழ்வையும் பந்தாடி நோகடித்த பொழுதுகளில் கோபுரமாய் உயர்ந்து நிற்கிறது. இவை பாவம் செய்த கோபுரங்கள். அநியாயத்தின் சின்னங்களாய் பிராயச்சித்தங்களாய் கட்டியெழுப்பப் பட்டவை. கையெடுத்துக் கும்பிடவோ, நிமிர்ந்து பார்க்கவோ தகுதியற்றவை. எனது மகனைப் பார்க்கின்றேன் என் பிள்ளைகளின் வாழ்வில் இப்படியொரு அநியாயம் நடக்க நான் ஒரு போதும் விடமாட்டேன்.

சாவகச்சேரி வந்தாச்சு. எல்லாரும் இறங்குங்கோ.

இறங்கி நடக்கின்றேன். மனக் கோபுரங்களின் இடிபாடுகளைக் கண்ட அதிர்ச்சியில் மனம் கனக்கிறது.

## உறங்கியது போதும்

காலாகாலமாய் பின்தூங்கி முன்னெழுந்து
தாய்மைப் போர்வைக்குள் புழுங்குகின்ற
பிரக்ஞையே இல்லாது அயராதுழைக்கிறாய்
எனினும் என்ன சுகம் கண்டாய்?

பாழில் விழுந்து போலிகளில் உழன்று
மாடாய் உழைத்துக் களைத்தது போதும்
தியாகப் பன்னீர்களுக்காய் இனியும்
ஆழ்கடலில் அமிழ்ந்து முத்தெடுக்க வேண்டாம்.

மனதில் குமுறும் துயர அலைகளின் வீச்சை
இவை அமைதியாக்குதல் சாத்தியமில்லை
காலாகாலமாய் அஞ்சி நின்று பணிசெய்து
ஊதியமும் ஊக்குவிப்புமின்றி உழல்கிறாய்.

விண்மீன்கள் வானில் மறைய முன்பெழுந்து
நடுச்சாம அமைதியில் பேய்கள் உலா வரை
ஓய்வின்றி உழைத்து ஓடாய்த் தேய்ந்தும்
ஒடுக்கப் பட்டே வாழ்ந்து வருகிறோம்.

உறங்கியது போதும் துயிலெழு பெண்ணே
விழித்த விழிகள் இனித் தூங்கிடலாமோ?
தூரத்துப் பச்சைகளைத் துகிலுரிந்து விட்டு
சுதந்திரக் காற்றைச் சுவாசிப்போம் வா.

ச.முருகானந்தன்.

## ஏன் அழுகிறார்கள்?

மாடி வீட்டு ஜன்னல் சேலை
அழுதது; ஏனெனில்
அம்மணமான சின்னப் பெண்ணின்
மேனியைப் போர்த்த
தன்னால் முடியவில்லையே என்று.

நாய்கள் நக்கிவிட்ட இலைகள்
அழுதன; ஏனெனில்
நாய்களுடன் போட்டியிட முடியாமல்
தோற்றுப் போன சிறுவனுக்கு
சோற்றுப் பருக்கையை
கொடுக்க முடியவில்லையே என்று.

அனல் கக்கும் துப்பாக்கிகள்
அழுதன; ஏனெனில்
தமிழனின் இரத்தம் குடிக்க முடியாமல்
யுத்த நிறுத்தம் வந்து
தடுக்கிறதே என்று.

ஆர்ப்பரித்து எழும் கடல்
அழுதது; ஏனெனில்
மனித உயிர்களைக் காவுகொள்ள
கடலடி பூகம்பம் வந்தது
சுனாமி அலை எழவில்லையே என்று.

அவனை நேசித்த காதலி
அழுதாள்; ஏனெனில்
தேச விடுதலையை நேசிக்காத
சுயநலக் கோழை மீது
மனதைப் பறி கொடுத்து விட்டேனென்று.

பிக்குகளும் பேரினவாதிகளும்
அழுகிறார்கள்; ஏனெனில்
தமிழர்களீ தலைகளில்
சம்பல் அரைத்து
புத்தரின் பெயரால்
ஆள முடியவில்லையே என்று.

பூ..... இவ்வளவு தானா?
ஓலங்கள் ஒவ்வொன்றும்
அர்த்தமுள்ளவை தான்
ஆனால்
ஒரு மாவீரனின்
தாயின்
மனைவியின்
பிள்ளையின்
உறவுகளின்
கண்ணீருக்கு
அர்த்தம்.... விரிகிறது.

முருகு பாரிமகன்.

# குடும்ப ஒற்றுமை வேண்டும்

இன்றைய உலக சூழல் வெகுவாக மாறி வருகிறது. குடும்பத்தில் பிளவுகள், சண்டைகள், சச்சரவுகள் என்று அம்மா, அப்பா சகோதரர் என்று கணக்கிட முடியாது. இது பெரும்பாலும் ஒரு குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரிடமும் புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு, பொறுமை இல்லாமையே மிகப் பெரிய சிக்கலாக உள்ளது. பெற்றோர் பிள்ளைகளிடமும், பிள்ளைகள் பெற்றோரிடமும் அன்பாக மனம்விட்டுப் பேசவேண்டும். அன்பே எல்லாவற்றுக்கும் அடித்தளமாகிறது. இந்த அன்பு நிறைந்திருந்தாலே குடும்பத்தில் மகிழ்ச்சி என்பது இரட்டிப்பே.



சில குடும்பங்களைப் பார்த்தால் தந்தை வேலை வேலை என்று அலுவலகத்தில் வாழ்நாள் போய் விடும். குடும்பத்தில் மனைவி, பிள்ளைகளுக்கு உழைத்துக்கொடுத்தால் சரி என்று நினைத்துக்கொள்வார்கள். பிள்ளைகளுடன் அவர்களது கல்வி பற்றியோ, எதிர்காலம் பற்றியோ கதைப்பது சிந்திப்பது என்பது குறைவு. இதனால் நெருக்கமான உறவு நிலை என்பதில் விரிசல் ஏற்படுகிறது.

பிள்ளைகளையும் படி, படி என்று பயமுறுத்தி ஓய்வில்லாத மூளைக்கு வேலையை கொடுப்பதும் கூடாது. அம்மா பேசுவா என்ற பயத்தால் படிப்பதால் அவனது நேரம் வீணாக்கப்பட்டு மனதில் மகிழ்ச்சியான நிலை இருக்காது. இதனால்தான் தன்பாடு என்று எத்தனையோ பிள்ளைகள் வளர்கிறார்கள்.

தாய் தந்தை உறவு நெருக்கமானால் பிள்ளைகளின் அன்புக்கு வேறு என்ன வேண்டும். ஒரு நாளில் சாப்பிடும் நேரமாவது ஒன்றாக அந்தக் குடும்பத்தில் எல்லோரும் ஒன்று சேர்வதே குறைவு. இதனால் தான் மனம் தனிப் போக்கில் செல்கிறது. சிறு வயதிலே இப்படியான சூழலில் வளரும் சிறார்களிற்கு காலப் போக்கில் பாதிப்பை ஏற்படுத்திவிடும்.

அன்பால் அரவணையுங்கள் பெற்றோர் பிள்ளைகளையும், பிள்ளைகள் பெற்றோரையும் சகோதரர் களையும் அன்பு காட்டுங்கள். துன்பத்தையும் இன்பத்தையும் சமமாக ஏற்றுக்கொள்ளுங்கள். குடும்ப ஒற்றுமையே வாழ்க்கையை சிறப்பித்து மகிழ்ச்சிக் கடலில் நம்மை அழைத்துச் செல்லும். அன்பை அடித்தளமாக்கி குடும்ப ஒற்றுமையை மேம்படச் செய்யுங்கள்.

**ஈழவிழி**

---

நட்பு என்பது ஒன்றிணைந்து இருக்கும்போது தெரிவதில்லை. ஆனால் அது பிரியும் போதே தெரிகின்றது. எம்மவர்களில் அதிகமானோர் நட்புப்பற்றி தவறாகவே கருதுகின்றனர். அதாவது பால் இன வேறுபாட்டுடன் மேற்கொள்ளும் நட்பு தவறாகக் கருதப்படுகின்றது. அக் கருத்து முற்றிலும் தவறானது. அதாவது ஒரு ஆண் ஒரு பெண்ணுடனோ அல்லது ஒரு பெண் ஒரு ஆணுடனோ நட்பாகப் பழகிவிட்டால் சமூகத்தினால் வித்தியாசமாகக் கருதப்படும் இக் காலத்தில் நட்பு என்பது புறக்கணிக்கப்பட்ட ஒரு கருவாகவே உள்ளது. இதனால் பல்வேறு




வகையான பிரச்சினைகள் தோன்றுகின்றன. எனவே நட்பு என்பது பால், இன, மத, சாதி வேறுபாடின்றி தோன்றுவதேயாகும்.

நண்பர்களாக பலருடன் பழகுவதன் மூலம் சமூகத்திலிருந்து புறந்தள்ளப்பட்ட ஒருவனைக் கூட ஒரு சிறப்பான இலட்சிய வாதியாக மாற்றிக்கொள்ள முடியும். மேலும் சமூகத்திற்கு துரோகம் செய்பவனைக்கூட நட்பினால் திருத்திக்கொள்ள முடியும்.

குடும்பம் ஒன்றில் பெற்றோர், சகோதரர்கள், சகோதரிகள், உறவினர்கள் என்ற உறவு ஒரு புறம் இருக்க அனைவரும் நண்பர்களாகப் பழகுவதன் ஊடாக சில தீய செயற்பாடுகளில் இருந்து விலகிக் கொள்ள முடியும். நண்பர்கள் என்ற உறவின் மூலம் எவ்வகை யான கருத்துக்களும் தயக்கமின்றி பரிமாற்றப்படுவதனால் சிறந்த தீர்மானம் எடுத்து எதிர்காலத்தை சிறப்பாக அமைக்கமுடியும்.

மேலும் பணிபுரியும் இடங்களில் கூட அதிகாரிகள் பணியாளர்கள் என்னும் வேறுபாடு இன்றி சிறந்த நண்பர்களாக பழகுவதன் ஊடாக தொழில் பிணக்கு இன்றி நிறுவன குறிக்கோள்களை இலகுவாக அடைந்துகொள்ள முடியும். இவ்வாறே ஆசிரியர், மாணவர் உறவும் நிலவுமாயின் எதிர்காலத்தில் சிறந்த கல்விமான்களை உருவாக்கிக்கொள்ளமுடியும்.

எனவே நண்பர்களாகப் பழகி குறுகிய வாழ்க்கைக் காலத்தில் சிறப்பாக மகிழ்ச்சியாக வாழ்வதோடு புரிந்துணர்வுடன் அனைவருடனும் ஒன்றிணைந்து வாழ முடியும் எனவே "நண்பர்களால் முடியாதது என்று ஒன்றுமில்லை".

**ப.கஜேந்திரன்.**

---

# சிறப்பான குடும்பம்!

குடும்ப வாழ்க்கை என்பது ஒரு தீபம் போன்றது. இத்தீபம் ஆனது பிரகாசமாய் எரியவேண்டுமானால் கணவன் மனைவி இருவரும் ஒத்துழைப்போடு செயற்படவேண்டும்.

ஒரு விளக்கை நாம் சும்மா வைத்தால் அதில் இருந்து ஒளி என்பது தானே கிடைப்பதில்லை அதற்கு திரிபோடவேண்டும். அடுத்த படியாக எண்ணெய் விடவேண்டும். இவ்வளவற்றையும் செய்தபிற்பாடு தான் நாம் தீக்குச்சியை எடுத்து திரியை பற்ற வைக்கின்றோம். அதே போன்றுதான் எம்முடைய வாழ்க்கையும் கணவன் திரியாகவும், மனைவி எண்ணெய்யாகவும் இருவரின் முயற்சி தீப்பெட்டி யாகவும் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் தான் எம் வாழ்வு பிரகாசிக்கும்.

ஒரு வீட்டில் இருக்கும் மனைவி மட்டும் முயற்சியுடையவளாக இருந்தால் அக்குடும்பத்தின் வறுமை எப்படித் தீரும். கணவனும் தன் குடும்பம் பிள்ளைகளின் நிலை எப்படி இருக்கு என்று நிறையச் சிந்திக்க வேண்டும்.

சுகமாக இருப்பது என்பதை சில ஆண்கள் "சும்மா" இருப்பதைத்தான் என எண்ணி விடுகின்றனர். எமக்கு குடும்பத்தின் சுமைகள் குறைக்கப்பட்டு அன்றாடம் எம் வாழ்வின் தேவைகளைப் பூர்த்தி செய்யப் பணம் தேவைப்படுகிறது. இதை ஒரு மனிதன் தேடினால் தான் அவன் வாழ்வில் நிரந்தரமான சுகம் கிடைக்கும். இவையாவற்றையும் உணராமல் கணவன் மனைவி



இருவரும் இன்றைய வீடுகளில் பெரும் பூகம்பமே உருவாகும் அளவுக்குச் செயல்படுகின்றனர். இச் செயல்பாட்டில் யாரைக் குறை கூற முடியும்.

நாம் வாழும் வாழ்க்கை அதாவது குடும்பம் என்பதை எடுத்துப் பார்ப்போம். தனி ஒரு மனிதன் குடும்பம் என்று சொல்லமுடியாது. ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வதே குடும்பம். இக்குடும்பத்தில் வரும் நன்மை தீமைகளுக்கு ஒருவர் பொறுப்பானவராக இருக்கமுடியாது. அதன் பாதிப்பு என்பது பொறுப்பானவரை மட்டும் தாக்காது. ஒட்டு மொத்தமாக குடும்பத்தில் வாழும் யாவரையும் தாக்கிவிடு கின்றது. இவ்விடயத்தில்தான் நாம் ஒவ்வொருவரும் விழிப்பாக இருக்க வேண்டும்.

ஒரு வீட்டில் இருக்கும் கணவன் மனைவி இருவரும் மிகவும் தெளிவுடையவர்களாக இருக்க வேண்டும். அதே சமயம் தம்மால் எந்தளவுக்கு பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும் என்பதை நன்றாக இருவரும் கலந்து ஆலோசிக்க வேண்டும்.

கணவன் மனைவி உறவு என்பது ஒரு நண்பனோ அல்லது நண்பியோ அல்ல ஏனெனில் எமக்கு கிடைக்கும் நண்பர்கள் சரியில்லாவிடில் அவர்களுடன் பழகுவதை நிப்பாட்டி விடுகின்றோம். ஆனால் கணவன் மனைவி உறவு அப்படியல்ல. பிடித்தாலும் சரி பிடிக்கா விட்டாலும் சரி அவ்வாழ்க்கையில் ஒரு பற்றை ஏற்படுத்தி வாழும் நிலைக்குத்தான் நாம் தள்ளப்பட்டிருக்கின்றோம் என்பதை நாம் நன்றாக உணரவேண்டும்.

இந்த வகையில் எம் இருவருடைய மனங்களிலும் தீர்க்கமான சிந்தனை இருக்குமாயின் சிறப்பான குடும்பம் எம் குடும்பமென ஆகிவிடும்.

நாம் வாழும் வாழ்க்கை என்பது சிறப்பான முறையில் இயங்கு வது எம் செயற்பாடுகளில்தான் உள்ளது.

**சு.சிவாஜினி**

---

## பால் இனிப்பு:-




தேவையான பொருட்கள்:-

ரின்பால் -1

சீனி -450 கிராம்

தண்ணீர் -1 ரின்

ஏலக்காய்த்தூள் -1தே.க

முந்திரிப் பருப்பு -1மே.க

செய்முறை:-

★பால், சீனி, தண்ணீர் இவற்றைக் கலந்து கரைத்துக் காய்ச்சவும்.

★இறுகும் பருவத்தில் ஏலம், முந்திரிப் பருப்பை கலந்து சட்டியில் ஒட்டாது திரளும் பருவத்தில் இறக்கவும்.

★எண்ணெய் பூசிய தட்டில் கொட்டி அழுத்தமாகப் பரவி விடவும்.

★சிறிது நேரத்தின் பின் அளவாக வெட்டிக்கொள்ளவும்.

---

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*


## குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்



வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.

நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்—55**

பெயர்:................................................

முகவரி:................................................

................................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.



# இளைய நாதம்

## கண்டங்களும் மிகநீண்ட நதிகளும்

| | |
|---|---|
| ஆசியாக்கண்டம் :- | யாங்சிகுயாங் |
| வட அமெரிக்கா :- | மிசூரிமிசூசுப்பி |
| தென்அமெரிக்கா :- | அமேசன் |
| அவுஸ்திரேலியா :- | மறோடாலிங் |
| ஆபிரிக்கா :- | நைல்நதி |
| ஐரோப்பா :- | வொல்க்கா |

*ந.சயந்தினி,*
*தரம்-9*
*கிளி/புதினிதரேசா பெண்கள் கல்லூரி.*

# கடல் ஆமை


கடல் ஆமைகளில் ஐந்து அல்லது ஆறு இனங்கள் உள்ளன. இவை கெலோனிடே குடும்பத்தைச் சேர்ந்தவை. இவற்றின் கால்கள் நீந்துவதற்கு ஏற்றபடி துடுப்புப்போல் அமைந்திருக்கும். இவை கடற்கரையில் முட்டைகளிட மட்டுமே நீரைவிட்டு வெளியேவருமே தவிர, மற்ற நேரங்களில் கடலிலேயே இருக்கும். இவை உலகிலுள்ள கடல்களில் பரவலாகக் காணப்படும். கடல் ஆமைகளில் குறிப்பிடத்தகுந்தது பச்சை ஆமை.

வெப்ப மண்டலக்காடுகளில் பெருவாரியாகக் காணப்படும் இனம் பச்சைஆமை. தகடு போல் தட்டையான ஓடு கொண்டது. ஒரு மீற்றர் நீளம் வரை வளரக்கூடிய இது 300முதல் 400கிலோ எடை உடையது. பெரும்பாலானோர் இதன் இறைச்சியை விரும்பி உண்ணுவார்கள்.

பெருந்தலை ஆமை எனும் கடல் ஆமை 300 கிலோ எடை உடையது. நீந்துவதற்கு ஏற்றபடி துடுப்புப்போன்ற கால்கள் கொண்டது. மித வெப்ப மண்டலக் கடல்பகுதிகளிலும் வெப்ப மண்டலக் கடல்களிலும் பரவலாகக் காணப்படும். இதன் மேலோட்டின் நீளம் ஒரு மீற்றருக்குமேல் இருக்கும்.


பருந்தலகு ஆமை என்ற இனம் இந்துமா கடலிலும் பசுபிக் கடலிலும் பரவலாகக் காணப்படும் இனமாகும். இதன் அலகு பருந்தின் அலகு போலிருப்பதால் இதற்கு இந்தப் பெயர் வந்தது. இதன் காரப்பேசின் நீளம் ஏறக்குறைய 90 செ.மீ.துடுப்புப்போன்ற கால்களினால் நன்றாக நீந்தும். இதன் ஓடுகள் ஆபரணம் செய்யப் பயன்படுத்தப் படுகின்றன.

கடல் ஆமைகளில் மிகப்பெரியது தோல் முதுகு ஆமை. இது டேர்மோசெலிடே என்ற குடும்பத்தைச் சேர்ந்தது. இது 700 கிலோ எடை உடையது. துடுப்புப்போன்ற முன் காலின் ஒரு நுனியிலிருந்து அடுத்த காலின் நுனிவரை இதன் அகலம் ஏறக்குறை 3.6மீற்றர். இதன் தோல் பருமனாக இருக்கும். இதன் தோல் முதுகில் ஏழு மேடுகளும் வயிற்றுப்புறப் பகுதியில் ஐந்து மேடுகளும் உள்ளன. வேறெந்த ஆமைக்கும் இம்மாதிரிக் கிடையாது. இதன் ஓடு நூற்றுக்கணக்கான எலும்புத் தகடுகளினாலானது. இதன் உணவு ஜெல்லிமீன்.



இதன் மேலோட்டின் மீது றப்பர் போன்ற வழவழப்பான தோல் அமைந்திருக்கும். முக்கோண வடிவான உடலும் பெரிய தலையும் கழுத்தும் கொண்டது. இது கடற்கரை மணலில் குழி தோண்டி 90முதல் 200 முட்டைகள் வரை இடுகிறது. பிறகு அந்தக் குழியை மணலால் மூடிவிட்டுக் கடலுக்குச் சென்றுவிடும். இந்த ஆமை வெப்ப மண்டலக் கடல் பகுதிகளில் பரவலாகக் காணப்படும்.

## பசிக்கும் கொக்கிற்கு வழிகாட்டுங்கள்



*சு.கௌரீஷன்.*

## சொற்சிலம்பம் - 94

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| டி | ப் | ம | வா | ன் | தூ | ம் |
| டு | கு | ல் | பா | ந் | மி | பு |
| க | லா | தி | கோ | னி | ணி | ழ் |
| ந் | னா | பி | லி | னை | சீ | இ |
| ழ | ட் | தா | ஷ் | ர் | ரி | னை |
| ற் | ர் | யா | க் | ஸ் | க | வி |
| ரா | வ | மோ | ன் | கி | த் | ப |

கட்டங்களில் காணப் படும் எழுத்துக் களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் - 92 இன் விடைகள்

01. இந்தியா.

02. பவநந்தி முனிவர்.

## சொற்சிலம்பம் - 92 இன் பரிசுக்குரியவர்

சி.தர்சிகா,
குளுக்கண்டி ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

## சொற்சிலம்பம் - 92 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. S.யசோ, சுதுமலை தெற்கு, மானிப்பாய்.
02. ம.முகமட், திருகோணமலை.
03. T.மாலினி, சின்னக்கடை, மன்னார்.
04. தி.சுதன்ராஜ், கிளி/இந்துக்கல்லூரி, கிளிநொச்சி.
05. திரேஜா, மடத்தடி, சுன்னாகம்.
06. அபிவர்மன், மு/பாலிநகர் ம.வி, வவுனிக்குளம்.
07. கு.தாரணி, நுணாவில், சாவகச்சேரி.
08. நே.காஷ்மியா, வட்டக்கச்சி, கிளிநொச்சி.

01. விளையாட்டுக்களில் ஒன்று?

01) ....................................

02. மகாபாரதத்தைத் தமிழில் எழுதியவரின் பெயர்?

01) ....................................

*சொற்சிலம்பம்-94*
*ஈழநாதம்.*
*யாழ்சாலை.*
*கிளிநொச்சி.*

பெயர் :- ....................................

முகவரி :-....................................

....................................

....................................

# ஓட்டப்பந்தயம்...

## பகுதி-12



# அழியாத வடுவாக ஆடி-09 நவாலிப்படுகொலை

**பத்து வருடங்களிற்கு முன்னர் இடம்பெற்ற இக் கொடூரமான விமானக் குண்டுத் தாக்குதலினால் இரண்டு கிராம சேவையாளர்கள் உட்பட மாணவர்கள், சிறுவர்கள், பொதுப் பணியாளர்கள், பொதுமக்கள் என வர்க்க வேறுபாடின்றி அங்க அவயங்களை இழந்து துடிதுடித்து உயிரிழந்தனர். மூளாய், வட்டுக்கோட்டை, மாதகல், சுழிபுரம், சில்லாளை, பண்டத்தரிப்பு ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களே அதிகளவில் பாதிக்கப்பட்டனர். இரத்தக் கறைபடிந்த இத்துயர நிகழ்ச்சி விலைமதிக்கமுடியாத மனித உயிர்களுடன், கால்நடைகள், பல பயன்தரு மரங்கள், இரண்டு ஆலயங்கள், பாடசாலை, பதிநான்கு வீடுகள், நான்கு கடைகளும் சேதத்திற்கு உள்ளாகின.**

ஆண்டவன் பாதம் அடைக்கலம் புகுந்த அப்பாவித் தமிழ் மக்கள் அகோர விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலுக்கு இலக்காகி நாளை சனிக்கிழமையுடன் பத்து வருடங்கள்.

நவாலி வாழ் மக்களின் மனங்களில் அழியாத வடுவாக இரத்தக்கறை படிந்த நாளாக ஆடி-09ஆம் திகதி மாற்றப்பட்டது. இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான விமானங்களின் கண்மூடித்தனமான தாக்குதலினால் நவாலிசென்பீற்றர்ஸ் தேவாலயம், நவாலி றோமன் கத்தோலிக்கத் தமிழ் கலவன் பாடசாலை, சின்னக்கதிர்காம முருகன் ஆலயம் இவற்றை சூழவுள்ள பகுதிகள் பெருமளவில் சேதத்திற்குள்ளாகின.

விலை மதிப்பற்ற பல அப்பாவித் தமிழ் மக்கள் மிலேச்சத்தனமான தாக்குதலினால் கொல்லப் பட்டதுடன் 360 இற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். 45 நாள் குழந்தை உட்பட 147 பேர் கொலலப்பட்டனர். இவர்களில் 48பேர் மனிதாபிமானமுறையில் இடம்பெயர்ந்த மக்களுக்கு பல்வேறு வகைகளில் உதவி செய்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பேரினவாதிகளின் இன அழிப்பின் தொடர்ச்சியாக இடம்பெற்ற இத்தாக்குதலினால் இலங்கை அரசாங்கமும் அன்றைய சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் சாதித்தது என்ன...?

தாங்கள் இன வெறியர்கள் இயலாமையின் வெளிப்பாடாக பொது மக்களையே தம்மால் தாக்கியழிக்கமுடியும் என்பதை நிரூபித்தனர். தேவாலயத்திலும் பாடசாலையிலும் இடம்பெயர்ந்த மக்கள் தஞ்சமடைந்துள்ளனர் என்பதைத் தெரிந்து கொண்டும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட மிக மிலேச்சத்தனமான செயலாகவே 1995ஆம் ஆண்டு ஆடி-09ஆம் திகதி மாலை 4.50 மணிக்கு இடம்பெற்ற இக்கொடூரத்தை மக்கள் கருதுகின்றனர்.



முன்னேறிப்பாய்தல் இராணுவ நடவடிக்கை வலிகாமத்தின் பல பகுதிகளையும் ஆக்கிரமித்தது. இவ் ஆக்கிரமிப்பாளர்களிற்கு துணையாக எறிகணைகள், விமானத்தாக்குதல் மக்களின் வாழ்விடங்கள் நோக்கியதாக இடம்பெற்றன. ஆக்கிரமிப்பின் பிடியில் இருந்து தப்பிய மக்களே விமானத்தாக்குதலுக்கு இலக்காகினர். ஆனால் சனாதிபதி சந்திரிகா இத் தாக்குதல் தொடர்பாக ஊடகங்களிற்கு கருத்துத் தெரிவிக்கையில் நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலயத்தின் மீது தமது வான்படையினர் தாக்குதல் நடத்தவில்லையெனவும் தேவாலயத்தை அண்மித்து தங்கியுள்ள விடுதலைப்புலிகளை அழிக்கவே தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இதில் பெருமளவு புலிகள் கொல்லப்பட்டனர் எனத் தெரிவித்தார்.

தனது படைகளின் அகோரத்தாண்டவத்தை அடியோடு மறுத்த அம்மையார் அதனை ஊடகங்கள் வாயிலாக நியாயப்படுத்த முயன்றமையானது அறியாமையின் வெளிப்பாடு மட்டுமன்றி அராயகத்தின் தோற்றப்பாடும் கூட.

பத்து வருடங்களிற்கு முன்னர் இடம்பெற்ற இக் கொடூரமான விமானக் குண்டுத் தாக்குதலினால் இரண்டு கிராமசேவையாளர்கள் உட்பட மாணவர்கள், சிறுவர்கள், பொதுப் பணியாளர்கள், பொதுமக்கள் என வர்க்க வேறுபாடின்றி அங்க அவயங்களை இழந்து துடிதுடித்து உயிரிழந்தனர். மூளாய், வட்டுக்கோட்டை, மாதகல், சுழிபுரம், சில்லாளை, பண்டத்தரிப்பு ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களே அதிகளவில் பாதிக்கப்பட்டனர். இரத்தக் கறைபடிந்த இத்துயர நிகழ்ச்சி விலைமதிக்க முடியாத மனித உயிர்களுடன், கால்நடைகள், பல பயன்தரு மரங்கள், இரண்டு ஆலயங்கள், பாடசாலை, பதிநான்கு வீடுகள், நான்கு கடைகளும் சேதத்திற்கு உள்ளாகின.

உடைந்த கோயில் கதவுகளில் வைத்து இறந்தவர்களின் உடல்களை தூக்கியமையும், சதைத்துண்டங்களை சாக்குகளில் அள்ளியமையும், கட்டட இடிபாடுகளிற்குள் சிக்கிய உடல்களை நான்குநாட்களிற்குப்பின் எடுத்தமையும் இறந்தவர்களின் உடல்களைக் கட்டில்களில் வைத்து யாழ்.நகர் நோக்கி கொணர்ந்தமையும் இன்றும் இம் மக்கள் மனங்களில்

**இரா-வின்**

நிழலாடுகின்றன. இறந்த உடல்களுடன் இடம் பெயர்ந்த துயர நிகழ்வு நவாலிப் படுகொலையின் மூலமாகவே ஏற்பட்டதென்பதுகுறிப்பிடப்பட வேண்டிய தொன்று.

தமிழ் மக்களின் கடந்த கால வரலாற்றில் பல்வேறு துன்பவியல் நிகழ்வுகள் இடம்பெற்றன. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை 1995ஆம் ஆண்டு பல கசப்புணர்வுகளை தந்த ஆண்டாகவேயுள்ளது. இலங்கை இராணுவத்தினரின் மிக மோசமான தாக்குதல்களிற்கு இலக்காகி உயிர்கள், உடமைகளை இழந்ததுடன் ஊரை விட்டுச் சென்ற கொடூரம் நிகழ்ந்ததும் இவ் ஆண்டிலேயே. வரலாறு காணாத இடப்பெயர்வைத் தந்த இந்த வருடத்திலேயே நவாலிப் படுகொலையும் அரசாங்கம் அரங்கேற்றியது.

புலிகளிற்கு எதிரான போர் என்ற போர்வையில் புதிய தளபதிகளை நியமித்து தமிழ் மக்கள் மீதான தாக்குதல்களை இலங்கை இராணுவம் மேற்கொண்டமை வரலாற்றின் பல பக்கங்களில் எழுதப்பட்டுள்ளது. நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலயம், சின்னக்கதிர்காம முருகன் ஆலயம், றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, குருநகர் புனித யாகப்பர் தேவாலயம், மருதமடு தேவாலயம், நாகர் கோவில் பாடசாலை இவை குறிப்பிடும் படியானவை.

வணக்கஸ்தலங்கள், கல்விக்கூடங்கள் என்ற வேறுபாடின்றி நடாத்தப்பட்ட விமானக் குண்டுத் தாக்குதல்களினால் சிங்கள பேரினவாதத்தின் கொடிய முகத்தை உலகம் நன்கறிந்துகொண்டது. இறைவனின் திருத்தலங்களிலேயே தமக்கு பாதுகாப்புக் கிடைக்கும் என்ற இறை நம்பிக்கையில் இறைபாதங்களில் இருந்தவர்களை இரும்புக்கரம் கொண்டு அடக்கும் அணுகுமுறையிலேயே இத்தாக்குதல்கள் இடம்பெற்றன.

நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலயம், சின்னக் கதிர்காம முருகன் ஆலயம் ஆகியவற்றில் ஒவ்வொரு வருடமும் இறந்தவர்களிற்கான இறை தியான வழிபாடுகள் இடம்பெற்று வந்துள்ளன. பத்தாண்டு நிறைவை நினைவுகூரும் மக்கள் இறந்தவர்களின் திருவுருவப்படங்களை வைத்து அஞ்சலி செலுத்துவதுடன் ஒரு தசாப்தத்தை நினைவுகூரும் முகமாக பத்து மெழுகுதிரிகளையும் ஏற்றவுள்ளனர். (09.07.2005) நாளை சனிக்கிழமை மாலை நினைவஞ்சலி உரைகளுடன் கறைபடிந்த இவ் துயரநாளை நினைவுகூரவுள்ளனர்.

சென்பீற்றர்ஸ் தேவாலய வளாக பின் வீதியிலும், நவாலி வடக்கு புலவர் வீதியிலும் உயிரிழந்த 147 பேருக்கும் நினைவுத் தூபி அமைக்கப்பட்டுள்ளது. தேவாலய வளவிலுள்ள வாகை மரத்தில் வேலி அடைத்த தகரம் தாக்குதலின் எதிரொலியாக இன்றும் தொங்கிக்கொண்டிருக்கின்றது. வான் படையின் தாக்குதலின் வேகத்திற்கும் ஏற்பட்ட அழிவுகளிற்கும் இவை தக்க சான்றாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தொலைக்காட்சியும் சமுதாயச் சீரழிவுகளும் வன்முறைகளும்

— மாதங்கி



தகவல் தொடர்புக் கருவிகளில் மிக அண்மையில் தோன்றியது தொலைக்காட்சியாகும். ஆனால், அது மிகக் குறுகிய காலத்தில் வானொலி, திரைப்படத்தை விட விரைவாக முன்னேறிவிட்டது. 1950இல் தொலைக்காட்சி வானொலியின் ஓர் உறுப்பாகக் கருதப்பட்டது. ஆனால் திடீரென்று தகவல் தொடர்புப் பணியில் இமயமாக வளர்ந்துவிட்டது. அறிவியலின் புதுமைக் கண்டுபிடிப்பு கணிப்பொறியாகும். தொலைக்காட்சி வானொலியைப் போன்ற இயக்க முறையினைக் கொண்டதாகும்.

ஆரம்பத்தில் மேலைநாடுகளில் தொலைக்காட்சி வானொலி நிலையத்தின் கட்டுப்பாட்டிற்குள் இருந்தது. தொலைக்காட்சி வானொலி தொழிலின் உறுப்பாகக் கருதப்பட்டது. இந்நிலையில் திரையுலகு தொலைக்காட்சியுடன் மோதியது. திரைப்படங்கள் தொலைக்காட்சியில் காட்டப்படவில்லை. திரைப்பட நடிகர்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் நடிக்கவில்லை. இப்போட்டியில் தொலைக்காட்சி வென்றது. அக்காலகட்டங்களில் கல்வி நிகழ்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

தொலைக்காட்சியை முறையாகப் பயன்படுத்துவது குறித்து மக்களிடம் கருத்து வேறுபாடு தோன்றலாம். மக்களுக்காக உருவாக்கப்பட்ட நிகழ்ச்சிகள் தொலைக்காட்சி மூலம் மக்களைச் சென்றடைகின்றன. அவற்றை வடிகட்டி ஏற்றுக் கொள்வதே மக்களின் திறமையும் கடமையுமாகும்.

தொலைக்காட்சி மக்களிடம் பல பாதிப்புக்களை ஏற்படுத்துகிறது. அது மனித குலத்தின் ஒவ்வொரு செயலையும் மாற்றியுள்ளது. மக்களின் பழக்க வழக்கங்கள், சிந்தனை, நாகரிகம், பண்பாடு போன்றவை மாறியுள்ளன. இந்த மாறுதல்கள் செய்தியை விடத்தொலைக்காட்சிக் கருவியின் வலிமையால் ஏற்பட்டவையாகும்.

எம்மவரிடையே இதன் தாக்கத்தை நோக்கும்போது மின்சார வசதியுள்ள இராணுவக் கட்டுப்பாடுள்ள ஆக்கிரமிப்புப் பிரதேசங்களிலேயே வெளிப்படையாகக் காணலாம். மக்களின் முக்கியத்துவம் வாய்ந்த நுகர்வுப்பொருளாக மட்டுமன்றி பல்வேறுவிதமான சமூகப் பொருளாதாரச் சீரழிவுகளுக்கும் அடிகோலியுள்ளதெனலாம்.

சமூகவாழ்வில் தொடர்பு முதன்மை பெறுகிறது. தற்காலத் தொடர்பு வியப்பூட்டும் வகையில் வளர்ந்துள்ளது. இந்தத் தொலைக்காட்சிகளும் வன்முறை சார்ந்த பல செய்திகளைத் திரைப்படங்கள், நாடகங்கள், மெகாத்தொடர்கள் வாயிலாக செய்திகளை வெளியிடுகின்றன. இவற்றின் கருத்துக்கள் நன்மை பயப்பனவாய் சமுதாய நன்னோக்குக் கருதியவையாக இருப்பின் வரவேற்கத்தக்கதே.

எமது சமுதாயத்திலே தொலைக்காட்சியால் ஏற்பட்டுள்ள சில மாற்றங்கள் வருமாறு,

★பெண்கள் பெரும்பாலானோர் (குறிப்பாக இல்லத்தலைவியர், வீட்டிலே தங்கிவாழ்பவர்) தொலைக்காட்சியுடனேயே பொழுதைக் கழிக்கின்றனர்.

இதன் காரணமாக வீட்டுப் பணிகள் ஸ்தம்பிக்கின்றன. வெளி உலகத் தொடர்புகளின்றி தொலைக்காட்சிகளில் முக்கியத்துவமாக மெகாத்தொடர்களில் அதிக கவனம் செலுத்துகின்றனர்.

★குழந்தைகள் மாலையில் விளையாட்டு நிகழ்வுகளில் கலந்து கொள்வது கூடக் குறைந்து வருவதாகக் கூறப்படுகின்றது. தாய்மாருடன் பிள்ளைகளும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் கவனம் செலுத்துகின்றனர். தாம் விரும்பிய கோணங்களில் தாம் காணும் நிகழ்ச்சிகளை மனதில் பதிக்க முற்படுகின்றனர்.

★பெற்றோர் குழந்தைகள் தொடர்பு குறைந்துவிட்டது.

எல்லாப் பெற்றோரும் அவ்வாறானவர்கள் என்று சொல்வதற்கில்லை. தொலைக்காட்சி மோகம் கொண்டபல பெற்றோர்கள் குழந்தைகளுக்குக் கதை கூறுவதோ, பல்வேறு சூழல் நிகழ்வுகள் பற்றிய அவதானங்களைக் காண்பிப்பதிலோ அக்கறை செலுத்துவது குறைந்துவிடுகிறது.

★உறவுகள் சீர்குலைந்துவிட்டன.

ஆளிடைத் தொடர்புகளின்றி, தம் குடும்பங்களிடையே அந்நியோன்யமான தொடர்புகளோ நெருக்கமோ இன்றியும், திரைப்படங்கள், மெகாத் தொடர்களில் வரும் பாவனைகளுமாய் மாற்றம் பெற்றவர்களும், தொலைக்காட்சிக்கே உறவு முறைக்குரிய கூர்மையான அந்தஸ்தை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

★குடும்பத்தோடு திரைப்படத்திற்கு செல்வது நின்றுவிட்டது.

★பொதுக்கூட்டங்களில் கலந்து கொள்வது குறைந்துவிட்டது.

★திரையரங்குகளில் மக்கள் கூட் டம் குறைந்துவிட்டது.

★வீடுகளிலும் உணவுகள் சீக்கிர மாக சமைக்கப்படுகின்றன.

★பொருளாதாரப் பளு அதிகமாகி விட்டது. மக்கள் தேவையில்லாத பொருட்களையும், ஆடம்பரப்பொருட்களையும் அதிகம் விரும்புகின்றனர்.

★கிரிக்கெட் விளையாட்டுப் போட்டி, மெகாத்தொடர்கள், திரை இசைகள், திரைப்படங்கள் பார்ப்பது வழக்கமாகி விட்டது.

★சமுதாயப் பொருளாதார வாழ்வில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தொலைக்காட்சிப் பாவனையுள்ள மக்கள் சாப்பிடுவதிலும் தூங்குவதிலும் சில மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளனர். பலர் தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன்பு அமர்ந்து உண்கின்றனர்.

★பாடசாலை மாணவர்களின் வீட்டுப்படிப்புக்கெடுகிறது.

★வானொலி கேட்பது குறைந்து விட்டது.

★நூல்களைப் படித்தல், பொது நூலகத்தைப் பயன்படுத்தல் போன்ற கல்வி கற்கும் முறை குறைந்துள்ளது.

★பெரும்பாலான சமயங்களில் பண்பாட்டைச் சீரழித்து, முற்றுப்பெற்றுள்ள வாழ்க்கையை சீரழிக்கக் கூடிய நிலை ஏற்படுகிறது.

★விளம்பரதாரர்கள் தயாரிக்கும் நிகழ்ச்சிகளில் சில கீழ்த்தரமான இரசனையைத் தூண்டும் வகையில் உள்ளன. இதனால் கலாசாரச் சீர்கேடுகள் ஏற்படுகின்றன.

★குடும்ப உறுப்பினர்கள் சிலர் தொலைக்காட்சியின் ரசிகர்களாக உள்ளனர். அதனால் அவர்களது குடும்ப வாழ்க்கை பாதித்துள்ளது. உழைப்பில் கவனம் செலுத்துதல் குறைவாக உள்ளது. வேலைகள் ஸ்தம்பிதமடைகின்றன.

★குழந்தைகள் தாமதமாகத் தூங்கச் செல்கின்றனர். சில குழந்தைகள் பாடசாலைக்குச் செல்லும் போது தமது காலைக்கடன்களைக் கூட சரிவரமுடிக்காமல் அசௌகரியமான நிலைமையினை எதிர்நோக்குகின்றனர்.

★தொலைக்காட்சி இல்லாதவர்கள் கூட வாடகைக்கு வாங்கிவந்து பார்க்கும் நிலைமையில் அவர்களது ஆவல் தூண்டப்பட்டிருக்கிறது. பொருளாதாரச் சிக்கலை எதிர்கொள்பவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

தொலைக்காட்சியில் காட்டப்படும் வன்முறை நிகழ்ச்சிகள் நேயர்களை வன்முறைக்கு இழுத்துச் செல்லும். அவை அவர்களை வன்முறைச் செயல்களைச் செய்யத் தூண்டலாம். வன்முறைச் செயல்கள் சமுதாயத்திற்கு கேடுதருபவை. தொலைக்காட்சியில் மக்கள் நலனுக்கு உகந்த நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டாலும் வன்முறை நிகழ்ச்சிகள் கூடுதலான இடத்தைப் பிடித்துள்ளன. மக்களைக் கவரும் நிகழ்ச்சிகள், விரும்பும் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படினும் வன்முறைகளும், தென்னிந்தியக் கலாசாரமும் பகட்டாக எம்மவரிடையே வெளித்தெரிகின்றன. மக்கள் விரும்பும் நிகழ்ச்சிகளை விடத் தரமானவையும் சமூகநலனைப் பாதுகாப்பவையுமாய் இருத்தலே சாலச்சிறந்ததாகும்.

சில இடங்களில் மக்கள் வன்முறை நிகழ்ச்சிகளை விரும்பிப் பார்க்கின்றனர். உள்ளத்தில் பொதிந்திருக்கும் வன்முறை உணர்ச்சி காரணமாக மனிதன் வன்முறை நிகழ்வுகளை விரும்பிப்பார்க்கிறான். தாம் செய்யும் வன்முறைநிகழ்வுகளை நியாயப்படுத்துகின்றனர். அதற்கு உடந்தையாக இருப்பதில் சில மனிதர்கள் பெருமைபெற்றுவிடுகின்றனர்.

குறிப்பாக இடப்பெயர்வுகளுக்குப் பின்பு தமிழ் மக்களின் சமூக, பொருளாதார அழிவுகள் பல உயிர்களைப் பறிகொடுத்த துயரங்கள் அதற்குமேல் காணாமல் போகின்றவர்களும், விசாரணைகளும், சித்திரவதைகளும் சாதாரணமாகப் போய்விட்ட காலங்களிலே தொலைக்காட்சி தவிர்ந்த சில தொடர்புச் சாதனங்களின் விரசமான கேள்வி, பதில்களும் சமூகத்தில் எவ்வாறான கீழ்நிலைத் தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கும். சமூகப் பொறுப்பு வாய்ந்தவர்கள் சிரிக்கவைப்பதாக எண்ணிக் கொண்டு ஒரு சமூகத்தை நாசம் செய்த நிகழ்வுகளும் நடந்துதான் இருக்கின்றன.

தொலைக்காட்சியில் காட்டப்படும் வன்முறையை விடத் தன்னிடமுள்ள வன்முறை உணர்வு இழிவானதன்று என்றும் நினைப்பவர்கள் இருக்கின்றார்கள். எனவே அவை இளைஞர்களின் எண்ணத்திலும், குணத்திலும் தீய விளைவுகளை உண்டாக்குகின்றன. தமது அன்றாட வாழ்வில் வன்முறை நிகழ்ச்சிகளைப் பின்பற்ற ஊக்கம் தருகின்றன. யாழ்ப்பாணத்தில் வன்முறை ஒரு பண்பாடாக மாறி கலாசாரச் சீரழிவிற்கு இட்டுச்செல்லக்கூடிய அபாயமும் இருந்துவருகிறது.

ஒரு கத்தியைக்கொண்டு பழங்களையும் வெட்டலாம். மனிதனையும் குத்தலாம். கத்தியைப் பயன்படுத்துவது பயன்படுத்துவோன் கையில் உள்ளது. அதேபோல் தொலைக்காட்சி நன்மையையும் தீமையையும் கொடுக்கும். எனவே மிகவும் கேவலமான நடத்தைகளும், மனித உயர் விழுமியங்களின் வீழ்ச்சிக்குத் துணைபோகாதிருப்பதும் கூட எம்மவர் கையிலேதான் உள்ளது. நடை உடை பாவனைகளில் கோரமான மாற்றத்தை ஏற்படுத்தி எல்லோரும் வில்லர்களாக விலாசம் எழுப்புவதில் ஒருவித பயனுமில்லை.

தொலைக்காட்சியின் எதிர்காலம் அதை நன்றாக இயக்குபவர்களின் கையிலே உள்ளது. ஆயினும் நல்ல விடயங்களைக் கிரகித்துக்கொள்வது கூட எமது கையிலேதான் இருக்கிறது.

சிறுவர்களுக்குரிய நிகழ்ச்சிகள் கல்வி நிகழ்ச்சிகள் பயனுள்ளவை. ஆனால் இவை சிறுவர்களால் விரும்பிப் பார்க்கப்படுகின்றதா? தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் கூடுதலாகக் கவனம் செலுத்தும் மக்கள் பயனுள்ள நிகழ்ச்சிகளை விரும்பிப் பார்க்கிறார்களா? வெறும் மெகாத் தொடர்கள், திரைப்படங்கள் போன்றவற்றை மட்டுமே விரும்பிப்பார்க்கிறார்களா? ஆய்விற்குரியதே.

சமுதாய விழிப்புணர்வு கருதிய நிகழ்ச்சிகள் பயனுள்ளவை என்பது மறுப்பதற்கில்லை. சமூக, பொருளாதார, அரசியல் நிகழ்வுகளைத் தொலைக்காட்சி மக்களுக்கு வெளிப்படையாகச் சித்தரிக்கும் நேரம், மக்கள் எவ்வெவ் அலைவரிசைகளில் தம் கவனங்களைக் கூடிய அளவில் அழுத்துகிறார்கள் என்பது யாருக்குத் தெரியும்? மனிதர்கள் மனிதர்களைத் துன்புறுத்துவதில் சொத்துச் சேர்ப்பதாக இன்பம் காணும்பொழுது இக்கருத்துக் கணிப்புச் சரியானவை என்பதும் கேள்விக்குறியானது தான்.

தொலைக் காட்சித் தொடர்கள் தோற்றுவித்துள்ள பிரச்சினைகளும் எண்ணிலடங்காதவை. கோபம், பழிவாங்கல், அடிதடி, கொள்ளை, கொலை, கற்பழிப்பு போன்ற இன்னோரன்ன கீழ் நிலையான நிகழ்ச்சிகளை சிறியோர் முதல் பெரியோர் வரை கண் முன் கொண்டு வந்து நிறுத்துகிறது. பெண்களை விளம்பரம் எனும் போர்வையில் ஆபாசக் காட்சிகளாகவும், பொருத்தமற்ற நடிபங்குகளிலும் சித்தரித்து விடுகின்றது. உளவியல் நியாயம் பேசுபவர்கள், குடும்பப் பெண்களை கேலி செய்து விட்டதாக பல படிகளில் உயர்ந்தவர்கள் இந்த கனவுலக அழுக்கு மூட்டைகளுக்கு ஒரு அரட்டை அரங்கம் நடத்தலாமே?

வன்முறையானது மனிதர்களை ஏதோ விதத்தில் உருட்டி, மிரட்டி, பயமுறுத்தி அவர்களின் சுய மரியாதைக்கு களங்கம் ஏற்படுத்தி விடுவதற்கும் அரும்பாடு படுகின்றது. நான்கு பேர் சேர்ந்து விட்டால் தனித்தவர்களை முட்டா ளாக்கும் பணியில் ஈடுபட்டு நேரங் களை வீணடிப்பவர்களும் இருக்கத் தான் செய்கின்றார்கள்.

தொலைக்காட்சி பணவீக்கத்தைக் காட்டுவது போல் இரு பெண் மணிகளின் உரையாடல் இங்கு நடைபெறுகிறது. "அவர்களிடம் முந்தியே ரீ.வி இருக்குது. இவர்களிடம் வசதியில்லை. இப்போதான் மருமகன் வாங்கிக் கொடுத்தவர்" இதைக் கேட்ட பெண் காவி வந்து சம்பந்தப்பட்ட பெண்ணிடம் கூற, சொன்னவனிடம் கடத்தல்காரர் வீட்டிலை சம்பந்தம் செய்த பிறகுதான் உந்த ரீ.வி வாங்கியது. மருமோனின்ரை அண்ணன் கடத்தல்(?) செய்யிறவனெல்லே? வீண் வம்புகளும் விலைக்கு வாங்குவதான வேலைகளும் அரங்கேற்றமாகி விடுகிறது. செய்தி வாசிக்கும் பெண்களைவிட, சில பெண்களின் அடுத்தவர் வீட்டுச் செய்தி வாசிப்புகளும், வதந்திகளும் இவற்றைப் பின் பற்றியவையோ? என்னவோ?

சமுதாயத்தில் சமூக விளைவுகளை ஏற்படுத்த பிற கருவிகளை விடத் தொலைக் காட்சியே சிறந்த கருவியாகும். தேசிய வளர்ச்சிக்கு ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட வேண்டியது.

(மிகுதி அடுத்தவாரம்)

# இங்கிலாந்தும் ஆங்கில மொழியும்



இவர்களிடையே போர்களும் படையெடுப்புகளும் நடைபெற்ற அதே சமயம் டேன்ஸ் பிரிவினர் ஆரம்பத்தில் எங்கிருந்து வந்தார்களோ அந்த மண்ணிலிருந்து படையெடுப்புக்கள் தொடர்ந்துகொண்டுதானிருந்தன. பிரித்தானியாவில் புதிதாக உருவாகிய ஏழு இராச்சியங்களிடையே நடைபெற்ற போர்கள் சுமார் கிபி 800ஆம் ஆண்டுகளின் ஆரம்பமளவில் இப்போர்கள் ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டன.

வெஸெக்ஸ் இராச்சியத்தின் மன்னனான எகபேர்ட் என்பவன் 829ஆம் ஆண்டளவில் ஏனைய ஆறு இராச்சியங்களையும் அடக்கிப் பிரித்தானியாவில் முதலாவது அரசியல் ஒற்றுமை உருவாவதற்கு வழிவகுத்ததாக அறியப்படுகின்றது. அதன்பின் 878ஆம் ஆண்டளவில் வெஸெக்ஸின் மன்னனான அல்பிரட் (Alfred) என்பவன் அடிக்கடி படையெடுத்த டேன்ஸ் பிரிவினரை முறியடித்துப் பிரித்தானியாவில் அமைதியை நிலை நாட்டியதோடு பிரித்தானியாவை ஒன்றாய் இணைத்தான். இம் மன்னனுடைய இச்சாதனைகளால் இவன் மகா அல்பிரட் (Alfred the Great) எனவும் அறியப்பட்டான். இவனின் வழித்தோன்றல்கள்தான் பிற்காலத்தில் பிரித்தானியாவின் முழுமைக்கும் அரசன் (King of all Britain) எனும் பட்டத்தை உபயோகிக்க ஆரம்பித்தார்கள்.

ஆங்லோ-சக்ஸன்ஸ் மக்கள் தமது அடையாளங்களை ஆயிரத்திற்கும் மேற்பட்ட எழுத்துக்களை ஆங்கில மொழியிலும் இலக்கணத்திலும் பதித்துச் சென்றுள்ளார்கள். இன்று பாவனையிலுள்ள ஆங்கில மொழியிலே ஐந்திலொரு பங்குச் சொற்கள் இவர்களால் விட்டுச் செல்லப்பட்டவை தான் எனவும் அறியப்படுகின்றது.

இதுவரை நாம் பார்த்த விடயங்களைச் சற்று இரை மீட்டுப் பார்ப்போம். சரித்திர ஆசிரியர்களின் குறிப்புகளின்படி கிட்டத்தட்ட கி.மு 500களில் பிரித்தானியா என்றழைக்கப்படும் தீவில் ஆங்கில மொழியுடன் வேறு மொழிகளும் பழக்கத்தில் இருந்தது தெரிகின்றது. அத்துடன் பிரிட்டொன் எனவறியப்பட்ட பகுதிகளும் அதனைச் சூழவுள்ள பகுதிகளும் அந்நியரின் படையெடுப்புகளுக்கும் ஆதிக்கத்திற்கும் பல நூற்றாண்டுகளாக கி.மு 500களின் பின்னர் தொடர்ந்து ஆட்பட்டிருந்ததும் கண்கூடு. இதனால் பல தேசங்களைச் சேர்ந்த கலவன் இனம் உருவாகியிருந்தது.

ஒருநாடு ஒரு இனம் பல நூற்றூண்டுகளாகத் தொடர்ந்து அந்நியர்களின் ஆளுமையில் இருக்கையில் பல மாற்றங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகின்றது. குறிப்பாக அவரவர்களின் மொழிகளில் குறைபாடுகளிருக்கையில் அந்நிய மொழிகளிலிருந்து வட்டியில்லாக் கடன் பெறுதல் அல்லது குறைபாடுகளை நிறைவு செய்யப் புதிய சொற்களின் தேடல் அல்லது வாய்மொழியாய் மக்களிடம் சாதாரணப் பேச்சு நடையில் புகுந்து பின்பு எழுத்தாடலிலும் உள்வாங்கப்படுகின்றது.

இதனால் தான் ஆங்கில மொழியிலே பல அல்லது பாரிய விழுக்காட்டளவில் வேறு மொழிச் சொற்கள் அதாவது ஐரோப்பிய நாட்டுச் சொற்கள் ஆட்சி செலுத்துவதாக மொழி ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். பெருவாரியான ஆங்கிலச் சொற்களின் மூலம் லத்தீன் மொழியாகவே காணப்படுகின்றது. அரேபிய மொழியிலிருந்து உள்வாங்கப்பட்டதற்கு உதாரணமாகச் சில சொற்கள்: ஒம்புட்ஸ்மன் (Ombudsman) ஸ்வீடன் மொழி, ஒமீகா (Omega) கிரேக்கம், ஒம்லெற் (Omlette) பிரான்ஸியம், பெர்சேர்க் (Berserk) ஸ்கன்டினேவியம், ரெனகிரேற் (Renegrade) ஸ்பானியம், இயற்கணிதம் (Algebra), கேத்திர கணிதம் (Geometry), நியூமெறிக் (Numeric) போன்றவை எகிப்திய கிரேக்க மொழியிலிருந்து பெறப்பட்டவை. (Catamaran) கட்டு மரம், தமிழிலிருந்து பெறப்பட்டது. அல்லது சேர்த்துக் கொள்ளப்பட்டதென்றும் அறியப்படுகின்றது. இப்படியாக நாம் இதற்குள் புகுந்து ஆராய்வோமானால் எண்ணிலடங்காத சொற்கள் அதாவது பல நூற்றுச் சொற்களை அறிய வருவோம் . ஆனால் ஒன்று, உலகெங்குமுள்ள பல மொழிகளிலிருந்தும் பல சொற்களை, பல சொற்பதங்களை உள்வாங்கியும், சேர்த்துக் கொண்டும் தமது மொழியை வளர்த்தார்கள் என்பதும் யதார்த்தமானதுதான்.

இங்கிலாந்து என்கின்ற நாட்டின் பலத்தையும் ஆங்கில மொழியின் பரவலையும் இன்றைய உலகின் அதன் ஆளுமையையும் கண்டு கொண்டோம். இதில் ஒன்றை நாம் கவனிக்க வேண்டும். ஆங்கிலம் என்கின்ற கலவை மொழியின் பரவல், ஆதிக்கமென்பது அதன் திறத்தால் அல்லது அழகால் அல்லது மொழி வளத்தால் உலகத்தோர் அதை தேடிச் சென்றதால் ஏற்பட்டதல்ல.

பிரித்தானியர்கள் உலகெங்கனும் பல நாடுகளைக் கைப்பற்றியிருந்தமையாலும், அவர்களுடைய ஆட்சி மொழியாகவிருந்தமையாலும் அந்தந்த நாடுகளில் ஆங்கிலம் பெருமளவில் பரவியது, பரப்பப்பட்டது.

நாம் இதுவரை பார்த்த விடயங்கள் கிட்டத்தட்ட 2500 வருடங்கள் அல்லது சற்று முன்னதான கால கட்டத்தைச் சேர்ந்தவை.

இக் கட்டுரையின் அதி முக்கிய பகுதிக்குள் இப்பொழுது நாம் நுழைகின்றோம். நம் தாய்மொழியாம் தமிழினைச் சற்றுப் பார்ப்போம். "கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே தோன்றிய மூத்த குடி தமிழ்க் குடி" என்று எம் முன்னோர் பெருமையடித்துக் கொண்டார்கள். தமிழன் எவ்வளவு பழமையானவன் என்பதைச் சுட்டிநிறகின்றது என்பது தெளிவு. இது அவனுடைய மொழியும் தொன்மையானதென்பதைச் சுட்டுகின்றது.

கலாநிதி (Doctor Coldwel) கால்ட்வெல், பேராசிரியர் சுந்தரம்பிள்ளை ஆகியோரின் ஆராய்ச்சியின் பயனாகத் தமிழ் மொழியின் வரலாறு வெளிவரலாயிற்று. இதன் பின்னர் சிந்து வெளியில் நடாத்தப்பட்ட புதை பொருள் ஆய்வுகளின் பயனாகத் தமிழையும் தமிழரைப் பற்றியும் தெளிவான வரலாறுகள் வெளிவந்தன.

சேர் ஜோன் மார்ஷல் என்பவரின் மொகஞ்ஜதாரோவும் சிந்து வெளி நாகரிகமும் எனும் நூலில், "மிகப் பழைய மொழிகள் சுமேரியம், எகிப்தியம், மினோவம், கிதைதி, பாஸ்க்கு, சீனம், தமிழ் என்பன அறியப்படுகின்றன. இம் மொழிகள் எல்லாம் ஒரு தொடக்கத்திலிருந்து பிரிந்தவை என்று கருதப்படுகின்றன. சிந்து ஆற்று வெளிகளிற் கிடைத்த முத்திரைகளில் காணப்படுவன போன்ற எழுத்துக்கள் கிதைதி, சுமேரியா, கிரேத்தா முதலிய நாடுகளில் வழங்கின. இவ்வகை எழுத்துக்கள் ஹைதராபாத்திலும், திருநெல்வேலிப் பகுதிகளில் கிடைத்த வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட மட்பாண்டங்களிலும் இலங்கையிலும் காணப்பட்டன. ஈஸ்டர் தீவுகளில் இவ்வெழுத்துக்கள் மிக அண்மை வரையில் வழக்கிலிருந்தன. சிந்துவெளி எழுத்துக்களையும் ஆராய்ச்சி செய்தோர், இவ்வெழுத்துக்கள் எல்லாம் ஒரு தொடக்கத்தினின்று பிரிந்து வெவ்வேறு வகையில் வளர்ச்சி அடைந்தவை எனக் கூறுகின்றனர். இவை போன்ற காரணங்களைக் கொண்டு மிகப் பழையதொரு காலத்தில், உலகில் ஒரே வகை எழுத்துக்களையுடைய ஒரு மொழி இருந்தது என ஆராய்ந்தறியப்படுகின்றது. அம் மொழி தமிழே எனக் கருத இடமுண்டெனவும் கூறப்படுகின்றது.

சிந்து வெளி எழுத்துக்களை ஸ்பானிய நாட்டு ஹெரஸ்பாதிரியார் ஒலி முறையாக வாசிக்கும் பொழுது அதிலே பல தமிழ் சொற்கள் காணப்படுவதாகக் கூறியுள்ளார். அத்துடன் சிந்து வெளியில் வழங்கிய எழுத்துக்களினின்றுமே பிராமி எழுத்துக்களும் தமிழ் எழுத்துக்களும் தோன்றியதாகவும் அறியப்படுகின்றது.

திராவிடரின் மொழி திரவிடம், திரமிழம், தமிழம் இறுதியில் தமிழ் என மருவியதாகவும் ஒரு சாரார் கூறுவர்.

சிந்துவெளி நாகரிகம் கி.மு 5000 என்று பார்க்கும்பொழுது தமிழ் மொழியும் தமிழ் எழுத்துக்களும் 7000 ஆண்டுகளுக்கு முன்னரேயே வளர்ச்சியடைந்த நிலையில் இருந்தன என எண்ணலாம். கி.மு 1000மாம் ஆண்டளவில் சாலமன் என்னும் யூத மன்னன், தனது கப்பல்களை இந்தியாவுக்கு அனுப்பிச் சிறந்த பண்டங்களைப் பெற்ற வரலாறு விவிலிய மறையில் காணப்படுகின்றது. இந்தியாவிலிருந்து சென்ற பண்டங்கள், தம்மோடு தமது தமிழ்ப் பெயர்களையும் கூடவே கொண்டு சென்றன. இப்படியாகச் சென்ற தமிழ்ப்பெயர்கள், எபிரேய மொழியிலெழுதப்பட்ட விவிலிய மறையிற் காணப்படுகின்றன. தமிழ் நீண்ட காலம் உலக வழக்கிலிருந்து வருவதாயினும் அது மிக வேறுபாடு அடையவில்லை என அச் சொற்களைக் கொண்டு அறியலாம்.

டீ. ஆர். பாண்டர்கர் (D.R.Bhandarkar) என்பவரின் இந்தியாவின் புரதான சரித்திரம் எனும் பேருரையில் "ஆரியரின் வருகைக்கு முன்பு வட இந்தியாவில், திராவிட மொழி மேலோங்கி இருந்ததாக உறுதியாக நம்பலாம். அதே சமயம் தமிழ், இந்திய நாடு முற்றிலும் ஒருகால் வழங்கிற்று என்பதை ஆராய்ச்சியாளர் ஒரு தலையாக ஏற்றுக் கொள்கின்றனர். வட இந்தியாவிலே பேச்சு மொழிகளிலும் சமிஸ்கிருதம் அடர்ந்து நிறைந்தும் அதிலிருந்து மருவிய சொற்களைக் கொண்டதாகவிருக்கும் வங்காள மொழி பெருமளவில் திராவிடச் சொற்களையும் சொற் பதங்களையும் கொண்டதாகக் காணப்படுவதாக வங்காள மொழியை ஆய்வு செய்ததிலிருந்து கிடைத்த முடிவுகளின்படி நம்பவேண்டியுள்ளதாகவும் தெரிகின்றது. மிகப்பழைய வட மொழி வேதங்களில், பல தமிழ்ச் சொற்கள் காணப்படுகின்றன என்பதைப் பலர் ஆராய்ந்து காட்டியுள்ளனர். இந்திய நாட்டில் வழங்கும் மொழிகள் எல்லாவற்றின் இலக்கண அமைப்பும், திராவிட இலக்கணத்தை ஒத்ததென்பது ஆராய்ச்சி வல்லார் துணிபு". இந்திய நாடு முழுமையிலும் தமிழ் வழங்கியது என்பதற்கு இதுவும் ஓர் ஆதாரமாகும்.

முன்னாள் இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு என்ன கூறுகின்றார். "இந்திய ஆரியர்கள் மிகப் பழைமையான திராவிட நாகரிகத்தினால் பெரிதும் கவரப்பட்டதால் திராவிட நாகரிகத்தின், செல்வாக்கின் தாக்கம் இவர்களிடையே காணப்பட்டது. அதன் சிதைவுகள் இன்றும் மொகஞ்ஜதாரோவில் காணக்கூடியதாகவுள்ளது"

"சிந்து வெளியில் வாழ்ந்த மக்களின் தொடர்பிலுள்ளவர்களே தமிழராவர்" என ராதா குமுட் முக்கர்ஜி, இந்து நாகரிகம் எனும் நூலில் குறிப்பிட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

தமிழ் மொழியில் பல வட மொழிச் சொற்கள் கலந்துள்ளன. இவற்றுக்கான சில காரணங்களுள் ஒன்றாவது, சமணரும் பௌத்தரும் தமிழில் நூல் செய்தமையும், வட இந்தியாவில் பெருமளவு குடியேறிய ஆரியர், பாரசீகர், அராபியர், போன்ற பலரின் மொழிகளின் கலப்பாலும் திட்டமிடப்பட்டுச் செய்யப்பட்ட திணிப்புளாலும் என நாம் கொள்ளலாம். இன்று சிங்கள அரசு திட்டமிடப்பட்ட முறையில் சில சிங்களச் சொற்களை எமது சிறார்களின் பாடநூல்களில் திணிப்பது போன்று என நாம் கொள்ளலாம்.

தொல்காப்பியம் தொல்காப்பியரால் இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முன்பு அல்லது அதற்கும் மிக அதிகமான காலத்திற்கும் முற்பட்டதாக இருக்கலாம் எனவும் வரலாற்றாசிரியர்கள் நம்புகிறார்கள். இதற்குக் காரணம்: தொல்காப்பியத்தில் நூன் மரபு, மொழி மரபு, பிறப்பியல், செய்யுளியல் எனப் பல இலக்கண விளக்கங்களை உள்ளடக்கியதாகவுள்ளதால், எம் மொழி எத்தகைய வளர்ச்சியடைந்ததாக இருந்திருந்தால் அதனை அடிப்படியாக வைத்துத் தொல்காப்பியர் தொல்காப்பியத்தை எழுதியிருப்பார் என்பதே இவர்களுடைய கருத்தாகும்.

இவைற்றை நாம் பார்க்கும் பொழுது எமது தாய்மொழியாம் தமிழ் 7000 ஆண்டுகளுக்கு முன்னமேயே வளர்ச்சியடைந்த, வளம் கொண்ட மொழியாக இருந்திருக்கின்றது என்பது தெளிவு. ஆகவே, அப்படிப்பட்ட மொழியைப் பேசியவர்களின் வழித்தோன்றல்கள் நாம் எனப் பெருமை கொள்ளலாம். இப்படியாகப் பழம் பெருமை பேசுவதோடு நின்றுவிடாது எம் தலைவன் போல் பேச்சைக் குறைத்து மென் மேலும் எம் மண்ணையும் இனத்தையும் மொழியையும் கலை பண்பாட்டையும் வளங்கொழிக்கச் செய்வதற்கு உழைத்தல் வேண்டும்.

தமிழினம் உலகிலே மூத்த குடிகளுள் ஒன்று என்பதையும் தொன்மையான மொழியைக் கொண்டதென்பதையும் மேலெழுந்தவாரியாகவேனும் அறிந்து கொண்டோம். செந்தமிழை நாம் யார் மேலும் திணிக்கவில்லை. சோழன் காலத்தில் கைப்பற்றிய கடாரம் போன்ற நாடுகளையும் அவர்களிடமே திருப்பித் தந்தோம். ஆனால் தமிழினத்திலும் பார்க்க மொழியிலும் பண்பாட்டிலும் நாகரிகத்திலும் பழக்க வழக்கங்களிலும் பின் தங்கியிருந்த ஓர் இனத்திடம் அடிமைப்பட்டோம். இதை எண்ணும் பொழுது மனம் வேதனைப்படவில்லையா? இரத்தம் கொதிக்கவில்லையா?

அல்லது "இதெல்லாம் என்னத்துக்கு? பேசாமல் எங்கடை பாட்டிலை எங்கடை அலுவலைப் பாத்துக்கொண்டு நல்லாச் சாப்பிட்டமா ஏவறை விட்டமா? நல்லா நித்திரை கொண்டமா? நல்லா உடுத்து நகை போட்டு ஊருக்குக் காட்டிப் பெருமைப் பட்டுக் கொண்டமா?" என்று எண்ணத் தோன்றுகிறதா? அப்படித் தோன்றினாலும் அதையும் நடைமுறைப்படுத்தப் பணம் வேண்டும். அதைத் தேடுவதற்கு உழைக்க வேண்டும். ஓடி ஓடி உழைப்பதற்குத் தயாராக இருந்தாலும், கட்டுப்பாடில்லாத சுதந்திரம் வேண்டும். மீன் பிடிக்கப் பொறுத்த நேரத்தில் செல்ல, வயல் தோட்டம் செய்யஇ இரவு நேரத்தில் நீர் இறைக்க என்று கட்டுப்பாடற்ற முறையில் நடமாட, பெண்கள் நடு நிசியிலும் அச்சமின்றித் தொழிலுக்குச் செல்லக் கட்டுப்பாடுகளைத் தகர்க்க வேண்டும் தடைகளை உடைக்க வேண்டும்.

இக் கட்டுரையை வரைவதற்கு ஆங்கிலப் பேரகராதிகளான (World Book, Britanica,) போன்றவை ஆங்கில ஐரோப்பியச் சரித்திரத்தைத் தொட்டுப் பார்ப்பதற்கு உதவின. ந.சி.கந்தையா அவர்களின் தமிழகராதியும் புலியூர்கேசிகனின் தொல்காப்பியமும் தமிழைத் தொட்டுப் பார்க்க உதவின. ஆங்கிலப் பேரகராதிகள் ஆங்கில ஐரோப்பிய விடயங்களுக்கு மாத்திரமல்ல மேலும் பலப் பல அளப்பரிய உலக விடயங்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு பாரிய களஞ்சியமாக விளங்குகிறது. இக் கட்டுரை மாத்திரமல்ல மேலும் நூற்றுக் கணக்கான கட்டுரைகளைத் தொகுப்பதற்கு இயலுமானதாக இவை விளங்குகின்றன.

இப்படியான பேரகராதிகள் தமிழில் இல்லை. ஏன் இல்லை என்கின்ற கேள்வி பல வாசகர்களிடையே எழலாம், எழவேண்டும். காரணம் மிக இலகுவானது. தமிழனுக்கென்று ஒரு நாடில்லை. அதனால் அவனுக்குத்

**அசுபதியான்**

தேவையானவற்றை அவனால் செய்து கொள்ள முடியவில்லை. அவனுக்குத் தேவையான நிதி வசதிகள், கருவிகள், ஆளணிகளைச் செய்து தர அவனை அடிமை கொண்டுள்ள நாடுகள் விரும்பவில்லை. அப்படியே தமிழன் தானாகச் செய்ய முயற்சித்தாலும் அதற்கும் தடைவிதித்து தமிழனின் தொன்மை வெளிவராதிருப்பதற்கு வழி செய்து கொண்டிருக்கிறான்.

இவற்றையெல்லாம் நாம் அடைய எம்மைச் சுற்றி நாமே போட்டுக் கொண்டுள்ள சிறிய சிறிய வட்டங்களை நாமே உடைக்க வேண்டும். நாம் தமிழர் தமிழீழத் தமிழர் எனும் வட்டத்தைப் போட்டுக்கொள்ள வேண்டும். அதே சமயம் அந்த வட்டமும் எமது முன்னேற்றத்திற்குத் தடையாகாமல் அவதானமாக இருத்தல் வேண்டும்.

செய்வோமா? எம்மால் முடிந்த காரியம். எமது சுயநலன்களிற்காகவாவது செய்வோம். எமது கருத்து வேறுபாடுகளை நாமே பேசி அலசித் தீர்த்துக்கொள்வோம். எந்தக் கொம்பர்களும் எமக்குத் தேவையில்லை. ஏனெனில் நாமே பெரிய கொம்பர்கள்.

இன்று எம்மை நாமே ஆட்சி செய்ய விளைகிறோம், ஆட்சியும் செய்வோம். நாம் யார்க்கும் குடியல்லோம். ஆனால் எவரையும் அடிமையும் கொள்ளோம்.




# மேற்கிந்தியத்தீவு அணியுடனான தொடரைக் கைப்பற்றுவோம்

## —அத்தப்பத்து நம்பிக்கை—



வெஸ்ட்இண்டீசுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சிறப்பாக ஆடி தொடரைக் கைப்பற்றுவோம் என்று இலங்கை அணி கப்டன் அத்தப்பத்து தெரிவித்துள்ளார்.

சந்தர்பால் தலைமையிலான வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் அணி இலங்கையில் பயணம் செய்து விளையாடி வருகிறது. இலங்கை-வெஸ்ட் இண்டீஸ் இடையேயான 2டெஸ்ட் போட்டி கொண்ட தொடரில் முதலாவது டெஸ்ட் போட்டி வருகிற 13 ஆம் திகதி தொடங்குகிறது. விளம்பர ஒப்பந்தம் பிரச்சினை காரணமாக லாறா, சார்வான், கெய்லே போன்ற முன்னணி வீரர்கள் வெஸ்ட் இண்டீஸ் அணியில் இடம்பெறவில்லை. எனவே 'ஏ' அணி வீரர்களை கொண்ட அனுவபம் இல்லாத வெஸ்ட் இண்டீஸ் அணி இலங்கை வந்துள்ளது.

இந்த நிலையில் இதுகுறித்து இலங்கை அணி கப்டன் அத்தப்பத்து கூறியதாவது; அனுபவம் இல்லாத வீரர்களை கொண்ட வெஸ்ட் இண்டீஸ் அணியுடன் மோதுவது துரதிர்ஷ்டவசமானது, நாங்கள் வலிமையான அணியுடனேயே மோத விரும்புகிறோம். வெஸ்ட் இண்டீஸ் அணி கடந்த முறை இலங்கை வந்த போது லாறா சிறப்பாக ஆடி 600 ஓட்டங்களை குவித்தார். அவர் தற்போதுள்ள அணியில் இடம் பெறவில்லை. சிம்பாப்வேக்கு எதிரான ஆட்டத்தின்போது இதேபோல் அனுபவம் இல்லாத வீரர்களுக்கு எதிராக ஆடினோம். அப்போது அந்தத் தொடர் விறுவிறுப்பு இல்லாமல் போனது. வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான முதலாவது டெஸ்ட், எங்கள் அணிக்கு 150 ஆவது ஆட்டம் ஆகும். இதில் சிறப்பாக ஆடி வெற்றி பெறுவதுடன் தொடரையும் கைப்பற்றுவோம் இவ்வாறு அத்தப்பத்து தெரிவித்துள்ளார்.

# சச்சின் இல்லாதபோதும் இந்திய அணி சாதிக்கும்

## —சேவாக்



(பெங்களூர்)

இலங்கைத் தொடரில் சச்சின் இல்லாத இளம் இந்திய அணி சாதிக்கும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார் வீரேந்தர் சேவாக்.

இந்திய இலங்கை வெஸ்ட் இண்டீஸ் அணிகள் பங்கேற்கும் முத்தரப்பு ஒரு நாள் கிரிக்கெட் தொடர் வரும் 30 இல் தொடங்குகிறது. முழங்கை (டென்னிஸ் எல்போ) காயத்திற்கு சத்திர சிகிச்சை செய்துள்ளதால் சச்சினும், தடை காரணமாக கப்டன் சவுரவ் கங்குலியும் இத் தொடரில் பங்கேற்கவில்லை. இரு அனுபவ வீரர்கள் இல்லாத நிலையில் இந்திய அணி சவாலை சந்திக்கவுள்ளது. இதில் இளம் வீரர்கள் சிறப்பாகச் செயல்பட்டு வெற்றி தேடித் தருவார்கள் என பேட்டியளித்துள்ளார். ஆரம்ப ஆட்டக்காரர் சேவாக்.

சச்சின் சவுரவ் கங்குலி இருவரும் அணியின் மூத்த வீரர்கள் மிகுந்த அனுபவம் வாய்ந்த இவர்கள் விளையாடவில்லை. எனில் அணியின் செயல்பாட்டில் கட்டாயம் பாதிப்பு ஏற்படும். இவர்கள் இல்லாத நிலையில் இலங்கைத்தொடர் தமது அணிக்கு கடும் சவாலானது தான். ஆனால் இம்முறை திறமை மிக்க இளம் வீரர்கள் நிறையப்பேர் அணியில் இருக்கிறார்கள். இதனால் நமது அணி சவாலில் வெற்றி காணும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

என்னைப் பொறுத்த வரையில் உடல் தகுதியில் அதிக கவனம் எடுத்து வருகின்றேன். பெங்களூர் பயிற்சி முகாமில் கடுமையான உடற்பயிற்சிகள் செய்து எடையை குறைத்துள்ளேன் தவிர எதிரணி வீரர்களின் குறைபாடுகளை 'டிவி' வீடியோ மூலம் பார்த்து வருகிறேன். இது இலங்கை தொடருக்கு நல்ல பலன் தரும் என நம்புகிறேன். டெஸ்ட் போட்டிகளுக்கு ஒரு நிலையான துவக்க ஆட்டக்காரர் இன்னும் அமையவில்லை. இந்த சீசனில் இதற்கு முடிவு கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை இருக்கிறது. சர்வதேச கிரிக்கெட் சபையின் விதிமுறைக்கு மாற்றங்கள் வரவேற்கத்தக்கது. இதனால் துடுப்பாட்ட வீரர்களுக்கு அதிக நன்மை உள்ளது என்றார். சேவாக்.

# வேறு அணிகளுக்கு பயிற்சி அளிக்கமாட்டேன்

## கபில்தேவ்



"இந்தியாவைத் தவிர வேறு எந்த அன்னிய அணிக்கும் பயிற்சியாளராக பணியாற்றமாட்டேன் என்கிறார்." கிரிக்கெட் ஜாம்பவான் கபில்தேவ்.

விளையாட்டு வளர்ச்சிக்காக நிறுவப்பட்டுள்ள 'ஹீரோ இந்தியன் ஸ்போர்ட்ஸ் அகாடமியின்' (ஹிசா) தலைவராக உள்ளார் கபில். பெங்களூர் வந்த இவர் ஹிசா அமைப்பின் புதிய உறுப்பினராக முன்னாள் தடகள வீராங்கனை அஷ்வினி நாச்சப்பா சேர்ந்து இருப்பதாக தெரிவித்தார்.

இந்திய அணிக்கு மட்டுமே பயிற்சியாளராக இருப்பேன் தாய்நாட்டு உணர்ச்சிமிக்கவன் என்பதால் வேறு அன்னிய அணிக்கு ஒருபோதும் பயிற்சியாளராகப் பணியாற்றமாட்டேன் இதற்காக மற்றவர்கள் பற்று இல்லாதவர்கள் என்று குறிப்பிடவில்லை. ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட விருப்பம் இருக்கும். கங்குலி மீண்டும் சிறப்பாக விளையாட சிறிது காலம் தேவைப்படும். 3 அல்லது 6 மாதங்கள் அவகாசம் தரலாம். கிரிக்கெட் போர்ட், எனது ஆதரவு எப்போதுமே அவருக்கு உண்டு. ஒரு நாள் போட்டிகளில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள புதிய விதிமுறைகள் ரசிகர்களுக்கு மகிழ்ச்சி அளித்தால் வரவேற்கத்தக்கது. அணிக்கு பந்து வீச்சு பயிற்சியாளரை நியமிக்கலாம். இது பாதிப்பை ஏற்படுத்தி விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். கிரிக்கெட் வீரர்களுக்கு நிகராக மற்ற விளையாட்டுகளில் பிரகாசிப்பவர்களுக்கும் அங்கீகாரம் அளிக்க வேண்டும். விளையாட்டுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்வது மிகவும் அவசியம் தற்போதைய விளையாட்டு பட்ஜெட் அமெரிக்காவின் டெடாப் 10 வீரர்கள் ஒரு ஆண்டுக்குச் செலவிடும் தொகையாகத்தான் உள்ளது. இவ்வாறு கபில் கூறினார்.

# சிம்பாப்வே கிரிக்கெட் அணிக்கு தடைவிதிக்க நியூசிலாந்து கோரிக்கை

சிம்பாப்வே நாட்டில் ரொபர்ட் முகாபே தலைமையிலான ஆட்சி நடந்து வருகின்றது. அங்குள்ள முக்கிய நகரங்களில் நகர புனரமைப்பு என்ற பெயரில் ஆக்கிரமிப்பு வீடுகள் இடிக்கப்பட்டு வருகின்றன. இதில் இலட்சக்கணக்கான அப்பாவி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 2 இலட்சம் மக்கள் வீடுகளை இழந்துள்ளனர்.


ரொபர்ட் முகாபே அரசு வேண்டும் என்றே அத்துமீறி நடப்பதாகவும் மனித உரிமை மீறப்பட்டு இருப்பதாகவும் சர்வதேச அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளன. இந்த நிலையில் நியூசிலாந்து கிரிக்கெட் அணி அடுத்த மாதம் ஆபிரிக்க நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து விளையாட இருந்தது. அப்போது சிம்பாப்வேயிலும் போட்டிகள் நடைபெறும்.

ஆனால் இப்போதைய சம்பவத்தை அடுத்து நியூசிலாந்து சிம்பாப்வே செல்லமாட்டோம் என்று அறிவித்துள்ளது. நியூசிலாந்தின் இந்த முடிவுக்கு சர்வதேச கிரிக்கெட் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. அப்படி நடந்து கொண்டால் நியூசிலாந்து கிரிக்கெட் அணி 20 இலட்சம் அமெரிக்க டொலர்கள் அபராதம் செலுத்த வேண்டுமென்று அறிவித்துள்ளது. இருந்தாலும் மனித உரிமை மீறப்படும் ஒரு நாட்டின் அணியுடன் நாங்கள் விளையாடமாட்டோம் என்று நியூசிலாந்து கூறிவருகின்றது. இதற்கிடையே நியூசிலாந்து அரசு சிம்பாப்பே கிரிக்கெட் அணிக்கு உலக அளவில் தடை விதிக்கவேண்டும் என்று சர்வதேச கிரிக்கெட் சங்கத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பாக நியூசிலாந்து வெளி விவகார மந்திரி பில்கோப் கூறியதாவது;

எங்கள் நாட்டு அணி சிம்பாப்வே நாட்டில் விளையாடும் போது அந்த இடத்தில் இருந்து சில கிலோ மீற்றர் தூரத்தில் மனித உரிமை மீறல் நடந்து கொண்டிருக்கும். அதை வேடிக்கை பார்த்துக்கொண்டு எங்களால் விளையாட முடியாது. மனித உரிமை மீறப்படும் ஒரு நாட்டு அணியுடன் நாங்கள் விளையாட விரும்பவில்லை. சிம்பாப்வே அணி சர்வதேச போட்டிகளில் பங்கேற்க முடியாதபடி தடை விதிக்கவேண்டும் இவ்வாறு அவர் கூறினார். சிம்பாப்வே அணி இந்த ஆண்டு இறுதியில் நியூசிலாந்து நாட்டில் சுற்றுப்பயணம் செய்வதாக இருந்தது. ஆனால் அந்த அணி வீரர்களுக்கு விசா வழங்கமாட்டோம் என்றும் நியூசிலாந்து அறிவித்துள்ளது.




**சுவிற்சர்லாந்தின் லாசனே நகரில் நடந்த பெண்களுக்கான போல்வால்ட் பிரிவில் ரஷ்ய வீராங்கனை எலினா இஷின்பயேவா 4.93 மீ. உயரம் வரை தாண்டி புதிய உலக சாதனை நிகழ்த்தினார். சாதனையை காட்டும் கடிகாரம் முன்பாக இனிய புன்னகையுடன் இஷின்பயேவா.**




**அதிசயம்.... ஆனால் உண்மை: சுவிற்சர்லாந்தின் லாசனே நகரில் தடகளப் போட்டிகள் நடந்து வருகின்றன. இதில் ஆண்களுக்கான 110 மீற்றர் தடை ஓட்டப்பிரிவில் ஒரு அதிசய சம்பவம் நடந்தது. இதில் சீனாவின் ஜியாங்லியு (இடது), அமெரிக்காவின் டெரன்ஸ் டிரம்மல் இருவரும் ஒரே நேரத்தில் போட்டி தூரத்தை (13.5 வினாடிகளில்) கடந்து முதலிடம் பெற்றனர்.**



நெல் எங்களது பிரதான பயிர். அதன் அரிசி எங்களது முக்கியமான உணவு. அவ்வாறே அறுவடையின் பின்னர் கழிவாக விடப்படும் வைக்கோலும் ஒரு முக்கியமான பொருளாகும் என்பதை நாங்கள் யாரும் உணருவதில்லை. அதைவிட அவலம் யாதெனில் பெரும் பாலான விவசாயி கள் தங்கள் வயல்களில் வைக்கோலை எரித்தும் விடுகின்றார்கள்.


# பொருண்மிய வாசல்

## எங்கள் பொருண்மிய வளம்

சிதம்பரதிரு

உண்மையில் வைக்கோலில் தாவர போசனைச் சத்துக்கள் உள்ளன. இதனால் வைக்கோலை வயலுக்கு பசளையாகப் பயன்படுத்த முடியும். தொடர்ச்சியாக வயல்களில் நெல் பயிரிடப்படுவதால் மண்ணில் ஏற்படும் சத்துக் குறைபாடுகள் விளைச்சலைப் பாதித்துவிடும். இதனைத் தவிர்ப்பதற்கு வைக்கோலை வயலுக்கே கொடுத்து விடுவது பயனுள்ள நடவடிக்கையாகக் கருதப்படுகிறது.

அதாவது மூன்று போகங்களுக்கும் தொடர்ச்சியாக வைக்கோலை வயலுக்கு பசளையாக இடுவதன் ஊடாக ஏக்கர் ஒன்றுக்கு சுமார் 8 புசல் தொடக்கம் 10 புசல் வரையிலான விளைச்சல் அதிகரிக்கும் என விவசாய நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.



இதுதவிர வயலுக்கு இடப்படும் வைக்கோல் வயலில் சிதைவடைவதன் ஊடாக பயிருக்கான பிரதான போசணைப் பொருட்களான நைதரசன், பொட்டாசியம் போன்றன மண்ணுடன் சேர்ந்து விடும். இதன் காரணமாக மேற்குறித்த போசணைப் பொருட்களாக வயலில் சேர்க்கப்படும் இரசாயனப் பசளைகளின் அளவை குறைக்க முடியும்.

அத்துடன் வைக்கோலை வயலுக்கு இடுவதனால் வயல்களில் முளைக்கும் களைகளைக்கூட கட்டுப்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறான செயற்பாட்டால் களை நாசினிகளின் பாவனையைக்கூட மட்டுப்படுத்தலாம்.

வைக்கோலை ஒரு வயலுக்கு தொடர்ச்சியாக இடுவதன் மூலம் ஏற்படக்கூடிய பிரதான நன்மை யாதெனில் மண் இலகு தன்மை அடைவதாகும். மண்ணின் இலகு தன்மையானது பயிரின் வேர்வளர்ச்சியை அதிகரிக்கச் செய்யும். இது நெல் சிறப்பாக வளர வழிசெய்யும்.

அத்துடன் மண் நீரை நன்கு இழுத்து வைத்திருக்கும். இதன் காரணமாக நீர்ப் பாசன இடைவெளியைக்கூட அதிகரிக்கச் செய்யலாம்.

இவ்வாறு பல நன்மைகளைத் தரக்கூடிய வைக்கோல் தொடர்பாக எமது விவசாயிகள் அதிக அக்கறைகொள்ளவேண்டும்.

## வெண்டிச் செய்கையிலிருந்து அதிக இலாபம் பெறுவது எப்படி?

நாம் வாழுகின்ற தாயகப் பூமியானது வெப்பக் காலநிலை நிலவுகின்ற ஓர் பூமியாகும். இந்த வெப்பத்தின் விளைவுகளைத் தவிர்ப்பதற்காக எமது முன்னோர் கையாண்ட வழிகளில் ஒன்று வெண்டியையும் தமது உணவில் சேர்த்துக் கொண்டமையாகும். பொதுவாக பேச்சு வழக்கில் பச்சை வெண்டி, பால் வெண்டி, என்று அழைக்கப்பட்டாலும் இதில் பல பயிரியல் இயல்புகள் இரண்டறக் கலந்திருக்கின்றது என்பதற்கு எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை. அவற்றை சற்று உற்று நோக்குவோமானால்.

ஆங்கிலத்தில் OKRA என்றும் தாவர இயலில் Abelmoschus Esculentus என்றும் அழைக்கப்படும் வெண்டிப்பயிரானது அதிகளவு வெப்பத்தை தாங்கும் இயல்புள்ளது. அத்துடன் இதனை கோடை, மாரி காலங்களிலும் நடுகை செய்து அதிகளவு பயனைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். மழைகாலத்தின் போது நீரின் தேவையை கொண்டிராவிட்டாலும் கோடை கால பயிர்ச் செய்கையின் போது நீர்ப்பாசன வசதி தேவையாகும்.

பயிர் செய்யும் மண்ணை எடுத்து நோக்கினால் பயிர் செய்யும் நிலமானது முன்னர் வெண்டிப் பயிர் இடாத நன்கு நீர்வழிந்தொடக் கூடிய சற்று அமிலமான ($P^H$ 6-6.8) மண் சிறப்பானது. பயிர்ச் செய்கைக்கு முன்பாக நிலமானது சேதனப் பசளைகளால் நன்கு வளமாக்குவதுடன். அதாவது 10-15 வண்டில் உக்கிய மாட்டு எரு ஆனது ஒரு ஏக்கர் நிலத்திற்கு போதுமானது ஆகும். பயிர் செய்வதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் நிலத்தை பண்படுத்தி பசளை இடுவது சிறப்பானது. அத்துடன் நிலமானது நன்கு நீர் வழிந்தோடக் கூடிய இயல்பைக் கொண்டிருக்கவேண்டும்.

*விதை வர்க்கங்கள் தேர்வு:-*

வெண்டிப் பயிரில் பல்வேறு வர்க்கங்கள் இருப்பினும் அந்த அந்த ஊர்மக்களின் விருப்பு வெறுப்புக்கு அமைவாக விதைகளைத் தெரிவு செய்வது பிரதானமானதாகும்.

*வர்க்கங்கள்:- கரிதா*

பிரதானமாக விதைகளை விவசாயிகளே உற்பத்தி செய்யும் நிலைமை உள்ளது. இதனால் நல்ல வர்க்கங்களைத் தெரிவுசெய்வது என்பது கடினமாக உள்ளது என்பதுடன விதை மூலமாக வைரஸ் (Virus) நோய்களும் பரவுகின்ற சந்தர்ப்பங்களுமுண்டு என்பதனால் விதைகளை பின்வரும் இடங்களிலிருந்து பெறுவது உங்களது இலாபத்திற்கு உற்ற துணையாக இருக்கும்.

*இடங்கள்:-*

-விதை உற்பத்தி நிறுவனம்- யாழ்ப்பாணம்.

விவசாய கமநல சேவை நிலையங்கள்.

-தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன விற்பனைப் பகுதி.

*பயிர் இடும் முறை:-*

நிலத்தை நன்கு பண்படுத்தி பின்வரும் அளவிடையில்:-50cm இடைவெளி வரிகளுக்கு இடையிலும் 10-15 cm இடைவெளி குழிகளுக்கு இடையிலும் இருக்கத் தக்கதாகக் குழிகளைத் தயார் செய்து குழிகளுக்கு நல்ல உக்கிய மாட்டு எருவை இடவும். பின்னர் ஒரு குழிக்கு இரண்டு விதை கள் வீதம் நடுகை செய்யவும்.

விதைகள் நடுகை செய்த பின்னர் தினமும் நீர் ஊற்றுதல் வேண்டும். பின்னர் பயிர் ஆனது 5-6 இலைப் பயிர் ஆனதும் கீற்றில் நீர்பாய்ச்சுவது சிறந்தது. பின்னர் பயிர் ஆனது 4 வாரங்கள் கடந்த பின்னர்4 நாட்களுக்கு ஒரு முறை நீர்பாய்ச்சவும்.

*பசளைப் பிரயோகம்:-*

NPK ஆனது 1:2:1 என்ற விகிதத்தில் பிரயோகிப்பது நல்ல விளைச்சலைத் தரும். பயிர் நடுவதற்கு முன்னர் பயிர் நடும் குழிகளில் பொசுபேற்று உரங்களை நடுவது சாலச்சிறந்தது. 40-60 kg அளவிலான பசளையை ஆனது 30-45 நாள் வயதுப் பயிருக்கு மேற்கட்டுப் பசளையாக பிரயோகிக்கலாம்.

*நோய்களும் பீடைகளும் அதன் கட்டுப்பாடுகளும்:-*

நோய்களாலும், பீடைகளாலுமே அதிகளவு வருமானம் பாதிப்பதாக விவசாயிகள் தமக்குள் அலட்டிக் கொள்வது யாவரும் அறிந்ததே. அவற்றைப் பற்றி சற்று பார்ப்போமானால்.

*வெண்டிப் பயிரைத் தாக்கும் பீடைகளாக:-*

காய் துளைக்கும் புழுக்கள் (Borers) வெள்ளை ஈ(White fly) சிவப்பு சிற்றுண்ணி(Red Spider Mites) வெண்டியிலையின் அடிப் பக்கத்தில் சிறுசிறு சிவப்பு உருவங்கள் அசைவதைப் பார்த்து இருப்பீர்கள் ஆனால் இது உங்களுக்கு புரிந்திருக்கும்.

*நோய்கள்:-*

பியூசாரியம் வாடல்/பங்கசு வாடல்(Fusarium Wilt) வெள் உருக்கன் /(Yvmv), இலை மேற்பரப் பில் வெண்ணிறப் பூஞ்சன வலை.

வாடல் ஆனது முளைக்கின்ற கன்றுகளிலேயே அதிகளவில் காணப்படும். இருந்த பொழுதும் வெண்டியில் ஏற்படும் முக்கிய நோயாக வெள் உருக்கன் /Yvmv

நோயை பார்த்தோமானால் இது ஓர் வைரஸ் (Virus) நோய் ஆகும். இது பயிரின் எந்த நிலையிலும் பயிரைத்தாக்கக் கூடியது ஆகும். இது ஓர் பயிரில் இருந்து இன்னோர் பயிருக்கு வெள்ஈக்களால் காவப்படுகின்றது.

*எவ்வாறு வெள் உருக்கன் நோயை கட்டுப்படுத்துவது:-*

1. விதைகளை வெள்உருக்கன் நோய் தாக்காத பயிரில் இருந்து பெறுதல்.
2. வெள் உருக்கன் /Yvmv நோயை தோட்டத்தில் காணும் பொழுது பயிரை முற்றாக பிடுங்கி அழித்தல்.
3. சுழற்சி முறை பயிர் செய்கையை மேற்கொள்ளல்.
4. பயிர் மீதிகளை வயலில் இருந்து அகற்றுதல்.
5. காவிகளான வெள்ஈக்களை கட்டுப் படுத்தல்.

*அறுவடை:-*

அரைமுற்றிய பருவத்தில் அறுவடை செய்து நன்கு காற்றோட்டமான பைகளில் அடைத்து சந்தைப் படுத்தல் சிறப்பானது.

சி.குகானந்தன்,
விவசாய பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

*(05 ஆம் பக்கத்தொடர்ச்சி)*

அறிக்கையின் முக்கிய செய்திகள் பின்வருமாறு- இந்தியப் படைகள் தமிழ் மக்களின் ஒட்டு மொத்த வெறுப்பைச் சம்பாதித்ததோடு முழு அளவு ஆக்கிரமிப்புப் படையாகவும் மாறிவிட்டது. இதன் காரணமாக இந்தியப் படைகள் உடனடியாக வெளியேற வேண்டும். ஏதேனும் காரணத்திற்காக இந்தியப் படைகள் வட-கிழக்கில் தங்கியிருக்க வேண்டுமாயின் எல்ரிரிஈயுடன் பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும். இதைப் படித்ததும் சேஷன் அதிர்ச்சி அடைந்தார்.

இதிலும் கூடிய அதிர்ச்சிச் செய்தியொன்று கார்த்திகேயனின் அறிக்கையில் இருந்தது. 13ஆம் திருத்தத்தின் பிரகாரம் சிறிலங்கா அரசு வடகிழக்கு மாகாண சபைக்கு கணிசமானளவு ஆட்சி அதிகாரங்களை வழங்கியிருக்கவேண்டும். சொற்பளவையேனும் கொழும்பு அரசு வழங்கவில்லை என்பதை கார்த்திகேயன் அறிக்கை ஒத்துக்கொள்கின்றது. சிங்கள அரசுகளின் வழமையான இழுத்தடிப்பை ஜெயவர்த்தனா அரசும் கொண்டிருந்தது. எல்ரிரிஈயை இந்தியப் படைகள் அழித்தொழிக்கும் நாளை ஜெயவர்த்தனா அரசு எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. அதன்பின்பு அதிகாரப் பங்கீடு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாது அல்லவா? வரதராஜப்பெருமாள் ராஜீவ்காந்தி விசுவாசியாக இருக்கலாம். ஆனால் அவருக்கு மக்கள் ஆதரவு துளியும் கிடையாது. மக்கள் ஆதரவு எல்ரிரிஈ ஒன்றுக்கு மாத்திரம் உண்டு என்று கார்த்திகேயன் அறிக்கை கூறுகிறது.

ராஜீவ் காந்தி அரசு கார்த்திகேயன் அறிக்கையை மதித்து நடந்திருந்தால் அவருக்குச் சடுதி மரணம் ஏற்பட்டிருக்காது என்ற தலைப்பில் இந்துஸ்தான் பத்திரிகையின் சிறிலங்கா நிருபர் பி.கே.பாலாச்சந்திரன் மே 2004 இல் கட்டுரை வரைந்துள்ளார். மிக அண்மையில் பிபிசி தமிழோசைக்கு இந்திய மத்திய அரசின் எரிபொருள் அமைச்சர் மணிசங்கர் ஐயர் வழங்கிய செவ்வியில் " 13 ஆம் திருத்தத்தை முறையாக அமுலாக்கம் செய்தால் ஈழத் தமிழர்கள் பிரச்சினை தீர்ந்துவிடும்" என்ற வாக்கு மூலம் காணப்படுகிறது. ஐயரின் கூற்றை எம்மால் ஏற்கமுடியவில்லை. இந்தியாவைத் கருவியாகப் பயன்படுத்த சிறிலங்கா எண்ணுகின்றது என்ற செய்தியை அவர் விளங்கிக்கொள்ளாவிட்டாலும் இந்தியாவின் திட்டமிடல் அதிகாரிகளும் கொள்கை உருவாக்கத்திற்குப் பொறுப்பானவர்களும் உணரத் தலைப்பட்டுள்ளனர் என்பதுதான் யதார்த்தம்.


## அறிவித்தல்

EXPOAIR
your friend in the skies...

இத்தால் பொதுமக்களுக்கு அறியத்தருவது யாதெனில் தற்பொழுது வர்த்தக ரீதியான நோக்கம் கருதி

**எக்ஸ்போ ஏவியேஷன் (பி) லிமிட் நிறுவனத்திற்கும்**
**லயன் எயார் (பி) லிமிட் நிறுவனத்திற்கும்**

இடையில் இணைந்த உள்நாட்டு விமான சேவை நடைபெற்று வருகிறது.

இந்த இணைந்த நடைமுறையானது எதிர்வரும் 16.07.2005 அன்றிலிருந்து இரு நிறுவனங்களுக்குமிடையில் நிறுத்தப்படவுள்ளது.

எனவே இனிமேல் எக்ஸ்போ எயார் விமானச்சீட்டுக்களை வைத்திருக்கும் பயணிகளுக்கு மட்டுமே எக்ஸ்போ ஏவியேஷன் (பி) லிமிட் நிறுவனம் பொறுப்பேற்கும் என்பதையும் இத்தால் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**முகாமைத்துவம்,**
**எக்ஸ்போ ஏவியேஷன் (பி) லிமிட்,**
**466, காலி வீதி,**
**கொழும்பு-3**

(சி-12402)

# கோபம்...!

எமது நாட்டில் இப்போது நடைபெறும் ஆட்சிமுறை அழுகிற பிள்ளைக்கு வாழைப்பழங் காட்டுவது போலாகும். மணமே வீசாத ஆட்சி எனலாம். தமிழ் மக்களை துரோகிகள் ஏமாற்றி வருகின்றார்கள். மிதவாதம் பேசும் இத்துரோகக் கூட்டத்தை துணையாகக்கொண்டு அரசு ஆட்சி நடாத்திவருகின்றது. இக்கூட்டத்தில் நாட்டின் உண்மைப்பற்றுடையோர் சேர்வதில்லை. பட்டம், புகழ், பதவி முக்கிய சிறுமைகளை விரும்புவோரே இக்கூட்டத்தில் சேர்ந்து வித்தகம் பேசி வருகின்றார்கள்.


பேச்சில் வித்தகம் காட்டி வருபவர்கள் தமிழர்களை பலவாறாகத் துன்பம்செய்து கொண்டிருப்பது தமிழர்களின் பொறுமையைச் சோதிப்பதாகவே உள்ளது. குறிப்பாக பத்திரிகையில் அரசின் திருவிளையாடல்களின் உண்மைத் தன்மைகளை எழுதிவந்த, வருகின்ற எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் கொலை செய்யப்படுகின்றமை என்பது அரசும், அரசின் சூட்டில் குளிர்காய்ந்து உயிர்வாழ்வை நடாத்திவருகின்ற துரோகிகளினதும் பித்தலாட்டங்களாகும்.

தமிழர் மீதான கொலைகளைச் செய்து வருபவர்கள் ஒன்றை மட்டும் புரிந்துகொள்ள வேண்டும். தமிழர்கள் போர்முறைகளை இன்று நேற்றுக் கற்றுக்கொண்டவர்கள் அல்ல. கிறிஸ்தவ நூற்றாண்டு தொடங்குவதற்கு முன்னரே போர் முறைகளை ஒழுங்குபடுத்தி நடாத்தியவர்கள். சிங்கள அரசும், அரசின் கூட்டான துரோகக்கட்சிகளும் இவற்றை நன்கு உணர வேண்டும். தமிழர் பொறுப்பதற்கு தலைவனே காரணம் தலைவன் விரல் அசைத்தால் தமிழர் போர் அசையும்.

தமிழர்கள் நாட்டின் நிலையை தமது அறிவால் அளந்துகொண்டிருக்கின்றார்கள். அரசின் அடக்குமுறை ஆட்சியினால் தமிழர் பிரதேசங்களில் கைத்தொழில் கலைகள், பழக்க ஒழுக்கங்கள் முக்கிய பலதுறைகளில் வளங்கள் சுருங்கிவிட்டன. நாடுவறுமைக்கு உறைவிடமாகி விட்டது. இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளின் தொழில் வளம் முடக்கப்பட்டுள்ளது. பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம், ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை என்பன எம் நாட்டின் வளங்களாகக்காணப்பட்டதை அரசு அறிந்திருந்ததோ தெரியாது. ஏழை மக்களின் துயரங்களோ சொல்ல முடியாது அடக்குமுறைச் சட்டங்களுக்கு குறைவில்லை. இவ்வளவு துன்பங்களில் மூழ்கியவர்களின் உண்மைகளை உலகறியச் செய்பவர்களை அரசு கொன்றொழிக்கும் முயற்சியில் ஈடுபடுவது தமிழர்களை போர்க்குணம் கொண்டவர்களாக மாற்றுவதற்கேயொழிய சமாதான முன்னெடுப்புக்களுக்கு அல்ல.

எமது நாட்டின் போரியல் வரலாற்றை அல்லது கடந்த காலங்களை உற்று நோக்குவோமாயின் உரிமையின்றி துயருற்ற நாட்களே அதிகம். ஆதிக்க வெறியர்களின் வெறியாட்டத்தில் பல உறவுகளை, உடமைகளை பறிகொடுத்த நாங்கள் இனியும இப்படியொரு வெறியாட்டத்திற்கு இடமளிக்கமாட்டோம்.

அரசு ஆண்டுதோறும் பல சதுரங்க ஆட்டங்களை முன்னெடுத்து தோல்வியுற்ற நிலையில் இன்று நிழல் யுத்தம் என்னும் சதுரங்க ஆட்டத்தை தொடங்கி எமது ஆயுதமாகிய அறிவை அழித்துக் கொண்டிருக்கின்றது. முன்னொரு போது சிங்கள அரசுக்கு எதிரான போராட்டத்திற்கு விடுதலைப் புலிகள் போராளிகளை இணைத்தார்கள். ஆனால் இன்று தமிழ் மக்கள் தாம் அணிதிரண்டு விடுதலைப் புலிகளின் உதவியை நாடி அரசுக்கு எதிராகப் போராடி அரசின் கொடுமைகளுக்கு முடிவுகட்ட துணிந்து விட்டார்கள்.



இந்தப் பிறவி பெறுதற்கரிய மானிடப் பிறவி. இதை உண்டும், உறங்கியும் வீணாகக் கழித்துவிடக்கூடாது. எம் இனம் தனித்தமிழ் ஈழத்தில் தலைசிறந்து நிற்க வழிகாட்டுபவர்களாக ஒவ்வொருவரும் பிறவி யெடுக்க வேண்டும். சோர்வும், சோம்பலும் இல்லாமல் போட்டியாய் உழைப்போம் என முரசறைகின்றார்கள்.

சோம்பல், சோர்வு, தாழ்வு எண்ணம் என்பவற்றைக்களைந்தெறிந்த உத்தமர்கள் எங்கள் விடுதலை வீரர்கள். வாழ்ந்த வாழ்ந்துகொண்டிருக்கும் மண் என்றும் மணம் வீசும் மலர்த் தோட்டமாக கனிதரும் தோப்பாகத் திகழ தமிழ் மக்கள் பாடுபடுவோம் என்கிறார்கள். அரசு என்ன செய்யப்போகிறதோ?

— அகவிழி

---

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போய்ச்சேரவில்லை. இடையிலே அரசியல்வாதிகள் சிலரது பணப்பைகள் மட்டும் நிரம்பியதாக குற்றச்சாட்டுகள் மட்டும் எழுகின்றன. கேட்கப்படும் சந்தேகங்களுக்கெல்லாம் கப்பல்துறை அமைச்சர் டி.ஆர். பாலு "எல்லாம் ஆராய்ந்துதான் செய்கிறோம்" எனப் பதிலளிக்கிறார்.

உள்ள வளங்கள் பயன்படுத்தப்படாத வரைக்கும், அவற்றைப் பற்றி எவ்வாறு நிம்மதிப்பெருமூச்சு விட முடியும்! கும்பகோணத்தில் 84 பிஞ்சுக்குழந்தைகளை எரித்துக்கருக்கியது கூட அனுமதியில்லாமல்(?) கட்டப்பட்டிருந்த "இன்ரர்நசனல் ஸ்கூல்" தானே! அழகான ஆங்கிலத்தில் கற்றுக்கொடுப்பதற்காக சுளைசுளையாக அறவிட்டதொரு நிறுவனம் தானே, அடைக்கப்பட்ட(!) சிறார்களைப் பலிகொண்டது ! சில லட்சங்கள் முதலீடு செய்யப்பட்ட இடங்களிலேயே இவ்வளவு அஜாக்கிரதையாக(?) இருந்த அரசு 3000 கோடி ரூபா விடயத்தில் எந்த மாத்திரம் ? பொருளாதார நலன்களுக்கு முன்னே மக்கள் எதிர்கொள்ளக்கூடிய பாதகங்கள் குறித்து கருத்தில் கொள்ளப்பட்டு, காசு செலவழிக்கப் படுமா ?

தாய்வழிச்சமுதாயத்தில் வந்த பழம்பெரும்பண்பாடு கொண்ட நாடு இந்தியா. இருந்தும் 1986 இல் சென்னையில் முதன்முதலில் இனங் காணப்பட்ட முதலாவது இந்திய எயிட்ஸ் நோயாளியின் வழியில் 18 வருடங்களுக்குள்ளே, இந்திய அரசின் தரவுகளின்படி 5.13 மில்லியன் (51 லட்சம்) HIV நோயாளிகள். ஐ.நா.சபையின் கணிப்பீடுகளின்படி 8.5 மில்லியன். 2010ஆம் ஆண்டளவில் இந்த எண்ணிக்கை 25 மில்லியன் ஆகுவதோடு, தற்போது முதலிடத்தில் இருக்கும் ஆபிரிக்காவின் இடத்தை இந்தியா எட்டிவிடுமென சிஐஏ கூறுகின்றது. இந்திய அரசத் தரப்புகளின் கூற்றுப்படி 2003இல் மட்டும் 520000 பேர் புதிதாகத் தொற்றிக்கொண்டுள்ளனர்.. இருந்தும் தாம் அதை 2004ஆம் ஆண்டில் வெறுமனே 28 000 ஆக மட்டுப்படுத்தி விட்டதாக மார்தட்டிக் கொள்கிறது.

அது உண்மையாக இருந்தால் மகிழ்ச்சியே, இருந்தும் கௌரவப்பிரச்சினை கருதி பிழையான கணிப்பீடுகள் வெளியிடப்படுகின்றனவென உள்ளூர்த் தொண்டர்கள் குறைப் பட்டுக்கொள்கின்றனர். 'பிழை செய்பவர்களைத் தண்டிக்கும் கடவுளின் தண்டனை' அல்ல இந்த நோய்! அப்பாவிகளையும் அதிகமாகப் பற்றிப் பலிகொள்கின்றது. நெறிதவறிய தகப்பனிடம் இருந்து தாய்க்குத் தொற்றி, அத்தாய் பிரசவித்த பிள்ளைக்கும் எயிட்ஸ். கடந்த வருடம் 2ஆம் வகுப்பில் படித்த அந்த அப்பாவிப்பிள்ளையை விசயம் தெரிய வந்தவுடன் கல்லூரி ஒதுக்கி வைத்துவிட்டது. இது உண்மையிலேயே பாரியதொரு சமூகப்பிரச்சினையாகத் தோற்றமெடுத் திருப்பதைக் கண்ணுற்ற உலகின் முதலாவது செல்வந்தரும், Microsoft உரிமையாளருமாகிய பில்கேற்ஸ் இரண்டரை வருடங் களுக்கு முன் இந்தியாவின் எயிட்ஸ் ஒழிப்புத்திட்டத்திற்கு 100 மில்லியன் டொலர் நன்கொடை அளிக்க முன் வந்திருந்தார். சாதாரணமானதொரு விடயத்தைப் பூதாகரப்படுத்தி, எயிட்ஸ் மோசமாகப் பரவியுள்ள நாடென இந்தியாவின் கௌரவத்தைக் குறைக்க முயற்சிக்கிறார் பில் கேற்ஸ் எனக் கிளர்ந்தெழுந்த பலரும் அவரைக் கடுமையாக விமர்சித்தனர்.

அதையடுத்த மறுவருடம் வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வ அறிக்கைகளில் புதிதாகத் தொற்று ஏற்படும் ஆட்களின் தொகையை 520000 இலிருந்து 28000 ஆக 95 வீதத்தால் மட்டுப்படுத்தி(?) விட்டதாகக் கூறப்பட்டது. அதாவது இருக்கும் பிரச்சினையை இல்லையென்று சாதிப்ப தன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டிய அவசியம் அநாவசியம் ஆக்கப்படும் தந்திரம்! இவ் வாறானதொரு அணுகுமுறை சேது-கால்வாய்த்திட்டத்திலும் கைக்கொள்ளப்பட்டிருக்குமா அல்லது மக்கள் நலனைக் கருத்தில்கொண்டு முதலீட்டாளர்களால் அதிகளவு பணம் செலவிடப்பட்டிருக்குமா? நம்பமுடியாததை நம்பி விடுவதால் மட்டுமே நாளைகள் நம்பிக்கைக்குரியதாகி விடாது. திருட்டு வீடியோ VCD, DVD ஆகியவற்றைத் தடை செய்து, வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதில் இந்தியா காட்டும் அக்கறை, ஏனோ அப்பாவி மக்கள் விடயங்களில் காட்டப்படுவதில்லை. விழிப்புடன் இருப்போம் நாம் அனைவரும்! ●

---

## இலக்கியப் போட்டி 2005 முடிவுகள்

*கப்டன் வானதியின் 14 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கப்டன் வானதி வெளியீட்டகத்தால் நடாத்தப்பட்ட சிறுகதை, கவிதை, கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிகளின் முடிவுகள்.*

### சிறுகதை:-

**முதலாமிடம்**
*'உங்கை என்ன கிடக்கு'*
செல்வி.வனஜா நடராசா,
சங்கக்கடை ஒழுங்கை,
நாவற்குழி,கைதடி,
யாழ்ப்பாணம்.

**இரண்டாம் இடம்**
*'நம்பிக்கை'*
இசையரசி,
மேஜர் சோதியா படையணி,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

**மூன்றாம் இடம்**
*'நிலாவிழி'*
திருமதி.இரஞ்சிதமலர் அருணாசலம்,
122,ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.

*'ஒரு நாட்குறிப்பு'*
சி.கலைப்பிரியா,
பழையகமம்,
முரசுமோட்டை,
பரந்தன்.

### கவிதை:-

**முதலாம் இடம்**
*'தேடல்'*
செல்வி.யோ.துளிர்நிலா,
மே/பா யோ.எழிலி,
சி.க.கூ. சங்க சமாசம்,
யாழ்சாலை, கிளிநொச்சி.

**இரண்டாம் இடம்**
*'நியாயங்களின் தேடல்'*
செல்வி.காயத்திரி இராஜேஸ்வரன்,
கோண்டாவில்-இருபாலை வீதி,
கோப்பாய்.

**மூன்றாம் இடம்**
*'ஏட்டுச்சுரக்காயோ?'*
திருமதி.ஜெ.விஜயலக்சுமி,
19, அம்மன் கோயில் வீதி,
பண்டாரிக்குளம்,
வவுனியா.

### கட்டுரை:-

**முதலாமிடம்**
*'விரைந்து வேண்டும் விடுதலை'*
திருமதி.மாலாதேவி மதிவதனன்,
பங்குனியன் வளவு,
அளவெட்டி மத்தி, அளவெட்டி,
யாழ்ப்பாணம்.

**இரண்டாம் இடம்**
*'சமூக மேம்படுத்தலில் பெண்ணெனும் பாத்திரம்'*
திருமதி.மீனலோஜினி இதய சிவதாஸ்
இல.34/1, சிவநகர்,
உருத்திரபுரம்,
கிளிநொச்சி.

**மூன்றாம் இடம்**
*'புயலாக எழுந்த அடக்குமுறையை மலையாகத் தாங்குவது விடுதலைப் போராட்டமே'*
செல்வி.சுதர்சினி மோகன்,
கிளி/பாரதி வித்தியாலயம்,
பாரதிபுரம்,
கிளிநொச்சி.

### ஓவியம்:-

**முதலாமிடம்**
செல்வி.கார்த்திகேயினி திருநாவுக்கரசு,
டச்சுறோட், உடுவில் மேற்கு,
சுன்னாகம்.

**இரண்டாம் இடம்**
செல்வி.சாருகா சரவணபவான்,
'தர்மபுரி'
3 ஆம் கட்டை ஒழுங்கை,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

**மூன்றாம் இடம்**
திருமதி. சிந்துஜா பிரணவநாதன்,
12, வில்வத்தெரு,
புங்கங்குளம்,
யாழ்ப்பாணம்.

சி.12279



# உளவியல் நவீனம்...

**அத்தியாயம்- 12**


பகுதி -54

"ஓமோம்" என்றான் டிப்ஸ். "சின்ன முத்து வந்ததாலதான் எல்லாம். ஆனா முதல் காலுறைய போட வேணும். பிறகு சப்பாத்துகள போடவேணும். அல்லவா?"

"ஓம் அப்பிடித்தான். உங்கட சப்பாத்து களையும் காலுறைகளையுமெண்டுதானே சொன்னனான்" பதிலாக நான் சொன்னேன்.

"ஓமோம்" என்றான் டிப்ஸ். பின் சிரித்துக்கொண்டான். காலுறைகளையும் சப்பாத்துகளையும் போட்டு நுல்களை இறுக்கிக் கட்டிக் கொண்டபின் மீண்டும் மணலுக்குள் ஏறிக் கொண்டான்.

"எனக்கு சின்னமுத்து போட்டிருக் கயிக்க நான் கட்டில்லயேதான் இருக்க வேண்டியிருந்துது. அவர்கள் ஜன்னல்களை



மூடி திரைகளையும் இழுத்து விட்டிருந்தார்கள். என்ர அறைய அவர்களால எவ்வளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு இருட்டாக்கி விட்டிருந்தாங்க. என்னால வாசிக்க முடியேல்ல... சித்திரம் கீற முடியேல்ல. எழுதவும் முடியேல்ல".

"அப்ப நீங்க என்ன செய்தனீங்க?" நான் கேட்டேன்.

"எனக்காக இசைத்தட்டுகள போட்டு விட்டினம். என்னட்ட கனக்க கதை சொல்லுற இசைத்தட்டுகள் இருக்குது. திரும்பத் திரும்ப அதுகள போட்டுக் கேட்டனான். ஆனா எனக்கு என்னட கர்நாடக இசை பதிவு செய்த இசைத் தட்டுகளத்தான் மிகவும் பிடிக்கும்"

"அப்ப.... அந்தக் கதையளும் இசையும் உங்கட நேரத்த போக்காட்ட உதவியிருக்குது அல்லவா!" என்று சொன்னேன்.

"ஆனா என்ர புத்தகங்கள வாசிக்க ஏலாம ஏக்கமாயிருந்துது" என்றான் டிப்ஸ்.

"வாசிக்கிறதெண்டா உங்களுக்கு நல்ல விருப்பம் போல?" என்றேன்.

"ஓம் நல்ல... நல்ல... விருப்பம். நான் பாக்கிறதுகள்... நான் நினைக்கிறதுகள் பற்றி எழுதுறதுக்கு எனக்கு நல்ல விருப்பம். படங்கள் கீறவும் எனக்கு விருப்பம். ஆனா வாசிக்கிறது தான் கூட விருப்பம்.

"உங்களுக்கு என்ன வாசிக்க விருப்பம்? உங்களிட்ட என்ன மாதிரியான புத்தகங்கள் இருக்குது?"

"என்னட்ட எல்லா மாதிரி புத்தகங் களும் இருக்குது. பறவைகள்.... மிருகங்கள்..... மரங்கள்.... தாவரங்கள்.. பாறைகள்... மீன்கள்... ஆக்கள்.. கிரகங்கள்... காலநிலை.... நாடுகள்.... பற்றின புத்தகங்கள் இருக்குது. இரண்டு தொகுதிக் கலைக்களஞ்சியங்கள் இருக்குது. ஒரு அகராதியும் இருக்குது... என்ர படவிளக்க அகராதி... கனகாலமா, கனகாலமா அத வைச்சிருக்கிறன். அப்பா வைச்சிருந்த பென்னாம் பெரிய அகராதியும் இருக்குது. புத்தகங்கள் வைச்சிருக்கிற நீண்ட றாக்கைகளும் இருக்குது. கவிதைப் புத்தகங்கள் இருக்குது. பழைய கதைப் புத்தகங்களும் இருக்குது. ஆனா எனக்கு விஞ்ஞானப் புத்தகங்களிலதான் விருப்பம் கூட. ஆனா இதுகள் எல்லாத்தையும் விட, நீங்கள் அனுப்பின வாழ்த்து அட்டையில தான் எனக்கு நல்ல விருப்பம். நான் அத என்னோடயே வைச்சிருக்க விட்டிருந்தவை. அத திறந்து பார்க்கிறத என்னட்டயே விட்டிட்டினம். முதல்ல அத வாசிக்கிறதுக்கும் அத வைச்சிருந்து திருப்பித் திருப்பி வாசிக்கிறதுக்கும் அம்மா அனுமதி தந்தவ."

"நீங்கள் வாசிக்கிறதில கன நேரத்தை செலவிட்டிருக்கிறீங்க என்று நான் நினைக்கிறன்... அப்பிடித் தானே?" என்று நான் சொன்னேன்.

"ஓம். அப்பிடித்தான். பல வேளைகளில நான் செய்யிறது அத மட்டுந்தான்" என்றான். "ஆனா அது எனக்கு நல்ல விருப்பம். நான் காணுற விஷயங் களப் பற்றி வாசிக்கிறதுக்கு எனக்கு நல்ல விருப்பம். நான் வாசிச்சு தெரிஞ்சு கொள்ளுற விஷயங்கள பாக்கிறதும் எனக்கு நல்ல விருப்பம். என்னட்ட பல மாதிரி கல்லுகள், இலைகள், மட்டையில ஒட்டி வைச்சிருக்கிற பூச்சிகள், வண்ணாத்தி பூச்சிகள் எல்லாம் இருக்குது. மின்கலங்கள்... கமெராக்களும் இருக்குது. சில நேரங்களில முத்தத்தில இருக்கிற பொருட் கள படம் எடுக்கிறனான். என்ர ஜன்னலுக்கு வெளியால நிக்கிற மரத்தில இருக்கிற பொருட்களையும் படம் எடுக்கிறனான். ஆனா அந்தப் படங்கள் நல்லா வாறயில்ல. அதுகள விட வடிவான படங்களை நான் கீறுறனான். ஆனா உங்கட விளையாட்டு அறையில எனக்கு நல்ல விருப்பம்" என்று சொன்னவன் அதை வலியுறுத்துவது போல் தலையை அசைத்தான்.

"இதில உங்களுக்கு நல்ல விருப் பமா? இதுகளுக்கிடையில கனக்க வித்தியா சங்கள் இருக்குதல்லவா?"

"ஓம்" என்ற டிப்ஸ் "சரியான வித்தி யாசங்கள் இருக்கின்



# முடுபனிக்குள் ஒரு தேடல்

**மொழியாக்கம் :- வி.பி.யோசப்**

றன" என்றான்.

"என்ன மாதிரி இதுகள் வித்தியாசப் படுகுதுகள்?" என்று இந்த விஷயத்தை விடாமல் தொடரும் ஆர்வத்தில் கேட்டேன்.

"நீங்கள் சொன்ன மாதிரித்தான்..." என்று கருத்தூன்றிய விதமாக சொன்னவன்". "அந்த வகையில பார்த்தா இதுகளுக்கிடையில சரியான வித்தியாசம் இருக்குது" என்றான்.

நான் அதை அத்தோடு விட்டுவிட்டேன். இந்த மேலதிக விவரங்கள் எல்லாம் ஆர்வமூட்டுபவையாக இருந்தன. ஆனால் அவை எவையும் டிப்ஸ் எந்த விதத்தில் வாசிக்க, எழுத, எழுத்துக் கூட்ட, வரையக் கற்றுக் கொண்டான் என்று விளக்குபவையாக இருக்கவில்லை. அப்போதைக்கு வழக்கிலிருந்த கற்றுக்கொள்ளுதல் தொடர்பான கோட்பாடுகளின் படி முதலில் வாய்வழி உரையாடல் மொழியைப் பழகிக் கொள்ளாமலும் பொருத்தமான பின்னணிப் பட்டறிவுகளைப் பெற்றுக் கொள்ளாமலும் இந்தளவுக்கான திறன் மட்டத்தை அவன் அடைந்திருக்க முடியாது. எனினும் இந்த திறன்களில் உயர் மட்ட அளவை டிப்ஸ் எட்டியிருந்தான்.

வாராந்த பொருட்களைக் கொண்டு வருகிற ட்றக் வண்டி விளையாட்டறை ஜன்னலுக்கருகில் வந்து தரித்துக் கொண்டது. "ஜன்னலுக்கு வெளியால் பார்" என்று டிப்ஸ் சொன்னான். அதன்படி அவன் வெளியில் பார்த்தான். ட்றக்கிலிருந்து ஆட்கள் பொருட்களை இறக்குவதை பார்த்துக்கொண்டிருந்தான். பிறகு ட்றக்குக்குள் ஏறி அவர்கள் செல்வதை பார்த்துக்கொண்டிருந்தான். ஜன்னலைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்து, ட்றக் கண்ணுக்கு மறையும் வரை பார்த்துக்கொண்டிருந்தான். பிறகு ஜன்னலை சாத்தி விட்டான்.

ஆலயத்து மணிகள் ஒலிக்கத் தொடங்கின. டிப்ஸ் திரும்பி என்னைப் பார்த்தான். "அங்க கேளுங்கோ... நாலு மணியாகப் போகுது.... இப்ப...!" என்று விட்டு மணி ஓசைகளை எண்ணத் தொடங்கினான். "ஒண்டு... இரண்டு... மூண்டு.... நாலு...." என்று எண்ணியவன் "இன்னும் எவ்வளவு நேரம் இருக்குது?" என்று கேட்டான்.

"இன்னும் பதினஞ்சு நிமிசங்கள் இருக்குது" நான் சொன்னேன்.

"ஓ... அப்படியா...?" என்றவன் ஒரு உலோபி பணத்தை எண்ணுவது போல் மெதுவாகவும் மிகுந்த பிரயாசையுடனும் பதினைந்து வரை தன் விரல்களில் எண்ணினான்.

"பதினஞ்சா?" என்று கேட்டான். "பத்து நிமிசங்களும் அஞ்சு நிமிசங்களுமா? அஞ்சு நிமிசங்களும் பத்து நிமிசங்களுமா?"

"ஓம்" என்றேன்.

"சில நிமிசங்கள் சந்தோசமானவை. சில நிமிசங்கள் துக்கமானவை. சந்தோசமான நேரங்களும் இருக்குது. துக்கமான நேரங்களும் இருக்குது" அவன் சொன்னான்.

"ஓம் சில நேரங்கள் துக்கமானவை சிலதுகள் சந்தோசமானவை" என்று பதில் சொன்னேன்.

"இப்ப நான் சந்தோசமா இருக்கிறன்" என்றான் டிப்ஸ்.

"அப்படியோ?"

"ஓம் சந்தோசமா இருக்கிறன்."

அவன் ஜன்னலை திறந்து வெளியே எட்டிப் பார்த்தான்.

"ஓ! என்ன அழகான நாள்! சந்தோசமான நாள். நீல வானத்தோட இருக்கிற நாள். பறவைகள் பறக்குதுகள். அந்த விமானம் போறது கேட்குதா? ஓ! எவ்வளவு சந்தோசமான வானம்.ஓ! சந்தோசமான... மேற்கு நோக்கி பறக்கிற விமானம். ஓ! சந்தோசமான பறவை. ஓ! சந்தோசமான டிப்ஸ். நடுகிறதுக்கும் அது வளருகிறத பார்க்கிறதுக்குமெண்டு றோசாக் கிளையை வைச்சிருக்கிற டிப்ஸ்! ஓ! எனக்கு சொல்லு டிப்ஸ். நீ எவ்வளவு சந்தோசமாயிருக் கிறாய்?" என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். திரும்பி என்னைப் பார்த்தான். பின் ஜன்னலை நன்றாக திறந்து விடுவதற் கென மறுபுறம் திரும்பிக் கொண்டான்.

"ஜன்னலை திரும்ப பூட்ட முன்னுக்கு வெளியே துப்பும் அளவுக்குச் சந்தோசமாக இருக்கிறன்." என்றவன் அது போலவே செய்தான்.

(தொடரும்)

# எழுதப்படாத விதிகளை உடைக்க பெண்கள் அணி திரள்வோம்...

சட்ட உருவாக்கங்களின் பால் நிலை சமத்துவம் பேணப்படாமல் ஆண்சார்பு அம்சங்கள் ஒரு புறமிருக்க, காலம் காலமாக குடும்ப அலகிலும் சமூகத்திலும் பெண் என்பவள் புறக்கணிக்கப்பட்டு ஆண் சார்பு மேலாதிக்கம் மரபு ரீதியாகத் தொடர்ந்து வருகின்றது.

பண்பாடு, கலாசாரம் என்ற போர்வையிலே பாரபட்சம் பெண்களுக்குக் காட்டப்பட்டு வருகிறது. பால் நிலை சார்ந்த பாரபட்சத்தினால், பெண்பிள்ளைகளை விட ஆண் பிள்ளைகளின் மேம்பாடு, ஆற்றல், ஆளுமை, அறிவு வளர்ச்சி, சுகபோகம் என்பவற்றிற்கே முன்னுரிமை பிறப்பிலிருந்தே வழங்கப்பட்டு வருவதால் பெண் என்பவள் பேதையாக்கப் படுகின்றாள்.

ஒரு சமூகத்தின் அடிப்படை அலகு குடும்பம். ஆணாதிக்கம் என்பது இந்த அலகிலேயே முளைவிட ஆரம்பிக்கிறது. ஆண்களில் வாழ்வியல் சௌகரியங்களுக்கு உறுதுணையாக ஊன்று கோலாகப் பாவிக்கப்படும் பெண்ணின் சௌகரியங்கள் பற்றி இச்சமூகம் அக்கறை கொள்வதாயில்லை. அநீதியான, அபத்தமான எண்ணக்கருக்களை விதைத்து பெண் என்பவள் புரியாமலே அடிமைப்படுத்தப்பட்டிருக்கிறாள். பெண்ணுக்கு எதிரான அம்சங்கள் குடும்பத்திற்குள்ளேயே கட்டமைக்கப்பட்டு சமூகத்தில் பிரவேசிக்கிறது. சிறுவயதிலிருந்தே உணவு, கல்வி, ஆடை, சுகாதாரம், விருப்பு வெறுப்புகள், சுதந்திரப் போக்கு என்பனவற்றிற்கு கடிவாளமிடப்படுகின்றது. இதனால் பெண்களின் ஆளுமையும், இயல்பாற்றல் திறன்களும் முளையிலேயே கருகி விடுகின்றன. மூன்றாம் மண்டல நாடுகளில் ஆண்,பெண் அசமத்துவ வளர்ப்பு முறை பாரிய அளவில் உள்ளமையினால் சுதந்திரப் பறவையாயிருக்கவேண்டிய பெண் சிறகொடிக்கப்பட்டு, கூண்டுக்குள் அடைபடும் நிலை உருவாகின்றது.

பிறப்பு முதல் இறப்பு வரையிலான வாழ்வியல் சக்கரத்தின் ஒவ்வொரு பருவத்திலும் பெண்கள் எதிர்கொள்ளும் பாரபட்சங்கள் எண்ணிலடங்காதவை. இதனால் பெண்களின் உணர்ச்சிகள் மழுங்கடிக்கப்பட்டு, பெண்கள், வாழ்வு ஓயும் வரை வதைபட்டுக்கொண்டே இருக்கிறார்கள்.

பிறப்பதற்கு முன்னர் கருவறையிலேயே பெண்கள் மீது வெறுப்புக் காட்டுவதால், பிறந்த குழந்தை பற்றி சொல்லத் தேவையில்லை. உணவூட்டல் முதல் கொண்டு ஆரம்பிக்கும் பாரபட்சம் சகல அம்சங்களிலும் தொடர் கதையாகி, பருவமடையும்போது கட்டுப்பாடுகள் வரையறையின்றித் திணிக்கப்படுகிறது. இதனால் மனமுடைந்து போகும் பெண்கள், தமக்கு திருமண வாழ்க்கையாவது சுதந்திரம் தருமா என்று எண்ணி ஏங்குகிறார்கள். ஆனால் அந்தோபரிதாபம், பல குடும்பங்களில் பெண்ணின் சுதந்திரப் போக்குக்கு ஆப்பு வைக்கப்பட்டு விடுவதை அவதானிக்க முடிகிறது.

இதனால் பெண்களின் துடிப்பான, ஆற்றல் மிகு சமூகப் பங்கெடுப்பு வீழ்ச்சியடைகிறது. இது முழுச்சமூகத்திற்கும் பாதகமான சாபக்கெடு என்பதை நாம் அனைவரும் உணரவேண்டும்.

சகல அம்சங்களும் பால்பேதமின்றி ஆண் பெண் இருபாலாருக்கும் சமத்துவமாகக் கிடைக்க வழிகோல வேண்டும். பெண்பற்றிய சொத்துடமை போன்ற போகப் பார்வை களையப்பட்டு, அவளும் சம உரிமைகள் கொண்ட ஒரு ஜீவன் என்பது உணரப்பட வேண்டும்.


சிறுவயதிலிருந்தே பெண் பிள்ளைகளையும் அக்கறையுடன் ஆண் குழந்தைகளுக்கு அளிக்கும் சௌகரியங்களை வழங்கி வளர்க்க வேண்டும். அவர்களது ஆளுமை, ஆற்றல், சுதந்திர மனோபாவம் என்பவற்றைச் சிதைக்காத வகையில் கௌரவமும், சுயாதீனமும், அறிவும் ஆற்றலும், வெளியுலகத்தைப் புரிந்துகொள்ளும் வாய்ப்பினை வழங்கியும் வளர்க்கும்போது அவர்களும் ஆண்களைப் போல் சாதனை படைப்பார்கள்.


பெண்கள் சுயமான மானிடப் பிறவிகளாக மதிக்கப்படும் போது பால் பேதம் நீங்குவதுடன், அவர்களின் பங்காற்றல் வினைதிறனும், அதன் அறுவடையாக சமூக மேம்பாட்டு விளைதிறனும் ஏற்படும். இதனால் இவ் உலகின் ஆக்கத்திறனும் பொருளாதார மேம்பாடும் அதிகரிப்பதுடன் இனிய வாழ்வு அனைவர்க்கும் மலரும் என்பதில் ஐயமில்லை.

மு.சந்திரகாந்தா.

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

பாவலன் பதில்கள்,
வெள்ளிநாதம்,
யாழ்சாலை, கிளிநொச்சி.






*பாவலா!*

*பொதுக்கட்டமைப்பு உடன்பாடு தனியரசுக்கு அங்கீகாரம் வழங்கியதாகவே சில பேரினவாதக் கட்சிகள் பிரசாரம் செய்கின்றார்களே இது உண்மையா?*

*யாமினி,*
*கிளிநொச்சி.*

தமிழீழ அரசுக்கு எந்தக் காலத்திலும் எந்த சிறிலங்கா அரசும் அங்கீகாரம் வழங்கப் போவது கிடையாது. பேரினவாதிகளின் பிரசாரம் அரசியல் லாபம் கருதிய பொய்யேயாகும்.

*பாவலா!*

*அமெரிக்கப் படைகளின் மீது நடத்தப்படும் தற்கொலை குண்டுத்தாக்குதல்களை தடுக்க சிறிலங்காப் படைகளிடம் உதவி கோரியுள்ளனரே! தடுக்க முடியுமா?*

*தயாபரன்,*
*யாழ்ப்பாணம்.*

முன்னர் அமெரிக்காவின் 'கிறீன்பரட்ஸ்' படையினர் இலங்கைப் படைகளுக்கு பயிற்சிகளையும் ஆலோசனைகளையும் வழங்கிய சம்பவம் இப்போது நினைவுக்கு வருகிறது..

*பாவலா!*

*அடுத்த சனாதிபதி வேட்பாளராக உமது நெருங்கிய நண்பரொருவர் போட்டியிடப் போவதாக உள்ளாராமே! வெற்றிபெறுவாரா? வெற்றி பெற்றால் உமது (எமது) நிலைமை எப்படியிருக்கும்?*

*வினோதா,*
*புதுக்குடியிருப்பு.*

நாட்டின் எதிர் காலம் குறித்த கவலையில் நலிந்து போவேன்.

*பாவலா!*

*சதாம் ஹுசைன் சிறையில் அடைக்கப்பட்ட பின் வரலாற்று நூல் ஒன்றை வெளியிடவுள்ளாராமே! ஏன் அநேகமானவர்கள் சிறையிலிருந்துதான் புத்தகம் எழுத ஆரம்பிக்கின்றார்கள்?*

*தர்மினி,*
*பரந்தன்.*

சிறைச்சாலையில் இருந்து சிந்திப்பதற்கு நிறைய நேரம் இருப்பதால் சிந்தனைக்கு யாரும் சிறையிட முடியாது எழுத்திற்கு யாரும் விலங்கிட முடியாது.

*பாவலா!*

*யுத்த நிறுத்த காலப் பகுதியிலும் படையினரின் கம்பிவேலி மின் வேலியாக மாற்றப்பட்டுள்ளதே ஏன்?*

*பிரியா,*
*கிளிநொச்சி.*

உயர் பாதுகாப்பு வலயம் என்பது எந்தக் காலப்பகுதியிலும் தமிழரின் உயிர் பாதுகாப்பு வலயமாக இருக்கக்கூடாது என்பதே அவர்களது குறிக்கோள்.

*பாவலரே!*

*ஐக்கிய தேசிய கட்சியின் மக்கள் ஊர்வலம் எப்படி போகுதாம்?*

*சிவா,*
*யாழ்ப்பாணம்.*

பைத்தியக்காரனின் பின்னாலும் 10 பேர் என்பார்கள். அரசியல்வாதிகளின் பின்னால் கொஞ்சம் அதிகமானோர் செல்வார்கள் அவ்வளவுதான். மக்கள் மக்களாக இருக்கும்வரை அரசியல்வாதிகள் மேய்ப்பர்களாக இருப்பதும் தவிர்க்கமுடியாததுதான்.

*பாவலா!*

*விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்று கூறுபவர்களுக்கு நீர் என்ன கூற விரும்புகின்றீர்?*

*கோபி,*
*கிளிநொச்சி.*

பேசாமல் ஜே.வி.பியில் இணைந்து விடுங்கள் என்று கூறுவேன்.

*பாவலா!*

*உமது முகத்தில் புன்முறுவல் சற்று அதிகமாக காணப்படுகிறதே காரணம் என்ன என்று கூறமுடியுமா?*

*அ.யாழ்மதன்,*
*கிளிநொச்சி.*

வர வர மனிதர்களையும் அவர்களின் செயற்பாடுகளையும் பார்க்கும்போது என்னையறியாமலேயே புன்முறுவல் அதிகமாகி விடுகிறது.

*பாவலா!*

*எங்கள் நாட்டில் பஸ்களில் செல்லும்போது வெளியில் தலை, கை கால்களை விட்டுச் செல்பவர்களுக்கு என்ன கூற விரும்புகின்றீர்?*

*நா.கரன்,*
*கிளிநொச்சி.*

அவர்கள் தங்கள் அங்கங்களை வெளியே போட்டு விட்டு செல்ல விரும்புகிறார்கள் போலும்... அவர்களுக்கு என்னத்தை சொல்வதாம்?

*பாவலா!*

*பொதுக்கட்டமைப்பிற்கே சிங்களப் பேரினவாதிகளின் நிலை இப்படி என்றால் இடைக்கால நிர்வாகம் என்றால் எப்படி இருக்கும்?*

*ப.பிரபா,*
*யாழ்ப்பாணம்.*

பேரினவாதிகள் பாரிசவாதம் பிடித்தவர்கள் ஆகிவிடுவார்கள் அவ்வளவுதான்.

*பாவலா!*

*சீதனக் கொடுமையில் இன்று பல பெண்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் இதனால் இந்தக் கொடுமை நீங்க வேண்டும் என்ன செய்யலாம்.*

*கு.மயூதரன்,*
*சிறுப்பிட்டி.*

சீதன-ஆதனங்களை திருமணத்திற்காக மணமகளிடம் வேதனமாக பெற விரும்புவ்கஙளும் அதை கொடுக்க விரும்புவர்களும் இருக்கும்வரை எதையும் செய்யமுடியாது. மந்த புத்தி உள்ளோரை திருத்தமுடியுமா?




" என்னவாப்போகும் பிரச்சினை......"

"சண்டை வருமோ...."

"பிறகென்ன பதினாலு நாள் கெடுவச்சாச்சே."

"பதினாலு நாள் கெடு வச்சது மட்டுமே...... உடனடியாக கூப்பிட்டு சொல்லியாச்சு"

இதைக் கூப்பிட்டு சொன்னது படமாக பேப்பரிலயும் வந்திட்டுது.

"ஏன் பேப்பரிலயே சொன்னது அது பழைய படங்கள், நீபார் சண்டைதான். உவங்கள் சொல்லுக்கேப்பாங்களே.."

"அங்காற்றா லொறி நிறைய எண்ணபரல் போகுது.... பங்கரடிக்கப் போறாங்களோ..."

" விசரா இனித்தானோ பங்கரடிக்கிற, அதெல்லாம் எப்பவோ செய்திருப்பினம். நீ என்ன செய்யப்போறாய்..... கடையுந் திருத்திக் கட்டிப் போட்டாய்.

" இனித்தானோ உதைப்பற்றி சிந்திக்கிற. ஊத்துப்புலத்துக்க காணி வேண்டி விட்டிருக்கிறன். உடன ஒரு வீட்டப் போடோணும் அவளவு தான்"

"நீயும் என்னப் போலதான். நான் திரும்பியும் பயிற்சி எடுக்கப்போறன். டச் விட்டுப் போச்சு"

"இனித்தானோ..... கெதியாப்போ....."

## படத்திற்கு மெருகூட்டுங்கள் – 127



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் – 127

..................................................................
..................................................................
..................................................................
..................................................................

பெயர் : ..........................................................
முகவரி : ..........................................................
..........................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் – 126



**சுதா**
**அந்திவானம் பதிப்பகம்,**
**யாழ்சாலை, கிளிநொச்சி**

## பரிசுக்குரிய வரிகள்

*சமாதான தேவியே...நீ இலங்கையில்*
*சமரசத்தை ஏற்படுத்தப் பாடுபட்டு அழுகிறாய்*
*ஆனால் பக்கத்தில் நிற்கும் பிக்குவோ*
*உன்னைச் சாகடிக்க சந்தர்ப்பம் பார்க்கிறான்.*

## பாராட்டுக்குரிய வரிகள்

*எதிர்கால சிட்டுக்களின் கண்முன்னே நிகழ்ந்ததை ஆழ்மனதில் எண்ணி கலைப்படைப்பால் எடுத்துரைப்பதை பார்க்கையில் உள்ளத்திலே நம்பிக்கை துளிர்விடுகின்றது இவர்கள் தலைநிமிர்ந்து வாழ்வது உறுதியென்று.*

ப.நாகேஸ்வரி,
அச்சுவேலி.

*இனமத பேதமின்றி மழலைகள் ஒன்றுபட்டு*
*நிகழ்கால முரண்பாடு அகற்ற பெரும்பாடு*
*பார்ப்பவர்க்கு இவையாவும் நடிப்பு- ஆனால்*
*இப்பிஞ்சுகளுக்கு அமைதியான நாடு வேண்டுமென்ற துடிப்பு.*

சு.சி.தமிழினி,
புதுக்குடியிருப்பு.

*பௌத்த பேரினவாதிகளின் பேடித்தனத்தை தாங்காது.*
*தாயே கதறி அழுகின்றாயோ? இன்று நேற்று அல்ல என்றும்*
*அவர்கள் அப்படித்தான். அஞ்சாதே தாயே!*
*போராடி எம் தேசம் மீட்டிடுவோம்.*

திருமதி. ரா.சுஜந்தன்,
பரவிப்பாஞ்சான்.

*பாலர் பருவத்தில் தளரா உறுதியும்*
*மனத் தைரியமும் கொண்டு*
*ஊன்று கோலுடன் நடக்கும்*
*முதுமைப் பருவ மூதாட்டியின் உணர்வுகளின் ஒத்திகையாம்.*

மு.கங்கா,
வன்னேரிக்குளம்.




## கவனியுங்கள்...



இப்படம் புதுமுறிப்புக்குளத்தினுடையதே இந்த அணைக்கட்டுப்பாதையினை மக்கள் போக்குவரத்துச்செய்ய தடை செய்து தடையும் போடப்பட்டது. ஆனால் சிலர் அந்த தடையை உடைத்து போக்குவரத்தினை மேற்கொள்ள ஆரம்பித்ததும் பெருமளவிலான ஈருளிகள் உந்துருளிகள் என்பன அணைக்கட்டின் ஒரு பக்கத்தில் புதிய பாதையினை உருவாக்கி விட்டார்கள்

இதனால் இந்த அணைக்கட்டு சேதமடைந்து காணப்படுவதனையே படத்தில் காண்கிறீர்கள்.

குளத்து நீர் நிரம்பி காணப்படும் சந்தர்ப்பங்களில் அலைகளினால் அணைக்கட்டிற்கு ஆபத்து ஏற்படும் வாய்ப்பு இருப்பதனால் சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்வது அவசியமாகிறது. கிளிநொச்சி புதுமுறிப்புக்குளத்தின் அணைக்கட்டை பாதுகாக்க சம்மபந்தப்பட்டவர்கள் முன்வருவார்களா...?

-தமிழ்-

## வடமராட்சி கிழக்கில் கரும்புலி நாள் நிகழ்வில்..





கரும்புலிகள் நாள் அன்று வடமராட்சி கிழக்கில் நடைபெற்ற பெற்றோர் கௌரவிப்பில் கரும்புலி மாவீரர் பெற்றோருக்கு ஒளிப்பேழை-இறுவெட்டினை கடற்புலிகளின் வடமராட்சி கிழக்கு அரசியல்துறைப்பொறுப்பாளர் நிலவன் அவர்களும் வடமராட்சி கிழக்கு கல்விக்கழகப்பொறுப்பளார் அண்ணாத்துரை அவர்களும் வழங்கிக்கௌரவிப்பதை காணலாம்.












இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 0[illegible] ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.